கல்கி

வைரவிழா ஆண்டு

KALKI
28.4.2002
ரூ.6.00







~~பாய்ஸ்~~

கேர்ள்ஸ்!



எனக்கு இடுப்பு வலி இருந்தது
இடுப்பு வலி, அது பழைய கதை. ஏன்னா, நான் ஜண்டு பாம் தடவறேன். இது உடனே எனக்கு ஆறுதல் தருது. ஜலதோஷம், தலைவலி இரண்டையும் ஜண்டு பாம் உடனே போக்கிடுது.
ZANDU BALM
பாம் ஒன்று. செயல் மூன்று.
www.zanduayurveda.com

மணமறந்தும்...

வேர் பந்த்துக் கிடக்கும்
குழிகளில்
கருவலம் பூக்களை
நிரப்பிச் செல்லும்
மென் காற்று.

வந்து போகும்
ஈர ஆறுதல்
இற்றுப் போன கீற்றுகளோடு
ஈரங் கலந்த தென்றல்.
வருத்தம் என்னவென்று
தெரியவில்லை
வருவதில்லை வீட்டுக்குப்
பக்கத்து வீட்டுப் பெண்.
வந்து நாளாயிருக்கிறது
நாள் தோறும்
அவள் வீட்டுக்
கொல்லையில் பூக்கும்
மல்லிகை வாசம்
மணமறந்தும் வீசும் காற்று.

— இளம்பிறை.



படம் : ஆல்பர்ட்

கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkiweekly.com
ஈ மெயில் : kalkiweekly@vsnl.com



சுமி சூப்பர் மார்க்கெட்

தமிழ் வருஷப் பிறப்பன்னிக்கு எல்லா டெய்லீஸ்லயும் அரைப் பக்கத்துக்கு ஒரு கலர் அட்வர்டைஸ்மெண்ட் வந்திருந்ததை எத்தனை பேர் கவனிச்சிங்கன்னு தெரியலே. 'லட்சுமிக்காக... உங்கள் வீட்டுக் கதவுகள் திறக்கட்டும்'னு ஹெட்டிங் போட்டு, ரொம்ப அட்ராக்டிவ்வா ஒரு வாசகம். உங்க வீட்டுல நீங்க பயன்படுத்தாத அறை ஏதாவது இருந்தால், அதை பேயிங் கெஸ்ட் அகாமடேஷனுக்குக் கொடுத்து, அது மூலமா நிறைய வருமானம் பெற நல்ல வாய்ப்புன்னு விளம்பரம் அமர்க்களமா இருந்தது. இதெல்லாம் ரொம்ப வெஸ்டர்ன் ஐடியா. இந்தியாவுல - அதுவும் நம்ம கன்சர்வேடிவ் தமிழ்நாட்டுல எங்க ஒர்க் அவுட் ஆகப் போகுது? ஜனங்களோட வரிப் பணத்தை இப்படி விளம்பரம் கொடுத்தே வீணடிக்கிறாங்களேன்னு வருத்தமா இருந்தது. அதுவும் தமிழ்நாடு டூரிசம் டிபார்ட்மெண்ட் போட்டிருந்த கண்டிஷன்கள் எல்லாம், போகாத ஊருக்கு வழி சொல்ற மாதிரி இருந்தது. வீடு கலபமா வந்து போகற லொகேஷன்ல இருக்கணுமாம். ரூம் 15'x12' இருக்கணுமாம். வெஸ்டர்ன் டாய்லெட், குளியல் அறை, வெளிச்சம், காத்தோட்டம் எல்லாம் இருக்கணுமாம். மேசை- நாற்காலி டெஃப்னட்டா இருந்தே ஆகணும். முக்கியமா கொசுத்தொல்லை இருக்கக் கூடாது. (இது நடக்கிற காரியமா?) தொலைபேசி ஒரு எஸன்ஷியல் ஐட்டம். டீவி, ஃப்ரிஜ், ரேடியோ, ஏசி இதெல்லாம் இருந்ததுன்னா இன்னும் நல்லது. முக்கியமா, நீங்க வீட்டுச் சொந்தக்காரரா இருக்கணும். தேவைப்பட்டதுன்னா விருந்தாளிகளுக்கு பிரேக்ஃபாஸ்ட் கொடுக்கணும்!

நம்பிக்கையே இல்லாம, தமிழ்நாடு டூரிசம் அதிகாரி மிஸ்டர் அழகுராஜன்ட்ட கேட்டேன், ''ஏங்க உங்க அட்வர்டைஸ்மெண்டுக்கு ரெஸ்பான்ஸ் எப்படி இருந்தது?'' ''ஓவர்வெல்மிங் ரெஸ்பான்ஸ்ங்க''ன்னார் அழகுராஜன். வீடுகள்ள இடம் ரெடின்னு நம்ப சென்னை, மதுரை, ஊட்டிலேர்ந்தெல்லாம் நிறையப் பேர் ஆஃபர் பண்ணியிருக்காங்கன்னார். சில பேர் அட்வர்டைஸ்மெண்ட்ல இருக்கற கண்டிஷன்கள்படி என்னென்ன பண்ணணுமோ அதை எல்லாம் சேர்த்துட டயம் கேட்டிருக்காங்களாம். ஜூன், ஜூலை, ஆகஸ்ட்தான் இங்க டூரிஸ்ட் சீஸனாம். அதுனால அதுக்குள்ள மானேஜ் பண்ணிடுவாங்கங்கறார் அழகுராஜன்.

''ரொம்ப இன்னவேடிவ் ஐடியாங்க இது. யுரோப்ல நடக்குது. கேரளாவுலகூட சக்ஸஸ்ஃபுல்லா நடக்குது. தமிழ்நாட்டுலயும் நடக்கணும்''னார் அதிகாரி.






• சௌம்யா

கர்னாடிக் மியூசிக் ஃபீல்ட்ல ஏதாவது புதுமை பண்ணிட்டேயிருக்காட்டி சசிகரணுக்கும், சௌம்யாவுக்கும் தூக்கம் வராது! இப்போ தடால்னு ரெண்டு பேரும் டைரக்டராய்ட்டாங்க, 'ஷாப்ரே கர்நாடிகா'ல! யோகா கிளாஸ், கர்னாடிக் மியூசிக் கிளாஸ், ஹிந்துஸ்தானி மியூசிக், மியூசிக் லேப், காஸ்மிக் எனர்ஜிதெரபி சென்டர்னு மூணு மாடிக் கட்டடத்துல அமர்க்களமா ஆரம்பிச்சிருக்காங்க. (ட்ரினிடி படம் போட்ட டீ ஷர்ட் கூட விக்கறாங்க!)

மியூசிக் தெரபின்னாலே எனக்குக் கொஞ்சம் அலர்ஜி. சில



• சசிகிரண்



விருந்தினர் சேஷன் ரொம்ப சூடாயிட்டார். 'இதெல்லாம் கர்நாடிக் மியூசிக்குக்கு எதுக்கு?'ன்னு அவர் கேள்வி. ஆனா இன்னிக்கு இருக்கிற யங்ஸ்டர்ஸ் மனசை நல்லாப் புரிஞ்சிட்டிருக்கற சௌம்யாவும் சசிகிரணும் ஆவேசம் வந்த மாதிரி ரிப்ளை பண்ணதும், சேஷன் ரொம்ப அன்ஈஸியா ஃபீல் பண்ணி, 'நான் கிளம்பறேன், நான் கிளம்பறேன்'னு சேர்ல இருந்து எழுந்துட்டார்.

அன்னிக்கு இருபது குழந்தைகள் பாடினாங்க. நல்லாவே டிரெய்னிங் பண்ணியிருக்காங்கன்னு சொல்லத் தோணிச்சு. கடைசியா ஜப்பான் பொண்ணு யமடா, தீட்சிதர் கிருதி ஒண்ணு, வெஸ்டர்ன் மெட்டுல பாடினா. நம்ப சூப்பர் ஸ்டார் பாத்தா 'பாபா'ல ஒரு ரோல் கொடுத்தாலும் கொடுத்துருவாரு!

பெரிய வித்வான்களே, மியூசிக்னால வியாதிகளை குணப்படுத்தலாம்னு ப்ரெக்ளெய்ம் பண்ணிட்டு, 'சுருதி' மாதிரி பத்திரிகைக்காரங்க குடைஞ்சு எடுத்தவுடனே அசடு வழிஞ்சிருக்காங்க. அதனால சௌம்யா - சசிகிரணுக்கும் இதெல்லாம் நெசசரியான்னு கேட்டேன். ரிசர்ச் பண்றதுல என்ன தப்புன்னு எதிர்கேள்வி வந்தது. டாக்டர் பி. ராமமூர்த்தி இந்த டிவிஷனுக்கு ஹெட்டாம். நாடி நரம்பை எல்லாம் பிடிச்சுப் பார்த்தவர் பி.ஆர். அதனால அவரோட தலைமையிலே சில மியூசிஷியன்ஸ் சேர்ந்து ஆராய்ச்சி பண்ணி, ஸ்ட்ரெஸ் ரிலீஸ், ப்ரீத்திங் எக்சர்சைஸ் எல்லாம் இன்ட்ரொட்யூஸ் பண்ணி, இருக்காங்களாம். இப்பவே கார்ப்பரேட் சிஇஓ எல்லாம் வர ஆரம்பிச்சுட்டாங்களாம். சிடி-ராம், ஆடியோ-வீடியோ காஸட்னு கர்னாடிகா டாட்காம் சக்கைப்போடு போடறாங்க. கர்னாடிகா ஃபங்கஷன்ல பெப் ஆல்பம், குளோபல் மொபைல் குருகுலம், சைபர் வித்யாலயா, மியூசிக் ஃபர் ஆல்-னு எல்லாம் பேச ஆரம்பிச்ச உடனே, தலைமை

தொசு இல்லாத வீடு!

போரூர் லேக்ல மீன் எல்லாம் செத்துக் கிடந்ததைப் படிச்சதும் முதல்ல மனசைப் பிழிஞ்சுது. அப்புறம் வயத்தைப் பிழிஞ்சுது. ஆமா! அங்கிருந்துதானே சிடில ஒரு போர்ஷனுக்கு ட்ரிங்க்கிங் வாட்டர் சப்ளை ஆறது! சர்ஃபேஸ் ஹீட்ல மீன்கள் இறந்து போயிருக்கும்னு சொல்றாங்க. அதிகாரிங்க கிட்ட கேட்டா யாரும் சரியான பதில் சொல்ல மாட்டேங்கறாங்க. வெறும் சூட்டுனாலயே மீன்கள் எப்படி சாகும்? தண்ணியில இருக்கிற குளிர்ச்சி எதுக்கு இருக்கு? இப்போ அமைச்சரே ஆன்சர் பண்றார்: கவனிக்கப் 'போறம்'ங்கறார். இனிமே கொஞ்ச நாளைக்கு மீனைப் பிடிக்கறபோது . சாரி, தண்ணியைப் பிடிக்கறபோது நோஸைப் பிடிச்சுட்டுத்தான் பிடிக்கணும். பொல்யூஷன் கன்ட்ரோல் போர்டும், மெட்ரோ வாட்டர் போர்டும் மூச்சைப் பிடிச்சுக்கிட்டு ஏதானும் பண்ணினா இந்த சுமி அவங்களுக்கு தாங்க்ஸ் லெட்டர் அனுப்பத் தயார்!

— சுமி



தாளத்தில் சிம்பொனி!

'ராகாலயா' என்று எழுதப்பட்டிருக்கும் வீட்டின் கதவு, கொஞ்சமாய்த் திறந்திருக்க... உள்ளேயிருந்து சுழன்றடிக்கும் சூறாவளிக்காற்றின் உய்ய்-உஷ்ஷ்ஷ்......ஓசை மாறிமாறிக் கேட்க... த்ரில்லோடு நுழைகிறோம். மெல்லிய மின் ஒளியில் தாள வாத்தியங்களுக்கு நடுவே நின்றிருந்தார் டிரம்மர் நாகி! வாத்தியங்கள் வழியே வழிந்த கர்நாடகக் கீர்த்தனைகளுக்கு, மேற்கத்திய ஜாஸ்கிட் வாத்தியங்கள் கொண்டு, கடந்த ஆண்டு மியூசிக் அகாடமியில் டிரம்ஸ் வாசித்து இசைக் கலவையில் ஒரு புரட்சி செய்த அதே நாகிதான்!

“வெளிநாடுகளுக்கு இசை நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் போதெல்லாம் கிடைக்கிற சன்மானத்திற்கு அந்தந்த நாடுகளின் பாரம்பரிய தாளவாத்தியக் கருவிகளை வாங்கி வந்து விடுவேன். இப்படி வாத்தியங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனதால், எனது வாத்தியங்களுக்காகவே இந்த வீட்டை வாங்கினேன்'' என்று சொல்லும் நாகியின் 'ராகாலயா'வில் இருக்கும் தாளக் கருவிகளை எண்ண முயற்சி செய்து தோற்றுப் போனோம். கொட்டாங்குச்சி, கிலுகிலுப்பையில் தொடங்கி, குடுகுடுப்பையைக் கூட விட்டு வைக்கவில்லை நாகி. தவிர, இவரே ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கும் தாளவாத்தியங்களின் எண்ணிக்கை மட்டும் இருபது. அதில் ஒன்று மணிக்கயிற்றில் மேலிருந்து கீழாக கட்டித் தொங்கவிடப்பட்ட வெண்கல கால் நடைமணிகள். கட்டை விரல் அளவு முதல், கைப்பிடி அளவு வரை உள்ள இந்த மணிகளின் தோரணத்தில் டிரம் ஸ்டிக் கொண்டு அவர் எழுப்பும் மெல்லிய தாளம் நம்மைத் தியானிக்கத் தூண்டுகிறது. உள் மற்றும் வெளி நாடுகளில் இருந்து தாளவாத்தியங்களை வாங்கி வந்து அவற்றைத் தாங்க வைத்து விடுவதில்லை இவர். எத்தனை பழைய வாத்தியம் என்றாலும் அதை வாசிக்கக் கற்றுக் கொண்டு, நிகழ்ச்சிகளிலும் அவற்றை லைவ்வாக வாசித்து ரசிகர்களைச் சந்தோஷத்தில் ஆழ்த்துவதுதான் இவரது ஸ்டைல்!

பொதுவாக டிரம்மர்கள் ஜாஸ்கிட் எனப்



படும் வுட் டிரம்ஸ், ஆக்டோபன்ஸ் கான்செட் டிரம்ஸ் உள்ளிட்ட சில தாளவாத்தியங்களை வாசிப்பதுதான் மரபு. இந்த வாத்தியங்கள் எல்லாவற்றையும் ஒரே கருவியில் உள்ளடக்கிய எலக்ட்ரானிக் தாள வாத்தியமான 'ஹாண் சோனிக்' என்ற ஒன்றை வைத்துக் கொண்டே பல பெரிய டிரம்மர்களும், அமெச்சூர் டிரம்மர்களும் இப்போதெல்லாம் ஒப்பேற்றி விடுகிறார்கள். ஆனால் நாகி, சினிமா இசை என்றாலும், லைவ் இசைக் கச்சேரி என்றாலும் ரெடிமேட் தாளங்களைத் தொடுவதே இல்லை. ஒரு கச்சேரியில் குறைந்த பட்சம் ஐம்பது வாத்தியங்களை எடுத்துச் சென்று வாசிப்பதை வழக்கமாகவே வைத்திருக்கிறார்.

"தாளம் என்பது நமது 'லப்டப்' இதயத் துடிப்பைப் போல இயற்கையானது. அது வாசித்தலில் வெளிப்படும்போதே முழு ஜீவனாக இருக்கும்" என்று சொல்லும் நாகி, வுட் பிளாக்ஸ், சைனீஸ் சைம்ஸ் போன்ற பல பெரிய தாள வாத்தியங்களைச் சிரமம் பார்க்காமல் வெளியே எடுத்துவந்து கச்சேரிகள் வாசிக்கிறார்.

"எலக்ட்ரானிக் கருவிகளைப் பயன்படுத்தினாலும் வாத்தியங்களை நேரடியாகவே வாசிக்க விரும்புகிறேன். காரணம் மின்சாரம் இல்லையென்றாலும் கூட வாசிக்கலாம் இல்லையா?" என்று கேட்கும் நாகியின் தற்போதைய இசை முயற்சி 'குளோபல் ரிதமிக் எக்ஸ்படிஷன்'!

"ஒவ்வொரு நாட்டிலும் பிரபலமான தாள வாத்தியங்களைக் கொண்டு ஒரு உலகளாவிய ரிதமிக் சிம்பொனியை உருவாக்குவது! இது முழுக்க முழுக்க புதிய முயற்சி" என்ற நாகி, சமீபத்தில் இங்கிலாந்திலிருந்து வாங்கி வந்திருக்கும் வாத்தியம் 'எக்ஷேக்கர்ஸ்' ஒரு கோழி முட்டை தோற்றத்திலிருந்த அதனுள்ளே சின்னஞ்சிறு கூழாங்கற்கள். அவர் அதை லாவகமாய் அசைத்து அசைத்து இசை எழுப்ப 'சிக் சிக்' 'சிக் சிக்' என்ற ஒலி நம் காதுகளை கிச்சுகிச்சு மூட்டியது!

சந்திப்பு : ஆர்.சி. ஜெயந்தன்
படங்கள் : வர்ஷா



• அஞ்சலியும்...



● குமரி லிங்கேஷ், மேலகிருஷ்ணன் புதூர்.

? தமிழக அரசுக்கு முப்பத்தாறாயிரம் கோடி ரூபாய் கடன் இருக்கிறது. மாதம் முந்நூற்றித் தொண்ணூறு கோடி ரூபாய் வட்டி மட்டுமே கட்ட வேண்டியிருக்கிறது. மத்திய அரசின் தவறான அணுகுமுறைதான் காரணம் என்று சட்டசபையில் அமைச்சர் பொன்னையன் குற்றஞ்சாட்டியுள்ளாரே?

! மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகள் ரொம்ப உயர்வானவை என்று கூறிவிட முடியாது. அதே நேரத்தில் தனது வரலாறு காணாத வரி விதிப்புக்குப் பொன்னையன், மத்திய அரசுமீது பழிபோடவும் முடியாது. அது தனது திறமையின்மைக்குத் திரைபோட முயற்சி செய்வதாகும்.

● வே. முருகேசன், சென்னை - 88

? பிரபாகரன் வாயைத் திறக்கிறார் என்றதும் திருபர் பட்டாளமே கிளி நொச்சிக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறதே? பிரபாகரன் மீது அவ்வளவு நம்பிக்கையா?



• ... அட்வைஸும்!

! சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி பற்றிய செய்தித் தொகுப்பு தருவதில் நாம் பின்தங்கிவிடக் கூடாது என்ற உணர்வுதான் பல்வேறு மீடியா நிருபர்களையும் இயக்கியதேயன்றி வேறு காரணமில்லை.

● எம்.சம்பத், வேலாயுதம் பாளையம்

? 'எப்படி பயப்படுவதென்றே எனக்குத் தெரியாது' என்று ஜெயலலிதா கூறுகிறாரே?

! அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்!

● பி.நடராஜன், அன்னூர்

? வெஸ்ட் இன்டீஸ் மண்ணில் இந்திய அணி சாதிக்குமா?

! தேவையான போதெல்லாம் மழை பெய்து உதவினால் சாதித்துவிடுவார்கள்!

● ஆர்.வஸந்தா, திருவனந்தபுரம் ★

? சபர்மதியில் நடந்த சமாதானக் கூட்டத்தில் பி.ஜே.பி.க்காரர்கள் மேதா பட்கரைத் தாக்க முயன்றதைப் படமெடுத்த என்.டி.டி.வி. காமிராக்காரர் பிரணவ் ஜோஷியை, போலீஸ் டெபுடி கமிஷனர் வீ.எம்.பார்கி தலையில் அடித்தது காட்டுமிராண்டித் தனத்தின் உச்சம் அல்லவா?



• அறிவிப்பும்...

• ... ஆனந்தமும்!



! தவறு செய்யவும் மனித உரிமை மீறல்களை நிகழ்த்தவும் காவல் துறைக்கு அரசு அங்கீகாரமும் ஆசியும் வழங்குவதால்தான் போலீஸ் அதிகாரிகள் தறிகெட்டுப் போகிறார்கள். இவ்விஷயத்தில் தமிழகம் ஏற்கெனவே வரலாறு படைத்துள்ளதைப் பார்த்தோமே!

● ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர்

? 'எழுத்தாளர்கள் கு.ப.ராஜகோபாலன், புதுமைப்பித்தன் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்படும்' என்று தமிழக அரசு அறிவித்துள்ளது குறித்து...?

! இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

● இரா. திலீப், திருச்சி - 14

? 'கல்வியின் பலம் கதை, கட்டுரைகள். பலவீனம் - அரசியல்' என்கிறார் என் நண்பர் சரியா...?

! கதைகள் கற்பனையாக எழுதப்படுகிறவை. ஆனால், அரசியல் நெஞ்சம் வலிக்கும் உண்மை. உண்மைகளை ஏற்கும் மனவலிமை இல்லாதவர்களுக்குப் பலவீனம் எதிர்த் தரப்பில் இருப்ப



• பயமும் பாதுகாப்பும்

பயப்படத் தெரியாது என்கிறாரே ஜெ..?



* தெரிந்ததும் தெரியாததும்!

தாகத்தான் தோன்றும்.

● **ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம்**

? தமிழக பட்ஜெட் மீதான விவாதத்திற்குப் பதிலளித்து நான்கு மணி நேரம், நாற்பத்தைந்து நிமிடம் அமைச்சர் பொன்னையன் சட்டசபையில் பேசியது பற்றி...?

! பின்னே, கொஞ்சமாகவா வரி போட்டிருக்காங்க? அத்தனைக்கும் சமாதானம் சொல்லியாகணுமே! போதாக் குறைக்கு அம்மாவைப் புகழவும் நேரம் ஒதுக்கணும்.



* உதவும் திட்டம்!



* வரியும் வாழ்த்தும் !

● **க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்**

? 'எங்களுக்கு உறவு ஆர்.எஸ்.எஸ்.ஸுடன் மட்டும்தான்; மற்ற எல்லா கட்சிகளுடனும் நட்புதான்' என்று பகிரங்கமாகச் சொல்லியிருக்கிறாரே இல.கணேசன்?

! 'அப்படியானால், 'உங்களுடன் நட்பும் வேண்டாம்; உறவும் வேண்டாம்' என்று மக்கள் முடிவெடுக்க வேண்டும்.

● **வி.எஸ்.கோவிந்தன், மதுரை - 7**

? ஒரே நபர் இரண்டு முக்கிய பொறுப்புகளில் இருக்கும்பொழுது சிறப்பாகச் செயல்பட முடியுமா..?

! அது தகுதியையும் ஆற்றலையும் பொறுத்த விஷயம். சட்டம் தடை செய்யாத வரை சிலருக்குச் சாத்தியமே.

● **உமரி பொ.கணேசன், மும்பை - 37** ❒

? பத்திரிகையாளர்கள் சந்திப்பின் போது பிரபாகரனுக்கு ஏற்பாடு செய்திருந்த பாதுகாப்பு பிரமிப்பு ஏற்படுத்துவதாக இருந்ததே?

! உயிருக்கு இன்னும் பயப்படுவதால்தானே இத்தனை பாதுகாப்பு! அவ்வளவுதூரம் பயப்படும் அளவுக்கு வன்முறையில் பிறரை ஏவிவிட்டு வயிற்றெரிச்சலை சம்பாதித்துள்ளார். அமைதிப்பாதைக்குத் திரும்புவதாகச் சொன்னாலும் மனம் இன்னும் வன்முறையிலே வேரூன்றியிருக்கிறது என்பதையே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் அன்று அவர் விட்டுக் கொடாமல் பேசியதும் உணர்த்துகின்றன.

● **எல்.எம்.அபிதா, திருவண்ணாமலை**

? விஜயகாந்த் அரசியலுக்கு வரலாமா? கூடாதா?

! மோனலுக்கு அஞ்சலி செலுத்த வந்தார் விஜய்காந்த். வந்தவர், இரங்கல் தெரிவித்துவிட்டு நகரக் கூடாதா? 'ஆண்கள் கலைஞரையும் பெண்கள் ஜெயலலிதாவையும் பார்த்து தன்னம்பிக்கை பெற வேண்டும்; தோல்வியில் துவளக்கூடாது' என்றெல்லாம் விஜயகாந்தானந்தாவாகி அட்வைஸ் வழங்கியதோடு, அஞ்சலிக் கூட்டத்தில் அரசியல் பேசியதைப் பார்த்தால் வந்தேவிட்டார் போலத்தான் இருக்கிறது.

● **கே.சங்கர், கோபி**

? சினிமா தியேட்டர்களில் டிக்கெட் கட்டணத்தை 75 சதவிகிதம் வரை உயர்த்திக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளதே?

! ஏற்கெனவே காற்றாடிக் கொண்டிருக்கும் தியேட்டர்களை இழுத்து மூட வைக்க, இதைவிடப் பிரமாதமான யோசனை இருக்குமா என்ன?

● **ஜெ. ஜெயசுப்ரமணி, விராளிப்பட்டி**

? ஆஸ்கரில் லகானுக்கு விருது கிடைக்காவிட்டாலும் மலேஷியாவில் நடந்த விழாவில் ஏழு விருதுகளைப் பெற்றிருப்பது எதைக் காட்டுகிறது?

! ஒலிம்பிக்கில் ஜெயிக்காவிட்டாலும் ஏஷியாடில் ஜெயித்த திருப்தியைத் தருகிறது.

❒ ரூ.100 பரிசு பெறுபவர் :
உமரி பொ. கணேசன்,
ஸ்ரீ நாராயணா ஸ்டோர்,
A-114, மோதிலால் நேரு நகர்,
ஆன்டாப் ஹில், மும்பை - 400 037.

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
ஆர். வஸந்தா,
C/o எஸ்.ராஜகோபாலன்,
MF 4/320, விருந்தாவன் ஹவுசிங் காலனி,
பட்டோம், திருவனந்தபுரம் - 695 004.

~~பாய்ஸ்~~ கேர்ள்ஸ்!

ஷங்கரின் 'பாய்ஸ்' பற்றித்தான் கோடம் பாக்கத் தெருக்களில் பேச்சொலி. 'பாய்ஸ்' யோசனையில் இருந்தபோது பிரபலங்களின் மகள்கள் பற்றிய செய்திகள் கிடைத்தது- அதாவது கேர்ள்ஸ்!

திவ்யாவும், அமிதாவும் கார்ட்டூனிஸ்ட் மதனின் பெண்கள்.

"நான் என் பெண்களுக்கு முழுச் சுதந் திரம் கொடுத்திருக்கிறேன். என் கருத்துக்கள் எதையும் அவர்கள்மீது திணிப்பதே கிடையாது" என்கிறார் மதன்.

"திவ்யாவும், அமிதாவும் தோழிகள் மாதிரி தான். ஆனால், குணங் களைப் பொருத்தமட்டில் ஜஸ்ட் நேரெதிர்" என்கிறார் திருமதி மதன்.



* அமிதா, திவ்யா

பேச ஆரம்பித்தார்கள் திவ்யாவும், அமிதாவும்.

அமிதா : நான், எதுவானாலும், எப்படி சரியாய்ச் செய்ய வேண்டும் என நினைக் கிறவள். என் அலமாரிகூட நீட்டாக இருக் கும். திவ்யா அப்படியில்லை. டிசிப்ளின் போதாது.

திவ்யா : எனக்குக் காமெடி படங்கள் தான் பிடிக்கும். அமிதாவுக்கு ஹாரர் - த்ரில் லர்கள் என்றால் அல்வா! பிசாசுபோல பார்ப்பாள்.

அமிதா : இவள் பயந்தாங்கொள்ளி. ஒரு நாள் ராத்திரி ஒரு சைக்கோ படம் பார்த்துக் கொண்டிருந்தோம். க்ளைமாக்ஸில் நான் ரொம்ப இன்வால்வ் ஆகி, சுற்றம் சூழ படம் பார்த்துக் கொண்டிருக்க, இவள் பயந்து, அலறி, அழுது ஆர்ப்பாட்டம் பண்ணி யதை மறக்கவே முடியாது.

திவ்யா : எனக்கு ஃபோட்டோ கிராபியில் ரொம்ப இன்ட்ரஸ்ட்.

அமிதா : எனக்கு, அப்பாபோல படம் வரைவதில் ஆர்வம் அதிகம்.



* அனிதா


திவ்யாவுக்கு விளம்பரத் துறையிலும், அமிதாவுக்குப் பத்திரிகை அல்லது மீடியாவிலும், வேலை பார்க்க வேண்டும் என்பது லட்சியம்.

• ஸ்வேதா





• சரண்யா



• ஹேமா

எக்ஸ்னோரா நிர்மலின் மகள் அனிதா, கடந்த ஐந்து வருடங்களாக அமெரிக்காவில் இருக்கிறார். இங்கே படித்தது சர்ச் பார்க் கான்வென்ட்டில். அதன்பின் எஞ்சினீயரிங் முடித்துவிட்டு, அமெரிக்காவுக்குப் போய்விட்டார்.

அங்கே வேலையும் பார்த்துக் கொண்டு படித்துக் கொண்டும் இருக்கிறார். தினம் மாலை நாலு மணி வரை ஆபீஸ். அதன்பின் காரை எடுத்துக் கொண்டு, நூறு மைல் பயணம் செய்தால் பல்கலைக் கழகம். இரவு கிளாஸ் முடிந்தபின் மறுபடி கார் பயணம். நடு இரவில் வீடு திரும்புவது வழக்கமாம்.

இதற்கிடையே படிக்க நேரம் கிடைக்காது. அதற்கும் தானாகவே ஒரு தீர்வு கண்டு பிடித்துக் கொண்டார். காரில் பயணம் செய்கிற இரண்டு மணி நேரத்தில் ஏதோ இசையைக் கேட்பதற்குப் பதிலாக பாடம் சம்பந்தப்பட்ட கேஸட்களைக் கேட்பார்.

ஒரு விஷயத்தில் மட்டும், அனிதாவுக்குச் சட்டென்று கோபம் வந்துவிடும். ஆமாம்! யாரும் இந்தியாவைப் பற்றி, கேலியாக, கிண்டலாகப் பேசிவிடக் கூடாது. பேசினால் போச்சு! இந்தியாவின் அருமை பெருமைகள், இடர்பாடுகளை எதிர்த்து எப்படி முன்னேறியிருக்கிறோம் என்று குட்டி லெக்சரே அடித்து விடுவாராம்!

செட்டிநாடு வித்யாஷ்ரம் பள்ளியில் பத்தாம் வகுப்பு முடித்துள்ள ஸ்வேதா பி.சி.ஸ்ரீராமின் மகள்.

“எட்டாம் வகுப்புவரை எனக்குப் பிடிக்காத சப்ஜெக்ட் கணக்கு. ஆனால் விருந்தா என்கிற என் எட்டாம் வகுப்பு கணக்கு டீச்சர்தான், கணக்கின்மீது ஆர்வம் ஏற்படுத்தியவர். இப்போது கணக்குதான் என் பேவரிட் சப்ஜெக்ட்.

“எனக்கு ஒன்றரை வருட காலம் கர்நாடக இசை கற்றுக் கொண்ட அனுபவம் உண்டு. ஆனால், அதன்பின் தொடர முடியாது போய்விட்டது. இப்போது மேற்கத்திய இசை ரொம்பப் பிடிக்கிறது.

“என் பெஸ்ட் பிரெண்ட்ஸ் கிரனாவும், குரு சரணும். போன வருடம், என் ஸ்கூலிலிருந்து இருபத்தைந்து பேர். சிங்கப்பூர் டூர் போயிருந்தோம். அங்கே இருந்தபோது குரு சரணுக்குப் பிறந்த நாள் வந்தது. நள்ளிரவில் அதைக் கொண்டாடுவது என்று தீர்மானித்தோம்.

“இரவு, பதினோரு மணிக்கு ஓட்டலிலிருந்து புறப்பட்டு (எங்களை அழைத்துச் சென்ற மிஸ்களுக்குத் தெரியாமல்தான்) முக்கால் மணி நேரம் அலைந்து, ஒரு பிறந்த நாள் கேக் கிடைக்காமல், கடைசியாக, ஒரு பேக்கரியில் பதினாறு துண்டு கேக்குகளை வாங்கி, அவற்றை அழகாக அடுக்கி வைத்து அதையே மறுபடி கட் பண்ணி கொண்டாடியதை மறக்கவே முடியாது” என்கிறார் ஸ்வேதா.

ஸ்வேதாவுக்கு ஒரு தம்பி. பெயர் ஸ்கந்தன். ஏழாம் கிளாஸ் படிக்கிறான்.

உமா பத்மநாபனின் மகள் சரண்யா, பிளஸ் டூ முடித்துவிட்டு, கல்லூரியில் கால் வைக்கக் காத்திருக்கிறார். “ரொம்ப ஜாலியான டைப் நான். பள்ளிக் கூடத்தில் மாணவத் தலைவி. நிறைய பேச்சுப்

போட்டிகளில் பங்கேற்பேன். ஸ்கூலில் எந்த நிகழ்ச்சியானாலும், தொகுத்து வழங்க என்னைத்தான் கூப்பிடுவார்கள்" என்கிறார்.

"டீ.வி. சானல்களிலிருந்துகூட தொகுப்பாளினியாகப் பணியாற்றக் கூப்பிடுகிறார்கள். எனக்கு இன்ட்ரஸ்ட் இல்லை என்று மறுத்து விடுகிறாள். ஏன், மறுக்கிறாய்? என்று நான் கேட்டால், எனக்குப் பிடிக்கவில்லை என்கிறாள். என்ன காரணத்துக்காகப் பிடிக்கவில்லை? என்று கேட்டால். பிடிக்கவில்லை என்பதே ஒரு காரணம், அதற்குப் போய் இன்னொரு காரணம். கேட்டால் என்ன சொல்ல? என்று என்னையே மடக்குகிறாள்" என்று சொல்லிச் சிரிக்கிறார் உமா பத்மநாபன்.

சரண்யாவுக்குப் பிடித்த டிரஸ் ஜீன்ஸ், டீ ஷர்ட். "மாஸ் கம்யூனிகேஷன் அல்லது சட்டம் படிக்க வேண்டும். அப்புறம் எம்.பி.ஏ. படிக்க அயல்நாடு போக வேண்டும்." என தம் எதிர்காலம் குறித்து டிரெய்லர் காட்டுகிறார் சரண்யா.

ஓய்வு பெற்ற காவல் துறை டி.ஜி.பி. ஸ்ரீபாலின் மகள், ஹேமாவுக்குப் பரதம், மேற்கத்திய டான்ஸ், பாட்டு நீச்சல், டிரைவிங், கராத்தே, குதிரை ஏற்றம் என்று ஏகப்பட்ட விஷயங்கள் தெரியுமாம். மிகக் குறைந்த வயதில் தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றவர் ஹேமாதான்.

தூர்தர்ஷன் காலம் தொட்டே, டீ.வி. நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிக் கொண்டிருப்பவர் ஹேமா. தஞ்சை தமிழ் மாநாட்டின்போது, இவர் வழங்கிய பரத நாட்டிய நிகழ்ச்சியைப் பார்த்துவிட்டு தன் கைப்பட, பாராட்டுக் கடிதம் எழுதினாராம் முதல்வர் ஜெ.

டீ.வி.யிலும் சரி, சாதாரணமாக பேசிக் கொண்டிருக்கிறபோதும் சரி, ஹேமாவின் ஸ்பெஷாலிடி 'கடி' ஜோக்ஸ்.

"கல்யாணம் ஆகாத பெண் கீழே நின்று கொண்டிருக்கிறாள். இதை ஆங்கிலத்தில், ஒரே வார்த்தையில் எப்படிச் சொல்லலாம்?"

"மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்."

"நீ சின்னக் குழந்தை" இதைத் தமிழும், ஆங்கிலமும் கலந்து ஒரே வார்த்தையில் எப்படிச் சொல்லலாம்?

"Kid நீ!"

இது கடியில்லை; குதறல்டா சாமி!

— மௌலி

படங்கள் : யோகா

பிறவிப்பிணி நீக்கும் திருஅண்ணாமலையில் பௌர்ணமி கிரிவலத்தில் அன்னதானம் செய்ய அழைக்கிறோம்!

பேரன்புடையீர்! வணக்கம். அருள்மிகு ஸ்ரீ அருணாசலேஸ்வரர் தங்களுக்கு அனைத்து நலன்களையும் தந்தருளப் பிரார்த்திக்கிறோம்.

ஆன்மீக அன்னதான அறக்கட்டளையின் நான்காம் ஆண்டில் தொடர்ந்து அன்னதான சேவை!

● இமயமலையை விட காலத்தால் மூத்ததாகும் தெய்வத்திருமலையான நினைத்திடு அண்ணாமலை. ஒளி ஒன்றே கண்கண்ட கடவுளின் வடிவம் என்பதை உணர்த்தும் ஆதித் திருத்தலமாக விளங்குவது திருஅண்ணாமலை. திருஅண்ணாமலையாரை 14 கி.மீ.வலம் வந்தால் ஈரேழு 14 லோகங்களையும் சுற்றிய பலன் தரும் திருத்தலம் திருஅண்ணாமலை ஒன்றே ஆகும். இத்தகைய சிறப்புவாய்ந்த திருஅண்ணாமலையில் கிரிவலம் வரும் இறை அடியார்களுக்கும், பக்தர்களுக்கும் மேலும் அங்குள்ள ஆதரவற்ற முதியோர்கள், உடல் ஊனமுற்றோர்கள், கண்பார்வையற்றோர்கள் ஆகிய அனைவருக்கும் பௌர்ணமி அன்று இரவு அன்னதானம் சிறப்பான முறையில் செய்யப்படுகிறது. இந்தப்புனித அன்னதான இறைபணியில் பங்குகொண்டு தாங்களும், தங்கள் சந்ததியினரும் எல்லாம்வல்ல ஸ்ரீ உண்ணாமுலை சமேத அண்ணாமலையாரின் அரும்பெரும் தெய்வீக அருளையும் பெற இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

தாங்கள் எதை நினைத்து அன்னதானம் செய்ய விரும்புகிறீர்கள் என்பதை தெரிவித்தால் அதன்படி நாங்கள் பௌர்ணமி அன்று அன்னதானம் செய்து பிரசாதத்துடன் ஸ்ரீ அருணாசலேஸ்வரர், ஸ்ரீ உண்ணாமுலையம்மன் படத்தையும் தங்களுக்கு அனுப்பி வைக்கிறோம்.


❖ பிறந்தநாள் ❖ திருமணநாள் ❖ முன்னோர்கள் திதி நாள் ❖ வாழ்க்கையில் உயர்வு ❖ தொழிலில் முன்னேற்றம் பெற ❖ நிரந்தர வேலை பெற ❖ கல்யாண பாக்கியம் பெற, நல்ல வரன் அமைய ❖ புத்திர/பிள்ளை பாக்கியம் பெற ❖ கணவன் - மனைவி இடையே ஒற்றுமை நிலவ ❖ கஷ்டங்களும், கடன்களும் எதிர்ப்பு இடையூறுகளும் நீங்க ❖ புதிய முயற்சிகளில் முன்னேற்றமும் வெற்றியும் உண்டாக ❖ புதிதாக தொழில் தொடங்க ❖ புதிதாக வீடு/ மனை பெற ❖ வாகன யோகம் பெற ❖ நல்ல சிந்தனை பெற ❖ சிந்தனை வளம் பெருக ❖ உடல் ஆரோக்கியம் பெற ❖ நீண்ட ஆயுள் பெற ❖ தெய்வசக்தியுடன் திகழ ❖ குடும்ப ஒற்றுமை பெற ❖ உலக ஒற்றுமை பெற ❖ சமுதாய ஒற்றுமை பெற ❖ தேச ஒற்றுமைபெற ❖ எல்லா உயிர்களும் இன்புற்று வாழவும்.

- தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு ஆன்மீகம் மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு ஆன்மீகம் மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு ஆன்மீகம் மாத இதழ் பத்து ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

அன்னதானத்திற்கு நன்கொடையாக ரூ.500, ரூ.1000, ரூ.5000 அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு காசியில் பூஜிக்கப்பட்ட ஸ்ரீ அன்னபூரணி அன்னையின் விக்கிரகமும், ஸ்ரீ அருணாசலேஸ்வரரின் வண்ணப்படமும், சிறிய அளவில் சிவபுராண புத்தகமும் அனுப்பி வைக்கப்படும்.

★ ரூ.5000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக, ஒவ்வொருமாதமும் பௌர்ணமி அன்று திருஅண்ணாமலையில் அன்னதானம் செய்து தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு பிரசாதமும் 'ஆன்மீகம்' மாத இதழும் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் தாங்கள் விரும்பும்போது சந்ததியரின் முகவரிக்கும் மாற்றம் செய்து தருகிறோம். ஆன்மீக அன்பர்கள் ஒவ்வொருவரின் பூஜை அறையும் புனிதம் பெற வேண்டும் என்ற இறை சிந்தனையோடு ரூ.5000 செலுத்துபவர்களுக்கு 1024 பக்கங்களுடன் கூடிய பெரிய அளவில் உள்ள ஸ்ரீமத் பகவத்கீதை புத்தகத்தை (தமிழில்) அனுப்பி வைக்கிறோம்.

● நன்கொடை அனுப்பும் சிவநேசச்செல்வர்கள் (Aanmeeka Annadhana Charitable Trust Chennai - 4) என்ற பெயரில் Cheque /D.D/ M.O. மூலம் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அன்னதான திருப்பணிகளை நலம்தரும் இறைபணி சேவைகளாக 'ஆன்மீக அன்னதான அறக்கட்டளை' ஆற்றிவர தங்களது ஒத்துழைப்பை என்றும் பேரன்புடன் வேண்டுகிறோம்.



ஸ்ரீ அருணாசலேஸ்வரர்

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி வரிவிலக்கு உண்டு.


Cheque / D.D / M.O அனுப்ப வேண்டிய முகவரி :

ஆன்மீக அன்னதான அறக்கட்டளை

AANMEEKA ANNADHANA CHARITABLE TRUST (Regd.)

68, Nadu Street, (Opp. Sri Kapaleeswarar Temple) Mylapore, Chennai - 600 004.

Tel : 4959302 Fax : (044) 4616311 E - Mail: siva siva @vsnl.net



ஸ்ரீ உண்ணாமுலையம்மன்

சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை!

கல்கி வைரவிழா

தமாஷ் ஹைகூ

கவிதைப் போட்டி!

தமாஷ் ஹைகூன்னாலும் சும்மா தமாஷுக்கு எழுதிப் போட முடியாதுங்க..!

பாசாங்கில்லாத, உருவகம், உவமையில்லாத நேரடிக் கவிதை... வருணனை, கட்டுப்போட்டாலும் கிடையாது. பிலாசபி போதனை எல்லாம் இல்லை. ஒரு படிமம் அல்லது ஒன்றுடன் ஒன்று உதவும் இரண்டு படிமங்கள். அத்தனைதான். அதிலிருந்து இணைந்து எழும் எண்ணங்கள் வாசகன்பாடு!

- ஹைகூவுக்குச் சுஜாதா வரைந்துள்ள இலக்கணம் இது. பாரம்பரிய ஜப்பானிய மூன்று வரி ஹைகூக்கள் இப்படித்தான் இருக்கும்.

● போட்டிக்கு நீங்கள் அனுப்பும் ஹைகூவும் இப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால், எண்ணங்களுடன் கூடவே சிரிப்பையும் ஏற்படுத்த வேண்டும். பின்னே முதல் பரிசு ரூ.1000/- என்றால் சும்மாவா! இரண்டாம் (ரூ.750/-), மூன்றாம் (ரூ.500/-), ஆறுதல் பரிசுகளும் (ரூ.250/-) உண்டு.

● சொந்தக் கற்பனை என்பதற்கான உறுதி மொழியுடன் கவிதைகள் வந்து சேரக் கடைசித் தேதி : ஜூன் 15.

● ஒருவர் பல கவிதைகள் அனுப்பலாம். தேர்வாகாதவற்றைத் திருப்பியனுப்ப போதுமான தபால் தலைகள் இணைக்க வேண்டும்.

● முடிவு வெளியாகும்வரை கடிதப் போக்குவரத்து, தொலைபேசி விசாரிப்புகள் கூடாது.


● உறையின் மேல் **'அமரர் கல்கி நினைவுக் கவிதைப் போட்டி 2002'** என்று கட்டாயம் குறிப்பிட்டு

ஆசிரியர் - கல்கி
47, ஜவஹர்லால் நேரு சாலை,
சென்னை - 97

என்ற முகவரிக்கு அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. நடுவர்கள் நிச்சயிக்கும் போட்டி முடிவும் பரிசுக் கவிதையும் ஆகஸ்ட் 4 ஆண்டு மலரில் வெளியாகும்.

பரிசுகள் கல்கி வைர விழா நிகழ்ச்சி மேடையில் ஆகஸ்ட் 4, 2002 அன்று வழங்கப்படும்.

கல்கி வைரவிழா சிறுகதைப் போட்டியும் உண்டு! விவரங்களுக்கு அடுத்த இதழ் அல்லது 14.4.02 இதழ் பார்க்கவும்.





2002 ஏப்ரல் 28
சித்ரபானு சித்திரை 15
மலர் : 60
இதழ் : 39

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




முதல்வரின் வீர முழக்கம்!

பிரபாகரனையோ விடுதலைப்புலிகளையோ நாம் ஆதரிப்பதற்கில்லை என்பது உறுதி. ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பொறுப்பான அமைப்போ அதன் தலைவரோ ஒருபோதும் நமது அனுதாபத்தைப் பெற முடியாது. இதைத் தமிழக முதல்வர் தெளிவுபடுத்திப் பேசியதை வரவேற்கலாம். இலங்கை அரசும் புலிகளும் நார்வே பிரதிநிதிகளின் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடத்த இந்தியாவில் இடம் கேட்டபோது அதற்கு இடங்கொடுத்துவிடலாகாது என்று கடுமையாய் எச்சரித்த ஜெயலலிதா பாராட்டுக்குரியவர்தான். புலிகளுக்கு ஆதரவாகப் பேசுவோர் அல்லது செயல்படுவோரை 'பொடா' சட்டத்தின்கீழ் கைது செய்யத் தயங்க மாட்டேன் என்று அவர் கூறியதும் நியாயம்தான்.

ஆனால், முல்லைத்தீவில் பத்திரிகையாளர்களைப் பிரபாகரன் சந்தித்ததைத் தொடர்ந்து தமிழக சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட தீர்மானம் தவிர்த்திருக்க வேண்டிய ஒன்று.

பா.ம.க., ம.தி.மு.க., கம்யூனிஸ்ட் போன்ற எதிர்க்கட்சியினர் தீர்மானத்தை எதிர்த்து வெளிநடப்புச் செய்ய, நாட்டின் பாதுகாப்புப் பிரச்னை என்பது இப்போது வெற்று அரசியலாகி




நீர்த்துப் போய்விட்டது!

'எதற்கும் அஞ்சமாட்டேன்' என்று ஜெயலலிதா முழங்கியதும் அதற்கு எதிர் முழக்கமாக வைகோ, 'நானும் அஞ்சமாட்டேன்! ஏற்கெனவே மிசாவில் சிறை சென்றவன் நான். இப்போது பொடாவில் கைதாகத் தயார்' என்றதும் சலசலப்பை ஏற்படுத்தலாம். ஆனால், அவை சார மற்ற விவாதங்கள்.

தொடர்ந்து வந்த பேரவைத் தீர்மானம், இலங்கை அரசு எடுத்துவரும் அமைதி முயற்சி களுக்குத் தடைகல்லாக அமையும் என்று கூறி, எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்ய இட மளித்துவிட்டது.

பிரபாகரன், ராஜீவ் கொலை வழக்கில் முதல் குற்றவாளியாகக் குற்றம் சாட்டப் பெற்றவர்தான். ஆனால், இன்று இலங்கை அரசு அவரோடு பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று பகிரங்கமாகக் கூறியிருக்கிறது. அமைதி திரும்பினால் போதும் என்ற எண்ணத்தில் அவ்வரசு நிறைய விட்டுக் கொடுக்கவும் தயாராகியிருக்கிறது. நிச்சயமாகப் பிரபாகரனை இந்தியாவுக்கு அனுப்ப அவ்வரசு முடிவெடுக்காது. இக்கட்டத்தில் பிரபாகரனை விசாரணைக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்பது விவேகமற்ற செயல். இலங்கை அரசு பிரபாகரனை அனுப்பாது போனால் இந்திய ராணுவத்தை அனுப்பிப் பிடித்துவரச் செய்ய வேண்டும் என்று கேட்பதோ சிரிப்புக்கிடமளிக்கிறது.

இதுபோன்ற அயலுறவு – பாதுகாப்பு விஷயங்களில் மத்திய அரசுதான் முடிவுகள் எடுக்க முடியும். மாநில சட்டமன்றங்கள் தீர்மானங்கள் இயற்றி மத்திய அரசுக்கு அறிவுரை வழங்க



முற்படுவதால் மத்திய – மாநில உறவுகள் சீர்கெடுவதுதான் நிகர லாபமாக இருக்கும்.

மேலும், அண்டை நாட்டு விவகாரங்களில் தலையிட்டு, ராணுவத்தை அனுப்பத் துணிவதென்பது மிக அபாயகரமானது. சர்வதேச அளவில் நமது நாட்டின் நற்பெயருக்கு அம்முயற்சி கேடு விளைவிக்கும். அப்படிப்பட்ட நடவடிக்கையைச் சிபாரிசு செய்வது தேசபக்தியின் அடையாளம் அல்ல; அதிகப்பிரசங்கத்தின் வெளிப்பாடு!

இலங்கையில் அமைதி திரும்ப வேண்டும்; அங்குள்ள மக்கள் நிம்மதியாய் வாழ வேண்டும் என்ற மெய்யான அக்கறையும் பேரவைத் தீர்மானத்தில் முக்கிய அம்சமாக இடம்பெற்றுள்ளது. இதைச் சாத்தியமாக்க தமிழகம் எவ்வாறு உதவ முடியும் என்றால், இன்றையச் சூழ்நிலையில், எல்லாத் தரப்பினரும் இப்பிரச்னையில் மௌனவிரதம் மேற்கொள்வதன் மூலம்தான்!

தமிழக கடற்கரையோர நகரங்களிலிருந்து இலங்கைத் தீவிரவாதிகளுக்குப் படகுகளிலும் கப்பல்களிலும் சரக்குகளும் ஆயுதங்களும் கள்ளக்கடத்தல் செய்யப்பட்டு வருகின்றன. படகு நிறைய ஆர்.டி.எக்ஸுடன் ஒரு மீனவர் சமீபத்தில் பிடிபட்டிருக்கிறார். இத்தகைய தேச விரோத காரியங்களில் ஈடுபடுவோர் மீதும் அவர்களின் பின்னணியில் இருந்து இயக்குவோர் மீதும் பொடா பிரயோகிக்கத் தயங்கவே தேவையில்லை. கடலோரக் காவலைப் பலப்படுத்த, அவசியமாயின் மத்திய அரசின் உதவியைக் கேட்கலாம்.

அத்துடன் நில்லாமல், 'இலங்கை அரசு பிரபாகரனைப் புனிதப்படுத்த முயற்சி செய்கிறது' என்று குற்றம் சாட்டுவதும், ராணுவம் அனுப்பவேண்டும் என்று மேஜையைத் தட்டித் தீர்மானம் போடுவதும் பிரச்னையை மேலும் சிக்கலாக்கி அபாயங்களையே உருவாக்கும். ○

அண்டை வீட்டு வம்பு



கண்ணீர் ஜெட் ஆமிர்!

● 'சுவர் இருந்தால் தான் சித்திரமே' என்ற கூற்றை அப்படியே உண்மையாக்கி யிருக்கிறார்கள் பெங்களூர் ஓவியர்கள். மாக்ஸ் முல்லர் பவனில் கார்ட்டூனிஸ்ட் பொன்னப்பா தலைமையில் பதிமூன்று பேர் கொண்ட ஓவியக் குழு சுவரில் ஓவியம் தீட்டி மகிழ்ந்தது! தற்போது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டி ருக்கிறது. அன்றாட வாழ்வில் நடப்பவற்றையே கார்ட்டூனாக வரைந்திருக்கிறது இக்குழு. ஓவி யர்கள் ஒன்று சேர்ந்து ஒரே சுவரில் இம்மாதிரி வரைந்திருப்பது இதுவே முதல் முறை யாம்!

● "ஐயாம் ஸாரி, என்னால் மேற்கொண்டு படிக்க முடிய வில்லை. இந்த சினிமா எடுக்கும் போது ஏற்பட்ட எமோஷனைப் பற்றி பலருக்குத் தெரிந்திருக்காது" எனக் கண்களில் கண்ணீர் ததும்ப நெஞ்சு அடைக்க, உணர்ச்சிக் குவியலாக ஆமிர்கான் பெங்களூர் ரசிகர்களின் முன் நின்றார். பெண் ரசிகைகளும் பயங்கர அழுகை. (மெகா சீரியல் மகிமை!) ஆமிர்கானின் பால்யகால நண்பரான சத்யஜித் பட்கல், 'லகான்' சினிமா எடுக்கப் பட்டதை ஒரு புத்தகமாகவே எழுதிவிட்டார். இதை வாசிக்கும் போதுதான் இந்த அழுகை. 'ஸ்பிரிட் ஆஃப் லகான்' என்ற இப்புத்தகத்தைச் சுதா மூர்த்தி வெளியிட்டார். "எனக்கு சினிமா பார்ப்பது மிகவும் பிடிக்கும். என் தலை நரைத் துப் போனால் என்ன? நான் ஆமிரின் விசிறி" என்றார் சுதா. ஆமிர்கானை ஆட்டோகிராஃப் கேட்டு மொய்த்து விட்டார்கள் ரசிகர்கள். திரைப்படத்திற்கு ஆஸ்கர் கிட்டவில்லை. புத்தகத்துக்கு புக்கர் ப்ரைஸ் கிடைக்குமா?

● பெங்களூர்வாசிகளுக்கு இது கொண் டாட்ட வா...ரம்! மாதக் கணக்காக விளம்பரம் மூலம் இசைப் பிரியர்களைக் காக்க வைத்த ரோஜர் வாட்டர்ஸ், இன்னிசைக் கச்சேரி நடத்தினார். பாலஸ் க்ரவுண்டில் சுமார் மூன்று மணி நேரம் கிறங்கிப் போனார்கள் அவர் விசிறிகள். இதற்கென ஸ்பெஷல் டீ ஷர்ட்டுகள், உடலில் டாட்டூஸ் குத்திக் கொண்டு கும்மாளமிட்டனர் ரசிகர்கள்.

பிங்க் ஃப்ளாய்ட் (Pink Floyd) பாண்ட் என்ற குழுவிற்கு உலகம் பூராவும் ரசிகர்கள். அக்குழுவில் தற்போது எஞ்சியிருப்பது இவர் மட்டுமே. 1.2 லட்ச மெகாவாட் சவுண்டில் இவர், தம் குழுவுடன் கிடாரை மீட்டிப் பாட, பெங்களூரே அதிர்ந்தது. ரோஜர் வாட்டர்ஸ் தன்னுடன் 585 பெட்டிகள் கொண்டு வந்தா ராம்! எல்லாமே இசைக் கருவிகள், வீடியோ ப்ரொஜக்டர்கள், ஸ்பெஷல் எபெக்ட் கருவிகள் அடங்கியவை. இவற்றின் எடை மட்டுமே சுமார் 15,000 கிலோக்களாம்!

● பெங்களூரில் 'ராயல் கேயெல்எம் டச் ஏர் லைன்ஸ்' ஏற்பாடு செய்திருந்த கலை நிகழ்ச்சி யில் ரசிகர்களை இசை வெள்ளத்தில் மூழ்கடித் தார் கடம் விநாயக்ராம். ஒருமுறை சான் ஃபிரான்ஸிஸ்கோ விமான நிலையத்தில் கஸ் டம்ஸ் அதிகாரிகள் இவருடைய கடத்தைப் பார்த்து சந்தேகத்துடன் கேள்வி மேல் கேள்வி கேட்டனராம். 'இங்கு நான் கிராமி விருது பெற வந்திருக்கிறேன். இது ஓர் இசைக் கருவி' என்று சொல்லி அங்கேயே வாசித் தும் காண்பித்தாராம். "ஏதோ பூ ஜாடி என்று நினைத்தோம். தவறுக்கு வருந்து கிறோம்" எனச் சொல்லி சகல வி.ஐ.பி. மரியாதைகளுடனும் அனுப்பி வைத் தனராம்.

— லதா சேகர்



விநாயக்ராம்



'ர்'க்கு எதிராக ஒரு போராட்டம்!



இலங்கையில் அமைதி திரும்பினால், தாயகம் திரும்ப காத்திருக்கிறார்கள் ஈழத் தமிழர்கள். ஈழப் பிரச்னை தீர்ந்துவிட்டால் அவ்வளவுதானா? என்றால் ''இல்லை; 'தமிழம்' என்பது காக்கப்பட வேண்டும்'' என்கிறார் பொன். சத்தியநாதன்.

ஆஸ்திரேலியாவில் மருத்துவராகப் பணியாற்றும் சத்தியநாதன் இலங்கைத் தமிழர். பணி, மருத்துவம் என்றாலும் அவர் ஆர்வமெல்லாம் தமிழ் ஆய்வு தான்.

'மலையாளம் கூட தமிழ்தான்' எனச் சொல்லும் சத்தியநாதன், தமக்குத் தமிழ் ஆய்வில் ஆர்வத்தை ஏற்படுத்தியதே 'செம்மீன்' திரைப் படம்தான் என்கிறார். ''அதில் வரும் வசனங்கள் கிட்டத்தட்ட எங்களது தமிழ் போல்தான் உள்ளது. மலையாளத்தை நான் சேரத் தமிழ் என்றுதான் சொல்வேன்'' என்கிறார்.

ஆஸ்திரேலியாவில் இருந்து இயங்கி வரும் உலகத் தமிழர் ஒன்றியத்தின் அமைப்பாள ரான இவரிடம், எத்தனையோ தமிழ் அமைப்புகள் இருக்கும்போது உங்கள் 'ஒன்றியம்' என்ன செய்யப் போகிறது என்றோம்.


'' 'தமிழம்' என்பதைக் காப்பதுதான் நோக்கம். மருத்துவராக நான் பணியாற்றினாலும் தொடர்ந்து 18 ஆண்டுகளாக தமிழ் ஆராய்ச்சியில் ஈடுபட்டு உள்ளேன். இதற்காகவே கணினி துறையிலும், மின்னணுவியல் துறையிலும் பத்துப் பட்டங்கள் பெற்றேன். இப்போது ஆஸ்திரேலியா மெல்பேர்ன் பல்கலையில் ஆய்வு படிப்பு படித்து வருகிறேன்.

''தமிழ் ஆய்வுக்காக என்று தமிழ் தவிர சிங்களம் உள்பட ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், சமஸ்கிருதம் என பல மொழிகளை முறையாகப் படித்திருக்கிறேன்.

''திருவனந்தபுரத்திலும் தமிழ் நாட்டிலும் ஆய்வு நடத்தியதில் திருவனந்தபுரத்தில் அதிக சதவிகிதம் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துகிறார்கள். சென்னை ஊடகங்கள் வெறும் 50 சதவிகித தமிழ்ச் சொற்களைத் தான் பயன் படுத்துகின்றன.

''மக்களைக் குறை சொல்ல முடியாது சென்னை ஊடகங்கள் தான் தமிழை அழிக்கின்றன. 'ர்' என்பதை 'ா்' என்று எழுதுவது கூட தமிழ் அழிப்புதான். 'ர்'ஐ 'ா்' என்று பயன் படுத்தும் பத்திரிகைகளை, நூல்களை வாங்குவது இல்லை என்று வெளிநாட்டுத் தமிழர்கள் நிராகரிக்கும் போராட்டம் ஒன்றை நடத்தும் திட்டம் இருக்கிறது.

''உலகம் முழுவதும் தமிழர்கள் ஒரே வித



பேச்சு, ஒரே வித எழுத்து வடிவம், ஒரே வித கலைச் சொல் என்பதை உருவாக்கினால் தான் தமிழைக் காத்து கல்வி முறைகளை உருவாக்க முடியும்.

ஓர் ஒலி வடிவத்திற்கு ஒரு வடிவம், ஒரு வரி வடிவத்திற்கு ஒரு ஒலி வடிவம் என்பது இந்திய மொழிகளில் மட்டுமே உள்ளது. தமிழுக்குப் பேச்சு கிரகிப்பு, வரி வடிவ கிரகிப்பு எல்லாம் உண்டு. எளிமையாகவும் உள்ள தமிழில் ஒரு, மாதிரி கலைச் சொல் உருவாக்கம் ஏற்பட்டால் தமிழ் எல்லாத் துறையிலும் வளரும்.

"ஈழத் தமிழின் உச்சரிப்புகள்தான் பெரும் பாலும் கணினியில் தமிழைப் புகுத்தி நாங்கள் மேற்கொள்ளும் தமிழ் வளர்ச்சி ஆய்வுகளுக்கு ஏற்றதாக இருக்கிறது.

"தமிழ் நாட்டுத் தமிழைவிட ஈழத்தில் தமிழ்க் கலப்பு குறைந்து தூய சொற்களாக இருக்கின்றன. இருந்தாலும் உலகம் முழுவதும் ஒரே மாதிரி கலைச் சொல்லாக்கம் என்று வரும் போது, தமிழர் வாழும் எல்லா இடங்களிலும் வழக்கத்தில் உள்ளச் சொற்களையும் இணைத்தே, கொண்டு வர வேண்டியது அவசியம்.

"இலங்கையில் அமைதி திரும்பி அங்கு தமிழர் உரிமை காக்கப்பட்டுவிட்ட பிறகு, ஈழத் தமிழர்கள் தங்கள் கல்வியைக் கலாசாரத்தைத் தமிழில் தொடங்காவிட்டால், உரிமை பெற்றதற்கு அர்த்தமே இல்லாமற் போய்விடும்.

"ஆப்பிரிக்க நாடுகள் போராடி சுதந்திரம் பெற்றன. ஆனால் அவர்களின் கல்வி, கலாசாரம் ஆங்கில வழியில் என்றானது. அவர்கள் சுய தன்மை தவறிப்போனது. இந்நிலை தமிழகத்திற்கு வந்துவிடக்கூடாது.

"உலகெங்கும் சிதறிக் கிடந்த யூதர்கள் தங்கள் 'ஹீப்ரு' மொழியைக் காப்பதற்கு ஒரு அமைப்பை நிறுவி 27 ஆண்டு காலம் ஆய்வு மேற்கொண்டு தங்களுக்கு என 'இஸ்ரேல்' உருவானதும் அங்கே அதனை ஏற்று பயன்படுத்திக் கொண்டனர்.

"அனைத்து துறைகளிலும் கல்வி மேற்படிப்புகளிலும் தமிழ் வழியை ஏற்படுத்த வேண்டும் என்பதற்கான ஆய்வுகளைத் தான் மேற்கொண்டிருக்கிறேன். அதனை எங்கும் உள்ள தமிழர்களிடம் எடுத்துச் செல்லவும், செயல்படுத்தவும் தான் உலகத் தமிழர் ஒன்றியம் முனைந்து வருகிறது.

"ஆங்கிலத்தில் தினமும் நூற்றுக் கணக்கில் புதிய சொற்கள் உருவாகி வருவதாக சொல்கிறார்கள். அதனை உடனுக்குடன் மொழி பெயர்த்துக் கொண்டிருக்க முடியுமா? அதற்குப் புதிய கண்டுபிடிப்பு மிகவும் உதவியாக அமையும்.


"அது சாத்தியமா? நான் சாத்தியமாக்கி இருக்கிறேன். நகல் காப்பி (ஜெராக்ஸ்) எடுப்பது போன்ற இயந்திரத்தை உருவாக்கி வருகிறேன். அதில் ஒரு ஆங்கிலப் பிரதியை வைத்து ஒரு பொத்தானைத் தட்டினால் நகல் வரும். இன்னொரு பொத்தானைத் தட்டினால் ஆங்கிலத்தில் இருந்து தமிழாக்கம் செய்யப் பட்ட தமிழ்ப் பிரதி வரும். பொருள் மாறாமல் அழகு தமிழில் அது இருக்கும்.

"அந்த இயந்திரம் மூலம், ஆங்கிலத்தில் எது புதிதாக வந்தாலும் உடன் தமிழில் அறிந்து கற்கலாம்.

ஆங்கிலத்திற்கு இணையான மொழியாகத் தமிழை கொள்ளலாம். 'நெட்' என்பதை இணையம் என்று சொல்வது தவறு. அதை 'வலையம்' என்று சொல்ல வேண்டும். இணையம் என்றால் அசோசியட் டைத்தான் குறிக்கும். 'நெட்'டிற்கு நேரடியான பொருள் 'வலை'. கலைச் சொல் என வரும் போது இதுபோன்ற தூய்மைகள் வர வேண்டும். 'பேக்ஸ்' என்பதற்கு 'தொலைநகல்' என்ற தமிழாக்கத்தை நான் தந்தபோது அதனை உலகம் ஏற்றது போல், எனது ஆய்வின் முடிவுகள் எல்லோருக்கும் ஏற்புடையதாக இருக்கும்." என்று கூறும் சத்திய நாதன், "தமிழர்களை ஒன்றாகப் படைத்தது ஆண்டவன் செயல். பிரித்தது ஆங்கிலேயர் செயல். நாம் ஆண்டவன் செயலை மதித்து ஒன்றுபடுவோம்" என்கிறார்!

- ரா. சுந்தரமூர்த்தி

ஸ்ரீ ராமஜெயம்



ஸ்ரீ மாருதி டிராவல்ஸ்

தொலைபேசி எண் **5511786** 10/1, ராஜேஸ்வரி தெரு, பெரம்பூர், சென்னை — 600 011

(நாம சங்கீர்த்தனத்துடன் அன்பர்களை அழைத்துச் செல்லும் ஆன்மீக சுற்றுலா குழு அமைப்பாளர்கள்)

① **16.5.02** முதல் **20.5.02 அழகிய அந்தமான் தீவுகள்**-(இரு வழி விமானப் பயணம், இருவர் தங்கும் தனி அறை, சாப்பாடு மற்றும் ஊர் சுற்றிப் பார்த்தல் அனைத்தும் உட்பட கட்டணம், நபர் ஒருவருக்கு ரூ.**19.750/-**

② **சிங்கப்பூர், மலேசியா, பாங்காக், பட்டயா** ஆகிய வெளிநாட்டுப் பயணம். ஜூன் 13 அல்லது 20ம் தேதி முதல் 12 நாட்கள். விமானப்பயணம், இருவர் தங்குவதற்கான தனி அறை (நட்சத்திர ஓட்டல்) சாப்பாடு, ஊர் சுற்றிப் பார்த்தல், விசா கட்டணம் உட்பட நபர் ஒருவருக்கு ரூ. **52, 500/-**

③ **2.6.02** ஒருநாள் சுற்றுலாப் பயணம் - **வல்லக்கோட்டை, மகாமேரு, காஞ்சிபுரம், தென்னாங்கூர், உத்திரமேரூர்** பஸ், சாப்பாடு உட்பட ரூ. **215/-**

④ குருப்பெயர்ச்சியினை முன்னிட்டு நவக்கிரக யாத்திரை: **5.7.02** வெள்ளிக்கிழமை இரவு 9 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்டு 8.7.02 திங்கட்கிழமை காலை சென்னை வந்தடைதல். 35 இருக்கைகள் கொண்ட டீலக்ஸ் பஸ், திருநள்ளாறு இரவு தங்குதல் உட்பட நபர் ஒருவருக்கு கட்டணம். ரூ. **650/-** சாப்பாடு செலவு அவரவருடையது.

⑤ **19.7.02** முதல் **23.7.02 பாண்டிய நாட்டு நவதிருப்பதிகள் மற்றும் திருச்செந்தூர், சுசீந்திரம், கன்னியாகுமரி, திருக்குறுங்குடி, வானமாமலை** ஆகிய திவ்ய தேசங்களுக்கு சென்னையிலிருந்து - திருநெல்வேலி - சென்னை இரயில் மூலமாக பயணம். திருநெல்வேலியிலிருந்து இதர இடங்களுக்கு பஸ் மூலமாக பயணம். இரயில், பஸ் சாப்பாடு கட்டணம் அனைத்து உட்பட நபர் ஒருவருக்கு ரூ. **1450 -**



⑥ செப்டம்பர் மாதம் 15 நாட்கள்: *ஸ்ரீ ப்ரசன்ன வெங்கடேஸ்வர மூலமந்திர காயத்ரீ ஹோமம்* - **பத்ரிநாத், கேதாரிநாத், ஹரித்துவார், ரிஷிகேஷ், தேவப் பிரயாகை, ஆக்ரா, மதுரா, பிருந்தாவனம்** -கட்டணம். ரூ.**5400/–**

முழு விவரமறிய சுய விலாசமிட்ட ரூ. 4/-ஸ்டாம்ப் அடங்கிய கவர் அனுப்பவும். விவரங்கள் அனுப்பப்படும்.

பங்கு பெறுவீர்! பாக்கியவான்களாவீர்! விவரங்களுக்கு: **V.சீனிவாசன்** (அமைப்பாளர்)

BUILD YOUR CAREER

DEVELOP YOUR PERSONALITY

WITH **IICS**



JOIN TODAY !

HOME STUDY HOBBY & CAREER COURSES

- Beauty Culture
- Mehandi
- Aroma Therapy
- Nail Art
- Embroidery
- Cooking
- Gift Packing
- Soft Toys
- Pot Painting
- Puppet Making
- Nozzle Painting
- Flower Making
- Personal Grooming
- Office Management
- Executive Secretary
- Ettiquettes & Manners
- Personality Devpl.
- Home Management
- Fashion Designing
- Dress Designing
- Cutting & Tailoring
- Candle Making
- Batic and Tie & Dye
- Ice-Cream Making

Medium of Instruction HINDI / ENGLISH

INTERNATIONAL INSTITUTE OF CORRESPONDENCE STUDIES

3721/1, Kanhaiya Nagar, Tri Nagar, Delhi-110035

Ph. 7180749, 7189591 Fax : 7192814

E-mail : iics@mantraonline.com

For Detail send self address envelope having stamp of Rs. 3/-

Consultancy available to start the Vocational Institute



'அம்மா' பற்றி அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள்!

'அம்மா' என்றால் அது முதல்வர் ஜெயலலிதாவைத்தான் குறிக்கும் என்ற மனநிலையில் அ.தி.மு.கவினர் மட்டுமல்ல, பொதுமக்களும் இருக்கிறார்கள். ஒரு மாறுதலுக்காக அ.தி.மு.க எம்.எல்.ஏக்கள் சிலரிடம் அவர்களின் அம்மா பற்றிக் கேட்டோம்.



சசிகலா ரவி (கிருஷ்ணராயபுரம்):

அய்யா விவசாய அதிகாரி. திருச்சி மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு மாற்றல் வந்துகொண்டேயிருக்கும். எனவே என் படிப்பு தடைபடக் கூடாதென்று திருச்சியில் பாட்டி வீட்டில் என்னை விட்டு விட்டார்கள். அம்மாவின் அம்மா வீடு அது. அப்பாவுக்குச் சொந்த ஊரான லால்குடிக்கு ஒருமுறை மாற்றல் வந்தது. டவுனுக்கு வெளியே உள்ள கிராமமான வாளாடியில் இருக்கும் எங்கள் வீட்டில்தான் அப்போது குடியிருந்தார்கள். கோடை விடுமுறைக்கும் நான் சென்றிருந்தேன். சாலையை ஒட்டிய வீடு அது. இரண்டு பக்கமும் கரும்புத் தோட்டம், நெற்பயிர்கள் என்று பசுமையாக இருக்கும். ஒருநாள் இரவு காற்றுக்காக கதவைத் திறந்து வைத்து விட்டு ஹாலில் படுத்துக் கொண்டிருந்தோம். கருக்கல் சமயத்தில் திருடன் வீட்டிற்குள் புகுந்துவிட்டான். தூங்கிக் கொண்டிருந்த அம்மாவின் கழுத்தில் இருந்த செயினுடன் இணைந்த தாலிச் சரடை பறித்து இழுக்க, விழித்துக் கொண்டு அம்மா கத்த, அப்பா எழுந்து சுதாரிப்பதற்குள் திருடன் பாதிச் செயினுடன் ஓடிப் போய்விட்டான்.

இந்தச் சம்பவம் அம்மாவுக்குப் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்





டது. அந்தச் சம்பவத்துக்குப் பின் மாலை இருட்டிய பிறகு வீட்டில் தனியாக இருப்பதற்கே பயப்படுவார். நானும் என் கணவரும் அரசியலில் இருப்பதால் என் இரண்டு பெண் குழந்தைகளை இப்போது என் அம்மாதான் கவனித்துக்கொள்கிறார். என் குழந்தைகளுக்கு இப்போது மூன்று அம்மாக்கள். நான், என் அம்மா, முதல்வர் அம்மா. யாராவது முதல்வர் பெயரைச் சொன்னால் "அப்படிச் சொல்லக்கூடாது; அம்மான்னு சொல்லணும்" என்பார்கள் என் பெண்கள்.

டாக்டர் விஜயபாஸ்கர் (புதுக்கோட்டை):

'அம்மா' என்றவுடன், என்னை அடித்துக் கண்டித்து வளர்த்த நினைவுகள்தான் வலம் வருகின்றன. ஆறாவது முதல் நான் திருச்சி அருகில் ஹாஸ்டலில் தங்கித்தான் படித்து வந்தேன். விடுமுறைக்குத்தான் ஊருக்குப் போவேன். ஒரு சம்பவம் பளிச்சென்று மின்னலடிக்கிறது. குளத்தில் தாமரைப் பூ பறிப்பதென்றால் மண்பானை தெப்பத்தில்தான் செல்ல வேண்டும். அப்போது தெப்பம் கவிழ்ந்தால், தண்ணீருக்குக் கீழே தாமரைக் கொடிகளுக்கிடையில் மாட்டிக் கொள்வோம். ரொம்பவும் ரிஸ்க்கான வேலை அது. ஒருமுறை, அந்த பானை தெப்பத்தில், என் தங்கையையும் வைத்துக்கொண்டு நடுக் குளத்துக்குச் சென்று அங்கிருந்து திரும்ப வர முடியாமல் தவித்து, என் அப்பா மற்றொரு தெப்பத்தில் வந்து கரைக்கு அழைத்து வந்தார். அன்று அம்மா 'என்னை நன்றாக கவனித்து விட்டார்.

வீட்டில் சும்மாவே இருக்க மாட்டேன்... வேலை செய்யாத கடிகாரம், ரேடியோ போன்றவற்றை நோண்டிக் கொண்டே இருப்பேன். சிலபோது அவை நன்றாகி விடும். பெரும்பாலான சமயங்களில் இன்னமும் மோசமாகிப் போய் விடும். அப்போதும் அம்மாவின் 'கவனிப்பு' உண்டு. ஆனால் அம்மா அப்பா இருவரும் நான் டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அவர்கள் ஆசையை நிறைவேற்றி விட்டேன். இருந்தும் பிரக்டிஸ் செய்யாமல் அரசியலில் முழு மூச்சாக இறங்கியது அவர்களுக்குச் சற்று வருத்தம்தான். இப்போது அரசியலிலும் நான் சட்டமன்ற உறுப்பினராக வந்திருப்பது அவர்களுக்குச் சந்தோஷம். ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும்" தாயைப் போன்ற என் தாயை மனம் குளிர்வித்த என் அரசியல் ஆசான் முதல்வர்



அம்மாவை என் தாய் இன்னமும் சந்திக்கவில்லை. அது என் திருமணத்தின் போது கண்டிப்பாக நடக்கும்!

பச்சைமால் (குளச்சல்):

எனக்கு ஏழு சகோதரிகள். நான் ஒரு பையன்! செல்லத்திற்குக் கேட்கவேண்டுமா? அம்மா பெயர்: கோயில் பிள்ளை அம்மாள். வருடத்துக்கொருமுறை விசாகத் திருநாள் உற்சவத்தின்போது உவரி சுயம்புலிங்க சுவாமி கோயிலுக்குக் குடும்பத்துடன் செல்வோம். கூட்டத்தின் நடுவில் போகும்போது "டேய் கையை விட்டுறாதே" என்று அம்மா சொல்லிக்கொண்டே வருவார். ஒரு வருடம் கூட்டத்தில் நான் மிஸ்ஸாகிப் போய்விட்டேன். அம்மாவும் சகோதரிகளும் அழுது புலம்பி என்னைத் தேடிக் கண்டுபிடித்தார்கள். நான் ஜாலியாக காவல் மையத்தில் ஓலைப் பணியாரம் சாப்பிட்டுக் கொண்டிருந்



தேனாம்! "ரொம்ப தைரியமான பையனா இருப்பான் போலிருக்கே" என்று காவலர்கள் வியந்துகொண்டே அம்மாவிடம் ஒப்படைத்தார்களாம். எம்.ஜி.ஆர். படங்கள் பார்த்து அவரது ரசிகனாகிவிட்டேன். கட்சித் துவங்கியவுடன் எங்கள் ஊரான தம்மத்துக் கோணத்தில் கிளைச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பல ஆண்டுகள் தொடர்ந்து அதே பொறுப்பில் இருந்தேன். பொதுக்கூட்ட போஸ்டர் ஒட்டுதல் போன்ற வேலைகளை நானே செய்வேன். அரசியலில் முழு மூச்சாக ஈடுபட்ட பிறகு, இரவு வீடு திரும்ப ஒன்று, இரண்டு என்றாகிவிடும். ஆனால் அந்தச் சமயத்திலும் அம்மா விழித்திருந்து எனக்குச் சாப்பாடு எடுத்து வைப்பார். சாதாரண தொண்டனான எனக்குப் புரட்சித்தலைவி அம்மா எம்.எல்.ஏ பொறுப்பு கொடுத்திருக்கிறார். என்னைப் பெற்ற அம்மாவையும் முதல்வர் அம்மாவையும் எனது இரு கண்களாகத்தான் பார்க்கிறேன்.

ஜெமினி ராமச்சந்திரன் (ஆரணி)

இன்னமும் நான் நினைத்து வியப்பது என் அம்மாவின் கடும் உழைப்பைக் குறித்துத்தான். ஆரணி நகரத்தில் என் தந்தை மளிகை கடை வைத்திருந்தார். ஆனால் நகரத்திற்குச் சற்று வெளியே வீட்டை ஒட்டியே ஒரு சிறு மளிகைக் கடையை என் அம்மா நடத்தி வந்தார். காலையில் எழுந்தவுடன் வாசலில் சாணம் தெளித்து, பால் கறந்து, எங்களை எழுப்பி, அதற்கிடையில் கடையைத் திறந்து, வியாபாரத்தையும் வீட்டையும் மாறி, மாறி கவனித்து, பழையது போட்டு, எங்களைப் பள்ளிக்கு அனுப்பிய பிறகு அவருக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைக்கும். அப்புறம் டவுனில் உள்ள கடைக்குச் சென்று சரக்குகளைக் கொண்டு வருவார். மதியம் உணவு தயாரிப்பு, அப்பாவுக்கு உணவு கொண்டு செல்வது என்று பணிகள் தொடரும். அவ்வப்போது பக்கத்தில் நம்பிக்கையாக உள்ளவர்களைக் கொஞ்சம் கடையைப் பார்த்துக் கொள்ளச் செய்வார். மாலை நாங்கள் வந்ததும் கடையைக் கவனித்துக் கொள்வோம். அவர் தூங்கி நாங்கள் பார்த்ததில்லை. பொங்கல், தீபாவளியின்போது, புதுப்படங்கள் ரிலீஸாகும் அதுவும் புரட்சித் தலைவர் படங்கள் - அம்மாவிடம் காசு கேட்டு, படம் பார்க்கச் செல்வேன். 'சமயத்தில் உள்ளூரில் படம் பார்க்கப் போகிறேன்' என வேலூர் சென்று படம் பார்த்துவிட்டுத் திரும்பி விடுவேன். தியேட்டரில் படம் விட்டும் பையனைக் காணவில்லையே என்று ஏங்கித் தவிப்பார் அம்மா.

இப்படிப் பல நினைவுகள் இருந்தாலும், புரட்சித் தலைவியின் தாயுள்ளத்தைச் சொல்லாமல் இருக்க முடியாது. குறிப்பாக சமீபத்தில் உடல் நலமில்லாமல் மருத்துவமனையில் இருந்தபோது வந்து பார்த்தார். நான் நெகிழ்ந்து போய்விட்டேன். கிட்டத்தட்ட 30 பேர். அதுவும் வசதியானவர்கள் ஸீட் கேட்டபோது தொண்டனான எனக்குத்தான் கொடுத்தார். அம்மாவை உயிருள்ளவரை மறக்க முடியுமா?

சந்திப்பு: ஸ்ரீநிவாசன்
படங்கள்: ராஜன்







மேடையில் நின்று பேசிக் கொண்டிருந்த இளைஞனுக்கு முப்பது வயதுக்குள்தான் இருக்கும். இளைஞனின் உருவமும் வயதும் தன்னுள் சிலுப்பிவிட்ட நினைவுகளை, சரவணன் மிகத் தீவிரத்துடன் ஒதுக்கினார். அரங்கத்தில் அமர்ந்திருந்த அவரது வயதுக்கார நரைத்த தலை, மீசையர்களைப் பார்வையால் ஒரு சுற்று சுற்றி வந்தபோது, சோர்வு அவரை ஆட்கொண்டது. அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரே இளைஞன் மேடையில் பேசிக் கொண்டிருந்தவன் என்பது விசித்திரமாகத் தோன்றிற்று. அவனுடைய வார்த்தைகளில் தங்களுடைய எதிர்காலம் நின்றார்போல எல்லாருடைய சாம்பல் பூத்த கண்களும் அவன் மேல் பதிந்திருப்பது அதை விட விசித்திரமாக இருந்தது. வாழ்வின் கடைசிப் படிகளில் அவர்கள் அனுபவிக்கும் அவமானங்கள், பரிதவிப்புகள், தனிமைகள் அவனது வார்த்தைகளில் கரைந்துவிடும் என்று நம்பியவர்கள் போல.

இளைஞன் அழகிய ஆங்கிலம் பேசினான். நிறைய அலங்கார வார்த்தைகளைப் பிரயோகித்தான், அயல் நாட்டில் வசித்தவன் போன்ற உச்சரிப்புடன் பேசுவது அவன் தொழில் என்று எல்லாருக்கும் தெரியும்.

"இன்னும் சமயம் இருக்கிறது, வாழ்வை இன்று புதி

வாஸந்தி

தாகத் துவங்குங்கள்" என்று எழுபதைக் கடந்தவர்களைப் பார்த்துச் சொன்னது அபத்தமாகத் தோன்றிற்று. அவன் சொன்ன வார்த்தைகளும் அவற்றை விளக்கும் உபகதைகளும் வேறு யாரோ ஏற்கெனவே சொன்னவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஊன்றுகோல் இல்லாமல் நடக்கமுடியாத பல கிழங்கள், பனிப்படலம் போர்த்திய கண்களுடன் மேடையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தது சரவணனுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இதே போன்ற பலவீனம் இப்படிப்பட்ட பேச்சைக் கேட்கும்போது தம்மை ஆட்கொள்ளலாம் என்று மெல்லிய கலவரம் ஏற்பட்டது.

"உறவுகள் எல்லாம் எதேச்சையானவை. அர்த்தமுள்ளதாக அவற்றை மாற்றுவது நம் கையில் இருக்கிறது. அதற்குத் துணிச்சல் தேவை."

சரவணன் எழுந்தார். 'என்ன அதற்குள் போகிறாயா?' என்று ஜாடையால் கேள்வி கேட்ட சபா காரியதரிசி ரங்கனிடம் ஜாடையிலேயே 'வேலையிருக்கு, போகணும்' என்று விட்டு அவர் வெளியில் வந்தார். குளிர்ந்த ஏ.ஸி. கூடத்திலிருந்து வெளியில் வந்ததில் நெற்றியும் கழுத்துப்பட்டையும் வியர்த்தது. கட்டடத்தின் படிக்கட்டுகளைக் கடந்து அவர் தெருவில் இறங்கியபோது குறுக்கே ஓடி வந்த இரண்டு சிறுவர்கள் அவர்மேல் இடித்து, 'ஸாரி அங்கிள்' என்றதும், இயல்பு உலகத்துக்கு வந்து சேர்ந்ததுபோல நிம்மதி ஏற்பட்டது. நான்கு மாதங்களுக்கு முன் சபாபதிதான் இந்த



அமைப்பில் நீயும் சேரு' என்று வற்புறுத்தி ஐந்நூறு சந்தா வாங்கிச் சேர்த்துவிட்டான். வயதானவர்களுக்கான க்ளப். "பஜனை மடம்னா எனக்கு வேண்டாம்" என்றார் சரவணன். "பஜனை மடம் இல்லேங்கறதுதான்

இதிலே விசேஷம்" என்றான் சபாபதி. பஜனையோ கதாகாலக்ஷேபமோ இல்லே, அறிவார்த்தமான லெக்சர்கள் இருக்கும், உபயோகமானதா, நம்மை உற்சாகப்படுத்தறதா!

இன்றைய சொற்பொழிவைக் கேட்டதில் உற்சாகம் ஏற்படவில்லை. ஆயாசம் புகுந்து கொண்டது. பாவம், புண்ணியம், பரிகாரம் என்று பௌராணிகர் சமஸ்கிருதம் கலந்த



3

பொய்யில் பூத்த நிஜம்

தமிழில் உபதேசிப்பதற்கும் அந்த இளைஞன் அன்னிய உச்சரிப்பில் ஆங்கிலத்தில் சொன்னதற்கும் அதிக வித்தியாசம் இருந்ததுபோல் தெரியவில்லை. கதா காலக்ஷேபத்தின் முடிவில் கிடைக்கும் சுண்டலுக்காகவே தாத்தாவுடன் சின்னப் பையனாகக் கதை கேட்கப் போனது நினைவுக்கு வந்தது. அந்தச் சுண்டலுக்காகத் தான் தாத்தாவும் சென்றாரா? என்று தெரியாது. சமயங்களில் நெய் ஒழுக வெண்பொங்கலோ சர்க்கரைப் பொங்கலோ கிடைக்கும். தொன்னை நிறைய, பாதி வயிறு நிரம்பும் படியாக. இங்கு ஆங்கிலத்தில் 'அறிவார்த்தமான லெக்சர்கள்' ஆரம்பிப்பதற்கு முன்பே, உறுப்பினர்களுக்குக் காலை உணவு சம்பிரமமாகக் கொடுக்கப்படுகிறது. இன்று காலை அவர் எதிரில், எண்பதைக் கடந்த ஒரு கிழவர் நடுங்கும் விரல்களால் இட்டிலியை விண்டு விண்டு சட்டினியில் தோய்த்து ரசித்துச் சாப்பிட்டார். பரிச்சயமில்லாத சரவணனைப் பார்த்து இலேசாகச் சிரித்தார். "இப்படி நா சாப்பிட்டு எத்தனை வருஷமாச்சு தெரியுமோ?" பிறகு விளக்குபவர் போல, "வைஃப் போய் அஞ்சு வருஷமாச்சு. எம்மேல வேறயாருக்கு அக்கறை இருக்கும்? வயசாச்சுன்னு பட்டினிப் போட்டுடறா வீட்டிலே" என்றார். இங்கு வருகிற பாதிப்பேர் இதற்காகத்தான் வருகிறார்கள் என்று சரவணன் நினைத்துக் கொண்டான். 'வயசானா ருசி செத்துப் போயிடுமா என்ன?'

எந்த ருசியும் சாகாது. ஏன் சாகணும்? உணர்ச்சிகளும் மரத்துப் போகாது. ருசிகள் சாகும், உணர்ச்சிகள் மரத்துப் போகும் என்கிற பரவலான நினைப்பே ஒரு திட்டமிட்ட சதியால் ஏற்படுவது என்று தோன்றிற்று. வயதானால் உனக்கு ருசி தேவையில்லை, உணர்ச்சிகள் தேவையில்லை. தேவையற்றதைப் போலப் பழகிக் கொள்வது நல்லது. ஏனென்றால் உடல் வலு இழந்தபின் நீ மற்றவர்களை அண்டி வாழவேண்டியவன். நீ மற்றவர்களுக்கு உபயோகமாக இருக்கும் வரையில்தான் உன் ருசிகள் உணர்ச்சிகள், மதிக்கப்படும். தனக்கு அந்த மாதிரி கதி ஏற்படப் போவதில்லை என்று சரவணன் சொல்லிக் கொண்டார். என் ருசிகளும் உணர்ச்சிகளும் மரத்துப் போகத் தேவையில்லை.

'உறவுகள் எல்லாம் எதேச்சையானவை.'

றொம்ப சரி. அதனால்தான் உதறியாச்சு உறவை. நீ ஒரு பொடியன், நீ வந்து இங்கிலீஷிலே சொல்லி அதை நா தெரிஞ்சுக்க வேண்டியதில்லே. இன்று சபாபதி இல்லே, நல்ல வேளை. இருந்திருந்தால் அவன் பங்கிற்கு ஏதாவது உபதேசம் செய்திருப்பான். நேற்று காலை வீட்டுக்கு வந்து சொல்லிவிட்டுப் போனான். இன்று எங்கோ முகூர்த்தத்துக்குப் போக வேண்டியிருப்பதாக. பள்ளி நாட்களி விருந்து பழக்கம் என்பதால், மற்றவர்கள் பேசத் தயங்குவதை எல்லாம் சபாபதி பட்டு பட்டென்று அவரிடம் கேட்டுத் தொலைப்பான். இதையெல்லாம் எங்கிருந்தாவது காமாட்சி சாவிதுவாரத்தில் செவி வைத்துக் கேட்டுக் கொண்டிருப்பாள். அதில் தொனிக்கும் அனர்த்தத்திலிருந்து தப்பிக்க முடியாது.

காரணம் புரியாமல் சில நாட்களில் எதற்கெடுத்தாலும் எரிச்சல் வரும் சரவணனுக்கு. அப்படிப்பட்ட நாளாக இருக்கக் கூடும் என்று நேற்று காலை உணவின் போதே அவருக்குத் தோன்றிற்று. விருந்தாளிக்கு உபசரிப்பதுபோல அவரது தேவைக்கு அதிகமாக ஒரு இட்டிலியை வைத்துச் சாப்பிட வைத்த – அவருக்கு வீணாக்கப் பிடிக்காது என்பதால் வயிறு முட்டிவிட்டதை உணர்ந்தும் சாப்பிட வேண்டியதாகிவிட்டது – புதிய சமையல்காரியின் மீது வந்த கோபத்தைக் காமாட்சியின் மீது காண்பித்தார் – நீ நடத்தறியா வீட்டை இல்லே, அந்தம்மா நடத்துதா?_ காமாட்சி உடனடியாக சமையலறைக்குச் சென்று சமையல்காரியிடம் விடுவிடுத்தது காதில் விழுந்ததிலிருந்து எரிச்சல் ஆரம்பித்தது.

'இங்கே வீட்டு மனுசங்களுக்கு உபசரிக்கிற வழக்கம் இல்லே. பண்டத்தை மேஜைமேல வெச்சா போதும். வேணும்ங்கிறதை அவங்க சாப்பிட்டுப்பாங்க. சின்னப் பிள்ளைங்க யாருமில்லே, தெரிஞ்சுதா?'

காமாட்சியின் வார்த்தைகளில் பலவித அர்த்தங்களைக் கற்பித்துக் கொண்டதில் எரிச்சல் அதிகமாயிற்று. எதைப் பேசினாலும் பொடி வைத்துப் பேசும் வழக்கம் – பொடியுமில்லே பிடியுமில்லே, என்று அவன் நொடித்தாலும் – காமாட்சிக்கு ஏற்பட்டு ஓராண்டுக்கு மேல் ஆயிற்று. அதற்கு முன்பு நேரடியாகத் தாக்குதல் இருக்கும். அவர் 'இடிச்ச புளி கணக்காய்' இருப்பதைப் பார்த்துத் தனது யுக்தியை மாற்றிக் கொண்டாள். தோட்டத்தில் மல்லிப்பதியன் வைப்பதிலிருந்து கிராமத்தில் இருக்கும் மணியக்காரருக்கு அனுப்ப வேண்டிய கோவில் காணிக்கை வரை, எதைப் பற்றின பேச்சு வந்தாலும் அவரை மறைமுகமாகத் தாக்கும் கலையைக் கற்றிருந்தாள். ஆச்சரியமாக அவளது நேரடி தாக்குதல்

> ''என்னங்க இது... கல்யாண மேடைல பொண்ணுக்கு மட்டும் ஆள் உயர மாலை போட்டிருக்கு?''
>
> ''என்ன பண்றது? அரசியல் கட்சில மகளிரணி தலைவியாச்சே!''
>
> – அம்பை தேவா

களைவிட இது அவரை அதிகமாக வருத்தியது, வாட்டியது. இரவில் திடுதிப்பென்று எதிரில் நின்று தூக்கத்தைக் கெடுத்தது. அவளது பேச்சின் உள்ளர்த்தம் தனக்குப் புரிந்து போனதாகக் காண்பித்தால் அதிக சங்கடம் என்று வாயை மூடிக் கொண்டு இருக்க வேண்டியிருந்ததால், இருவரிடையே சகஜத்தன்மை என்பதே மறைந்து வருவதாகத் தோன்றிற்று.

ஞாயிற்றுக் கிழமை என்பதால் வாகன நெரிசல் இல்லாமல் டிடிகே. சாலையில் நடப்பது சௌகர்யமாக இருந்தது. அவரைக் கடந்து சென்ற வாகனங்களில் அனேகமாக எல்லாவற்றிலும் ஆணும் பெண்ணுமாகப் பயணிப்பதைப் புதிதாகப் பார்ப்பவர்போல சரவணன் பார்த்தார். இவர்களுக்குள் எப்படிப்பட்ட சகஜத்தன்மை இருக்கும் என்று அவர் யோசித்தார். அவருக்கும் காமாட்சிக்கும் இடையே இப்போது சகஜத்தன்மை இல்லாமற் போனது ஒரு அதிர்ச்சிதரும் மாற்றம் இல்லை என்று அவருக்குத் தெரியும். என்றைக்குமே இருவருக்குமிடையே தோழமை என்பது இருந்ததில்லை என்று தோன்றிற்று. உதாரணத்துக்குச் சபாபதிக்கும் அவன் மனைவி கமலத்துக்கும் நடுவில் இருந்த மாதிரி. இத்தனைக்கும் கமலமும் காமாட்சி மாதிரி பத்து வகுப்பு வரைதான் படித்திருந்தாள். ஆனால் எப்பவும் சிரித்த முகம் காமாட்சியை விட அவளுக்கு நிறைந்த குணம் இருக்க வேண்டும். திருமணம் என்பது லாட்டரிச் சீட்டு. கொடுப்பினை... நேற்று சபாபதி வீட்டுக்கு வந்ததிலிருந்து தனிமை உணர்வு ஏற்பட்டுப் போயிருந்தது. அதை அகற்ற அவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. உண்மையில் அதில் திளைப்பது ஒரு மெல்லிய சுகத்தைக் கொடுத்தது. ஊர் அக்கப்போர் பேசி முடித்த சபாபதி எதேச்சையாகச் சொல்வதுபோல இன்றைய கூட்டத்துக்குத் தன்னால் வரமுடியாது என்றும், அடுத்த நான்கு மாதங்களில் நடக்க விருந்த கூட்டங்களுக்கும் வரமுடியாது என்றும் சொன்னார்.

''அடுத்த மாதம் நானும் கமலமும் அமெரிக்கா போறோம். வாஷிங்டன்லே இருக்கிற கார்த்திக் டிக்கெட் அனுப்பியிருக்



கான். அம்மாக்காரிக்குப் பெருமை பிடி படலலே. பிள்ளைக்கு இப்பலேந்தே வடகம் வத்தல்னு சேகரிக்க ஆரம்பிச்சாச்சு'' இதைச் சொல்லத்தான் இவன் வந்திருக்கிறான் என்கிற எரிச்சலுக்கு நடுவில் அடிவயிற்றில் ஏதோ சுழன்றது போல் இருந்தது.

''ஏன் உனக்குப் பெருமையில்லையா?'' குரலில் நிஷ்டூரம் தொனிக்கிறதோ என்று கவலையேற்பட்டது சரவணனுக்கு.

''ஆமாம். இதிலென்ன இருக்கு?'' என்றார் சபாபதி அலட்சியமாக. ''உண்மையிலே போகணுமான்னு யோசிக்கிறேன்!''

இது அப்பட்டப் பாசாங்கு என்று சரவணனுக்கு எரிச்சல் வந்தது. ''ஏன், போறதிலே என்ன தப்பு? எத்தனைப் பிள்ளைங்க டிக்கெட் அனுப்பறாங்க அமெரிக்காவிலேருந்து?''

''அதைத்தான் கமலம் சொல்றா! ஆனாலும் எனக்கென்னவோ இந்த வயசிலே அத்தனை தூரதேசம் போக பயமாயிருக்கு. இந்தியாவ விட்டுப் போனதில்லே. அமெரிக்க இங்கிலீஷ் வேற புரியாது. எப்படி சமாளிப்பேன் கமலத்தைக் கூட்டிக்கிட்டுனு இருக்கு. முதல் பயம் அவ எதிர நம்ம மானம் போயிருமோன்னு!''

சபாபதி சிரித்த வெடிச்சிரிப்பில் பெருமிதம் தொனித்தது.

''எத்தனை நாள் தங்கறாப்பலே?''

''மூணு மாசம் நிச்சயமா இருப்போம். அவளுக்கு ஊர் சுத்திப் பார்க்கணும்னு இருக்கு. அவனுக்கு வசதி எப்படியோ? ஏற்கெனவே டிக்கெட் அனுப்பியிருக்கறான். அதுக்கு மேல நாம செலவு வைக்கலாமாங்கறேன். இந்தப் பொம்பளைங்களுக்கு என்ன புரியுது சொல்லு!''

''அப்படியெல்லாம் நினைக்காதே'' என்றார் சரவணன் வேறு ஏதோ ஞாபகத்தில். ''கடைசியிலே அவங்க நல்லபேர் தட்டிக்கிட்டுப் போவாங்க, நாம பேசறதுதான் பிள்ளைங்களுக்குத் தப்பா போகும்.''

சபாபதி சிரித்தார்.

''அதுசரி, இவங்களுக்குத்தான் வடகத்திலேயும் வத்தல்லேயுமே பிரியத்தை நிரப்பத் தெரியுதே.''

சரவணன் பதில் சொல்லவில்லை. சபாபதி உடனே கிளம்பினால் தேவலைபோல இருந்தது. 'ஐம்பது வருஷ பழக்கம் நமக்கு' என்ற பீடிகையுடன் ஆரம்பிக்கும் சபாபதியின் உபன்யாசங்களைப் பல முறை கேட்டு சிநேகிதம் முறியும் அளவுக்குச் சண்டை போட்டாயிற்று. சபாபதிக்குச் சொரணை என்பதே இல்லாததால் நட்பு முறியவில்லை. நல்ல வேளையாக நேற்று அவர் வந்தபோது காமாட்சி, கோவிலுக்குப் போயிருந்தாள். சபாபதி – கமலத்தின் அமெரிக்கப் பயணத்தைப் பற்றி அறிந்திருந்தால் அதைப் பற்றியும் மறைமுகத்தாக்குதல் ஆரம்பித்திருக்கும்.

மீண்டும் ஒரு தனிமை உணர்வு அவரை சுய பச்சாதாபத்தில் ஆழ்த்தியது. எழுபது வயதுக்கு மேல் கணவன் மனைவிக்கிடையே கசப்புணர்வு ஏற்பட்டுப் புரையோடிப் போனால் என்ன செய்ய முடியும்? அவளுக்கு நான் சுமையாக, எனக்கு அவள் சுமையாக – இதை எங்கே இறக்குவது? கோவிலுக்குச் செல்வது அதை அவள் இறக்கத்தானா என்று அவருக்குத் தெரியாது. 'இன்னும் சமயம் இருக்கிறது. வாழ்வைப் புதிதாகத் துவங்குங்கள்!'

மடையன் அந்தப் பேச்சாளன். முன்னேற்றப் புத்தகங்களைப் படித்துவிட்டு வந்து உளறுகிறான். 'புதிதாக' எதன் அடிப்படையில் துவங்குவது? சரவணனுடன் பள்ளியில் படித்த சந்திரன், மனோவியல் மருத்துவம் படித்தான். காமாட்சிக்கும் தனக்கும் மன அளவிலேயே இருந்த ஒவ்வொமையைப் பற்றின கவலையை அவனிடம் திருமணம் நிச்சயமானவுடன் சொன்னபோது, ''தன்னால் ஒரு நெருக்கம் வரும் கவலைப் படாதே'' என்றான் சந்திரன். ''உடலுறவு அதை ஏற்படுத்தும்.''

ஏற்படவில்லை. பொழுது புலர்ந்ததுமே இரவின் மயக்கம் விலகிப் போனது. அவருக்கு விவரிக்கத் தெரியாத காமாட்சியின் இயலாமைகள் விசுவரூபமெடுத்து நிராசையேற்படுத்தின. திரும்பவும் சந்திரனிடம் யோசனை கேட்கப் போனபோது, சந்திரன் சிரித்தான்.

''ரொம்ப ஆசைப்படறே நீ, இருக்கறதை வெச்சிண்டு திருப்திபடக் கத்துக்கணும் நீ. குழந்தை பிறந்தா சரியாயிடும்–''

மறுபடி சந்திரனைச் சந்தித்தபோது அவனுக்குத்தான் ஆறுதல் தேவைப்பட்டது. அவனும் அவனது மனைவியும் பிரிந்திருந்தார்கள். மனவளர்ச்சி குன்றி பிறந்த குழந்தை ஏற்படுத்திய அழுத்தங்களை இருவராலும் தாங்க

முடியவில்லை. அசாத்திய ஐக்யூவுடன் குழந்தை பிறந்தாலும் ஆபத்து என்று சந்திரன் சொல்லவில்லை.

"நா ஒண்ணு சொல்றேன் கேட்பியா?" என்றார் சபாபதி.

"மாட்டேன்–"

சபாபதி வெட்கம் கெட்டுச் சிரித்தார்.

"கேக்காட்டா போ. சொல்றதைச் சொல்லிடறேன். நீயும் காமாட்சியும் எங்கேயாவது சேர்ந்து ஒரு ட்ரிப் அடியுங்க."

"போக வேண்டிய காலத்திலேயே போகல்லே."

"அதுக்கெல்லாம் காலம்னு ஒண்ணும் கெடயாது. என்னைக் கேட்டா இந்த வயசிலேதான் போகணும்."

"சரி ரொம்ப தாங்க்ஸ் உன் யோசனைக்கு."

'யோசிச்சுப் பாரு.'



யோசனை செய்வதற்கு யோக்யதை இல்லாத யோசனை அது என்று இரவு தூக்கம் வராமல் புரண்டபோது நிச்சயமாயிற்று. தனித் தனி நபர்களாக, ஒட்டாமல் வாழ்ந்த வாழ்க்கையில் ஏற்பட்டுப் போன இடைவெளி மிக ஆழமானது. அந்த இடைவெளியை நிரப்பும் வாய்ப்பும் கைதவறிப் போய்விட்ட பிறகு எந்தப் பாசாங்கு முயற்சியிலும் இறங்க அவர் தயாராயில்லை.

அப்பாவின் நினைவு திடீரென்று வந்தது. அப்பாவை நினைக்கும்போது இப்பொழுதெல்லாம் ஏன் கோபம் வருவதில்லை என்று ஆச்சரியம் ஏற்பட்டது. அப்பா சாகக் கிடக்கிறார் என்று தெரிந்தபோதுகூட அவரைப் பார்க்க விடாமல் தடுத்த கோபம். இந்தக் கோபம் பாரம்பர்ய குணமாக இருக்க வேண்டும். நிலபுல ஆஸ்திகளுடன் பத்திரத்தில் கையெழுத்திடப்படாமலே வருவது. கிராமத்தில் விவசாயத்தை அம்மா கவனிக்கையில் பட்டணத்தில் புத்தகக் கடை வைத்திருந்த அப்பாவுக்கு அங்கு ஒரு சிநேகிதி இருந்தாள். அது தெரிந்த அன்று பதினான்கு வயதுப் பையனான தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும் கோபமும் இப்போதும் பசுமையாக நினைவிருந்தது. அப்பாவை ஒரு அவசர காரணத்துக்காக ஒருமுறை சந்திக்க, அவன் பட்டணத்துக்குச் சென்றபோது, அந்தப் பெண்ணுடன் அவர் வெகுநெருக்கமாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். திடுதிப்பென்று மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க எதிரில் நிற்கும் அவனைப் பார்த்து அப்பா விழித்தார். மறுநாள் அவனைக் கடற்கரைக்கு அழைத்துச் சென்று, "எனக்கு ரொம்பத் தனிமையாயிருக்கு இங்கே. கோமதி ரொம்ப நல்ல பொண்ணு. தப்பானவளா நினைக்காதே!" என்றார்.

அவனுக்கு ஆத்திரத்தில் அழுகை வெடித்துக் கொண்டு வந்தது. தன் உரிமைப் பறிபோனமாதிரி. தன் உணர்வுகளை எப்படி வெளிப்படுத்துவது என்று அவனுக்குப் புரியவில்லை.

"அம்மாகிட்ட எதையாவது சொல்லி வைக்காதே. நா கோமதியைக் கல்யாணம் கட்டிக்கப்போறதில்லே."

அது இன்னும் கேவலம் என்று அவனுக்குக் கோபம் வந்தது.

"ஒரு நாள் நீ என்னைப் புரிஞ்சுப்பே!"

'த்தூ' என்று மனத்துக்குள் அவன் உமிழ்ந்தான். இப்போது எதிர்பாராமல் அப்பாவின் கோணம் புரிகிறார் போல் இருந்தது.

சரவணன் வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தபோது, காமாட்சி அவரை எதிர்நோக்கிக் காத்திருப்பவள் போல் தெரிந்தாள். முகத்தில் இலேசான பரபரப்பு தெரிந்தது.

"டில்லியிலேந்து யாரோ ஃபோன் பண்ணாங்க."

அவர் சட்டென்று நிமிர்ந்து பார்த்தார். அர்த்தம் புரியாமல் கோபம் வந்தது.

"யாரோன்னா?"


"இங்கிலீஷ்லே பேசினது எனக்குச் சரியா விளங்கல்லே. மறுபடி பண்ணுவாங்கபோல."

சரவணன் காத்திருந்தார். எதற்கு என்று புரியாமல்.

(தொடரும்)

ஆனா போனா புதினா!

உலக அளவில் இன்று வோட்டெடுப்பு நடத்தியதில், பெரிதும் விரும்பப்படும் ருசியும் மணமுமாக அறிவிக்கப்பட்டிருப்பது எது தெரியுமா...? 'மின்ட்' எனப்படும் புதினா சாறுதான்! காரம், மணம், குணம் நிறைந்த சத்துள்ள கீரை! வைட்டமின் 'ஏ', வைட்டமின் 'சி', உணவுச் சத்து, உயிர்ச்சத்து, தாது உப்பு, இரும்பு, கந்தகம், சுண்ணாம்பு என நிறைய ப்ளஸ் பாயிண்டுகளைத் தன்னுள்ளே வைத்திருந்தாலும், ஒரே ஒரு மைனஸ் பாயிண்டும் உண்டு! புதினா அதிக சூடு தரும். மூல நோய்க்காரர்களும், உடல் இளைத்தவர்களும் சாப்பிடவே கூடாது.



நம்முடைய சருமம் என்பது உடலின் ஆரோக்கியத்தைக் காட்டும் கண்ணாடி. சருமத்தில் நோய் தோன்றினால் இரத்தத்தில் ஏதோ மிஸ்டேக் என்று அர்த்தம். உடனடியாக சரும நோய் மருத்துவரை நாடுவதுதான் சிறந்தது என்றாலும், சிறந்த இரத்த சுத்தி செய்யும் புதினாவையும் துணைக்கு அழைத்துக் கொள்ளுங்களேன்!

புதினாவை ஆய்ந்து, சுத்தப்படுத்தி, நிழலில் காய வைத்து, நைஸாக அரைத்துக் கொள்ளவும். தினமும் அதிகாலை எழுந்ததும் ஒரு டம்ளர் வெந்நீரில், ஒரு டேபிள் ஸ்பூன் எலுமிச்சை சாறு, ஒரு டேபிள் ஸ்பூன் புதினா, ஒரு டேபிள் ஸ்பூன் தேன் கலந்து அருந்தி வர, இரத்தம் சுத்தமாகும். தேமல், சொறி, சிரங்கு, முகப்பரு, சரும அரிப்பு போன்ற சரும நோய்கள் குணமாகும்.

சிறுநீரகக் கோளாறுகள் வராமலிருக்கவும் புதினா பெரிதும் துணை செய்யும். இருமல், இரைப்பு போன்றவற்றால் அவதிப்படும் ஆஸ்துமா நோயாளிகள் புதினாவைத் துவையல் செய்து சாப்பிடலாம். மூட்டுவலி இருந்தால், மூவுலகமும் சொந்தமாக இருந்தாலும், எதையாவது அனுபவிக்க முடியுமா? மூட்டுவலிக்காரர்களும் புதினாவை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

பெரும்பாலான பற்பசைகளில் 'மின்ட் ஃப்ளேவர்' இருப்பதன் காரணம் சுவாசப் புத்துணர்ச்சி மட்டுமல்ல, புதினா சாற்றின் மருத்துவ குணாதிசயமும்தான். புதினா விதைகளை வாயிலிட்டு, மென்று, ஈறுகள், பற்கள் மீது படும்படி நன்றாகக் குதப்பி வந்தாலே, எந்தவிதமான பல் நோயும் அண்டாது. ஈறுகளில் ரத்தம் வடிவது நிற்கும். பற்கள் சுத்தமாக ஆரோக்கிய



மாக இருக்கும்.

கடைகளில் 'மிண்ட் ஆயில்' கிடைக்கிறது. இதைக் கைவசம் வைத்திருந்தால், ஆபத்துக்கு உதவும். திடீர்ப் பல்வலி, தலைவலி ஏற்பட்டால், இந்தப் புதினா எண்ணெயைச் சில சொட்டுகள் விட்டு, தேய்த்தாலே போதும். உடனடி சுகம் கிடைக்கும்.

"சோத்துல பாத்தி கட்டற வேலையெல்லாம் நான் செய்யறதே இல்லீங்க... ஆனாலும் எனக்கு அடிக்கடி புளி ஏப்பம், பித்த ஏப்பம் வருது. வாயில் நீர் ஊறுது. ஜீரணமே ஆக மாட்டேங்குது" என்று இனி யாரும் புலம்பத் தேவையில்லை.

இஞ்சியையும், புதினாவையும் மிதமான புளி, உப்பு, காரம் சேர்த்து அரைத்து துவையலாகச் செய்து சாப்பிட்டாலே புலம்பல் நின்றுவிடும்!

ஒரு தேக்கரண்டி புதினாச் சாறு, ஒரு தேக்கரண்டி பூண்டுச்சாறு, ஒரு தேக்கரண்டி எலுமிச்சை சாறு மூன்றையும் கலந்து, மயிர்க்கால்களில் படும்படி தேய்த்து, அரை மணி நேரம் ஊறியதும் அலசி விடுங்கள். பேன், பொடுகு தொல்லையிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான அழகான தலைமுடிக்குச் சொந்தக்காரர் ஆவீர்கள்.

இளைக்க விரும்புபவர்களுக்கு டிப்ஸ் : புதினா சாற்றில் தேனும் எலுமிச்சை சாறும் கலந்து தினமும் ஒரு தம்ளர் அருந்தி வரவும். படிப்படியாக இளைத்து, அழகான தோற்றம் பெறுவீர்கள்.

நாள்பட்ட புண்களையும், காயங்களையும் புதினா ஆற்றிவிடும். மஞ்சள், புதினா இரண்டையும் அரைத்து, காயம்பட்ட இடத்தில் பூசி வர, வலி குறைவதோடு, புண்களும் உடனே ஆறிவிடும்.

புலாவ், குருமா, கட்லெட், சமோஸா

மூலிகை கேலரி 15

ராஜம் முரளி

போன்றவற்றைச் செய்யும்போது மட்டுமே புதினா வாங்குவது என்றிருக்காமல், தினமும் வாங்கி சட்னி, துவையல் எனச் சாப்பிடுங்கள்...

படங்கள் : ஸ்ரீஹரி

● இந்த 'ப்ளாஷ்பேக்'கைப் படித்துவிட்டு சமகாலத்துக்கு வருவோம். தமிழ் உயர் மட்டக் குழு என்றொரு அமைப்பு இருக்கிறது. எல்லா வகையிலும் தமிழை முன் கொண்டு செல்ல நிறுவப்பட்ட அமைப்பு. தி.மு.க ஆட்சி காலத்தில் இந்தக் கூட்டம், அமைச்சர் தமிழ்க்குடிமகன் தலைமையில் நடந்தபோது ஒரு வாக்குவாதம் நடந்தது. முனைவர் நன்னன், தமிழ் பத்திரிகைகளில் வரும் எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுச் சாடினார்.

கோபத்தில் சோனியா!





உடனே 'தினமலர்' ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி "எங்கள் பத்திரிகையில் தமிழில் பட்ட மேற்படிப்புப் படித்தவர்களைத்தான் வேலைக்கு வைத்திருக்கிறோம். அப்படியும் தவறு வருகிறதென்றால் எங்கள் ஊழியர்களைக் குறை சொல்வதா? அல்லது அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்த தமிழாசிரியர்களைக் குறை சொல்வதா?' என்று தெரியவில்லை என எதிரடி அடித்தார். வாக்குவாதத்தில் அப்படிச் சொல்லிவிட்டாரே தவிர, இந்த விஷயத்தில் எதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்று உறுதி பூண்டு தமிழ் ஆர்வலர்களைக் கலந்து பேசினார் கிருஷ்ணமூர்த்தி. ஆங்கில மொழியைப் பொறுத்த மட்டில் கம்ப்யூட்டரில் Spell check என்றொரு மென்பொருள் உண்டு. அப்படியொரு மென்பொருளைத் தமிழில் தயாரித்து 'தவறில்லாத தமிழை' மக்களுக்குச் சொல்லித் தர முயற்சியெடுத்தார் கிருஷ்ணமூர்த்தி. அவரது முயற்சி முழு வடிவம் பெறவில்லை. அவர் கைவிட்டதைக் கையிலெடுத்து வெற்றிகண்டிருக்கிறார் (சசிகலா) நடராஜன். எழுத்துப் பிழை நீக்குவது, இலக்கண சுத்தமாகத் தமிழ் எழுதப் பயிற்சி என்று மக்களுக்கு வழிகாட்ட ஒரு குறுந்தட்டு (சி.டி) தயாரித்து விட்டார். சப்தம் போடாமல் தில்லியில் ஜனாதிபதி கையால் வெளியிடவும் செய்திருக்கிறார் நடராஜன்.

● "தலைவர் பதவியும் 75 சதவிகிதம் கட்சிப் பொறுப்புகளும் எங்களுக்குத் தர வேண்டும்" என்று த.மா.கா நிபந்தனை போட்டு, சேருவதை எதிர்த்து தமிழக காங்கிரஸில் உள்ள கோஷ்டிகள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியிருக்கின்றன. 'உண்மையில் பார்க்கப் போனால் த.மா.கா.வில் பிரமுகர்கள் இருக்கிறார்களே தவிர தொண்டர்கள் கிடையாது. எனவே அதன் நிபந்தனைகளுக்கு உட்படக்கூடாது' என்று நீண்ட கடிதம் ஒன்றை எல்லா கோஷ்டிகளைச் சேர்ந்தவர்களும் இணைந்து எழுத இருக்கிறார்களாம். த.மா.கா கையில் தமிழக காங்கிரஸை ஒப்படைத்தால், 'கட்சியிலிருந்து விலகவும் தயங்க மாட்டேன்' என்று வாழப்பாடியார் பயமுறுத்துகிறாராம்.

● 'பொடா', குஜராத் விவகாரங்களில் காங்கிரஸோடு ஒத்துழைப்பு கொடுக்காமல் இருந்த ஜெயலலிதா மீது கோபத்தில் இருந்தார் சோனியா. அம்மாவின் ஆதரவாளர்கள் ஜெ. பற்றிப் பேச்செடுத்தால் முகத்தைத் திருப்பிக்கொள்வாராம். விடுதலைப்புலிகள் விவகாரத்தில் அம்மாவின் நடவடிக்கைகள் சோனியாவைச் சந்தோஷப்படுத்துமா?

- சஞ்சயன்

● காதில் விழுந்தவை! ●

சிக்காத கதை!

'மனோரமா'வை அனைவருக்கும் தெரியும். மனோரமா என்றால், என்ன அர்த்தம் தெரியுமா?. மனத்துக்கு மகிழ்ச்சியைத் தருப வர். பிற்காலத்தில், கோடிக்கணக்கான ரசிகர் களை, தன் நகைச்சுவை மற்றும் குணச்சித்திர நடிப்பால் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடிக்கப் போகிறார் என்று எத்தனைத் தீர்க்கதரிசனத்துடன் இவருக்கு மனோ ரமா என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள் பார்த்தீர்களா?" என்று ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் கிருஷ்ணன் சொன்னதும் கைத்தட்டல் காதைப் பிளந்தது.

பத்மஸ்ரீ விருதுபெற்ற மனோரமாவுக்குக் கோவையில் நடந்த பாராட்டு விழா. கோவை கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நடத்திய இந்த விழாவுக்கு பாரதி ராஜா, ஜெமினி கணேசன், ஒய்.ஜி. மகேந்திரன், குமாரி சச்சு என்று திரையுலக வி.ஐ.பி.கள் மேடை நிறைக்க, கோவை மாநகராட்சி மேயர் மலரவன் தலைமை.

"சிவாஜியுடன் ஒரு தடவை, பேசிக் கொண்டிருந்தபோது, அவர் தம்முடன் நடித்த சக நடிகைகளின் நடிப்புத் திறமை பற்றி விமர்சித்துக் கொண்டே வந்தார். அப்போது 'நடிக் கிறபோது, நாம் ரொம்ப ஜாக்கிரதை யாய் இருக்கணும்னா அது ரெண்டு பேரிடம்தான். கொஞ்சம் அசந்துவிட் டால், நம்மைத் தூக்கிச் சாப்பிட்டு விடுவார்கள்' என்று பாராட்டினார். அந்த இருவரில் ஒருவர் பத்மினி. இன் னொருவர் மனோரமா" என்றார் ஒய்.ஜி.எம்.

மேயர் மலரவன், மனோ ரமா, நான்கு முதல்வர்களுடன் நடித்த சிறப்புக்குரியவர் என்று சொல்லி, எம்.ஜி.ஆர்., கலைஞர், ஜெ., என்.டி.ஆர். என்று அடுக்க, கடைசியில் மனோரமாவே, "என். டி.ஆர். என்பது தவறு. அண்ணா வுடன் நடித்திருக்கிறேன்'' என்று திருத்தினார்.



"நானும் மனோரமாவும் ரொம்ப சிநேகம். 'நானும் ஒரு பெண்' படத்தில் போலீஸ் லாக்அப்புக்குள் நாங்கள் இரண்டு பேரும் முட்டி, மோதி சண்டையிட்டுக் கொள்ள வேண்டிய காட்சி. ஆனால், நடிப் புக்குக்கூட சண்டை போட்டுக் கொள்ள எங்களால் முடிய வில்லை." என்று குறிப்பிட்டார் குமாரி சச்சு.

"மனோரமாவை ஆச்சி என்று சொல்கிறார் கள். அவர் உண்மையில் நகைச்சுவை 'ஆட்சி' " என்றார் ஜெமினி.

"இனிய தமிழ் மக்களே!" என்று ஆரம் பித்தார் பாரதிராஜா.

"ஒரு தஞ்சை பெரிய கோவில்தான். ஒரு தாஜ்மகால்தான். அதுபோல ஒரு சிவாஜிதான். ஒரு மனோரமாதான். சிவாஜியை நடிக்க வைக்க, எனக்கு ஒரு முதல் மரியாதை கதை கிடைத்ததுபோல, மனோரமாவுக்கு ஒரு கதை சிக்கமாட்டேன் என்கிறது. விரைவில் கிடைத்துவிடும். நானும் மனோரமாவின் திறமைக்குத் தீனி போடும்படி ஒரு கேரக்டரை உருவாக்கி, படம் எடுப் பேன்'' என்று பலத்த கரவொலிக்கிடையே கூறினார் பாரதிராஜா.



ஏற்புரை வழங்கிய மனோரமா, "நாற் பத்து மூணு வருஷங்களாக நான் நடித்துக் கொண்டிருக்கிறேன் என்றால், உடனே என் வயது என்ன? என்று கேட்பீர்கள். எனக்கு வயதை மறைக்க விருப்ப மில்லை. என் வயது இருபத்தி ஐந்துதான்" என்றதும் சிரிப்பலை. "அதற்குமேல் வயதாகிவிட்டதாக நான் என்றைக்குமே நினைத்தது இல்லை. வருடத்தையும், தேதியை யும், நேரத்தையும் மாற்றுகிற அதி காரம்தான் காலத்துக்கு இருக் கிறது. நம் மனத்தை மாற்றுகிற அதி காரம் யாருக்கும் கிடையாது."

தொகுப்பு : எஸ்.சந்திரமௌலி
படங்கள் : யோகா



காத்திருக்கும் அஸ்தி!


தொண்ணூற்றோரு ஆண்டுகளுக்கு முன்னால் நிகழ்ந்த கொடூரம் அது! வெள்ளைக்கார கலெக்டர் ஆஷ் துரையை, செங்கோட்டையைச் சேர்ந்த இளைஞன் வாஞ்சி சுட்டுக் கொன்றுத் தானும் தலையில் சுட்டுக் கொண்டு செத்துப் போனான். இதுதான் எல்லோருக்கும் தெரிந்த செய்தி. இது நடந்தது 1911 ஜூன் பதினேழாம் தேதி! வாஞ்சிக்கு வயது இருபத்தைந்து. திருமணம் ஆகியிருந்தது. மனைவி பொன்னம்மாள் அப்போது வயதுக்கு வரவில்லை. இதுபோல் விடுதலைப் போரில் இந்தியத் தீவிரவாதிகள் கையாண்ட வன்முறைகள் நிறைய உண்டு.

வாஞ்சி அய்யர் செத்ததோடு பிரச்னை முடியவில்லை. போலீஸ் சோதனைகள், கெடுபிடிகளிலிருந்து தப்ப முயன்ற அவருடைய கூட்டாளிகள் வக்கீல் வெங்கடேசுவர அய்யர், செங்கோட்டை தர்மராஜய்யா போன்ற இளைஞர்களும் தற்கொலை செய்து கொண்டார்கள். தலைமறைவான ஒட்டப்பிடாரம் மாடசாமிப்பிள்ளை என்பவர் என்ன ஆனார் என்பது கடைசிவரை யாருக்கும் தெரியாமலே போயிற்று. இவர்களின் சொத்துக்களை அரசு பறிமுதல் செய்தது.

இந்தத் தகவலைப் படிக்கிறபோது தமிழ் நாட்டுக்காரர்கள், தேச விடுதலைக்குத் தந்த விலை எவ்வளவு என்பது புரியும். மிகவும் அருமையாக இதுபோன்ற ஏராளமான செய்திகளைத் தம்முடைய 654 பக்க நூலில் பதிவு செய்திருக்கிறார் பத்திரிகையாளர் ஐ.சண்முகநாதன் (நாதன்).

இந்திப் போர், ஜஸ்டிஸ் கட்சி, திராவிடர் கழக, தி.மு.க. வரலாறுகள் காங்கிரஸ் இயக்கம் என்று தொடங்கி இன்றைய 'ஜெ' ஆட்சி வரை எல்லாச் செய்திகளையும் படுசுவாரஸ்யமாகத் தொகுத்துத் தந்திருக்கிறார் ஆசிரியர்.

ஐம்பதுகளில் பேசப்பட்ட ஆளவந்தார், லட்சுமி காந்தன் கொலை வழக்குகள் முதல், அண்மைக்கால ஆட்டோ சங்கர் ஜெயப் பிரகாஷ், நாவரசு விவகாரங்கள் வரை பரபரப்பூட்டிய வழக்குகளைப் பற்றிச் சொல்லி விருப்பது போலவே, ராஜீவ் காந்தி, இந்திரா காந்தி படுகொலை பற்றியும் விரிவாக எழுதியிருக்கிறார்.


• சண்முகநாதன்

மகாத்மா படுகொலையைப் பற்றிப் படிக்கிறபோது, அவரைக் கொன்ற நாதுராம் விநாயக் கோட்ஸேயின் அஸ்தி வெள்ளிக் கலசத்தில், பூனா நகரில் உள்ள ஒரு வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது என்கிற தகவலையும் எழுதுகிறார். பாக். பிரிவினையை எதிர்த்த அந்த இளைஞனின் கடைசி ஆசை இது: "என்னுடைய சாம்பல், சிந்து நதியில் கரைக்கப்பட வேண்டும். சிந்துநதி அகண்ட இந்துஸ்தானத்தில் ஓடிய காலம் மீண்டும் வரும். அதுவரை என் சாம்பலைப் பாதுகாக்க வேண்டும்."

யாருக்கும் தெரியாமல், கோட்ஸேயின் அஸ்தியைக் கொண்டுபோய் ஒரு சிற்றாற்றில் அதிகாரிகள் கொட்டினார்களாம். அப்படியும் அவருடைய ஆதரவாளர்கள்

எப்படியோ தகவல் அறிந்து அஸ்தியின் ஒரு பகுதியை மீட்டுவிட்டார்களாம்.

இதேபோல் ஜாலியன் வாலாபாக் படுகொலை. அதற்குக் காரணமாக இருந்த ஜெனரல் டயர், அவனைப் பாராட்டிய மைக்கேல் ஓ டயர், ஷெர்லாண்டு ஆகியவர்களை இருபத்தோரு ஆண்டுகள் கழித்துக் கொலை செய்யத் திட்டமிட்டு நிறைவேற்றிய உத்தம் சிங் வரலாறு, எல்லாம் படிக்கும் போது கண்களில் நீர் பெருகும். பக்கவாத நோயால் ஜெனரல் டயர் இயல்பாகவே செத்துப் போய் உத்தம்சிங்கின் வேலையில் மூன்றில் ஒரு பங்கைக் கெடுத்து விடுகிறான். மற்றவர்களை லண்டனிலேயே போய்ச் சுட்டுக் கொன்ற உத்தம்சிங்குக்கு மரண தண்டனை வழங்கப்பட்டபோது நீதிமன்றத்தில் அவன் சிரித்துக் கொண்டே சொன்னது: "நன்றி ஐயா! மிக்க நன்றி!"

முக்கியமான உலக அரசியல் நிகழ்வுகளையும் ஆசிரியர் விட்டு வைக்கவில்லை. முதல், இரண்டாம் உலகப் பெரும் போர்கள், கோயபல்ஸ் தற்கொலை, கென்னடி படுகொலை, புட்டோ தூக்கிலிடப்பட்டது. டைட்டானிக் கப்பல் மூழ்கியது. விண்வெளிச் சாதனைகள், விபத்துக்கள் எல்லாவற்றையும் படிக்கிறபோது ஒரு காட்சிசாலைக்குள் சுற்றி வந்த பிரமை உண்டாகிறது.

எத்தனையோ சிரமங்களை மேற்கொண்டுதான் தகவல்களைத் தொகுத்திருக்க வேண்டும். இருப்பினும் சில விடுபடல்கள் தென்படவே செய்கின்றன. குறிப்பாகத் தமிழறிஞர் கி.வா.ஜ.தெ.போ.மீ. வையாபுரிப் பிள்ளை, ப.ஜீவானந்தம் போன்றவர்களைப் பற்றிச் சிறு குறிப்புக் கூடக் கண்ணில் படவில்லை. இவ்வளவு சிறப்பான நூலுக்கு குறிப்பகராதி அவசியம் இல்லையோ?

எவ்வாறாயினும், ஐந்நூறு ரூபாய் விலையில், ஏராளமான படங்களோடு உருவாக்கப்பட்டுள்ள இந்த நூல் ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்திலும் இருக்க வேண்டும். வருங்காலத் தலைமுறைக்குப் பெரிதும் பயன்படும் — அவர்கள் தமிழ்ப் படிக்கிற பழக்கத்தை விட்டு விடாமலிருந்தால்!

'படிப்பை விட்டுவிட்டவர்கள்' பார்த்துப் பயன்பெறும் வகையில் சி.டி. ராமிலும் முழு நூல் வெளிவந்திருக்கிறது.

இருபதாம் நூற்றாண்டு வரலாறு. சண்முக நாதன். பூம்புகார் பதிப்பகம், சென்னை - 600 108. விலை ரூ.**500/-**

— சுப்ர. பாலன்


புத்தம் வீடு — ஹெப்ஸிபா ஜேசுதாசன்



தமிழில் சிறந்த நாவல்களுள் ஒன்றான இந்நாவலின் மூன்றாம் பதிப்பு இது. படித்து முடித்தால் பனைவிளை கிராமத்தில் வாழ்ந்து விட்டு வந்த உணர்வை ஏற்படுத்துகிறது இந்நாவல்.

மருதா பதிப்பகம், கடை எண்:3, அடித்தளம், ரியல் ரீஜென்ஸி, 102, பாரதி சாலை, சென்னை — 14. விலை ரூ. 70/-

வியத்தகு ஷீரடி சாயிபாபா — சொக்கலிங்கம் சுப்ரமணியன்.



பாபாவைப் பற்றி ஆர்தர் ஆஸ்பார்ன் ஆங்கிலத்தில் எழுதியவற்றின் தமிழாக்கம் இது. பாபாவின் வாழ்க்கை, போதனைகள், அற்புதங்கள் இதில் உள்ளன.

ஜி.எல். ஹவுஸ், 5/8 – C, சீதாராம் நகர், சாக்கோட்டை, கும்பகோணம் — 612 401. விலை ரூ. 50/-


உற்சாகம் + உழைப்பு = வெற்றி — சந்திரமௌலி



வார இதழ் ஒன்றில் வெளிவந்த பிரபலங்களின் வெற்றிக் கதைகளின் தொகுப்பு இந்நூல்.

தமிழ்ப்புத்தகாலயம்,
G 3/8 மாசிலாமணி தெரு,
பாண்டி பஜார், தி. நகர்,
சென்னை – 17.
விலை ரூ. 50/-

ப்ளஸ் ஸீரோ ஸீரோ மைனஸ் ஸீரோ — எஸ். ஷங்கரநாராயணன்



சிறுகதைகள். கவிதைத் தன்மையுடன் விரைந்து ஓடுகின்றன ஒவ்வொரு கதையும். ஏன் இப்படியொரு தலைப்போ?

அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை – 11. விலை ரூ. 60/-



• சாரா மேத்யூ

கைநீட்டும் கணவர்களே ஜாக்கிரதை!

பக்கத்து வீட்டில், குடும்பத் தகராறின் போது மனைவி மீது கணவன் வன்முறையைப் பிரயோகிக்கும் சமயம், மனிதாபிமானத்தோடு நாம் குறுக்கே புகுந்தால், "இது எங்க குடும்ப விவகாரம். உன் வேலையைப் பார்த்துக் கொண்டு போ" என்று கணவன் நம்மீது பாய்வார். அப்போது நாம் விலகிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணே போலீஸில் புகார் கொடுத்தால்தான் நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் நூற்றுக்கு 90 சதவீதம், பாதிக்கப்பட்ட பெண் தன் தலைவிதியை நொந்து கொண்டு மனத்துக்குள் அழுது கொண்டே வாழ்க்கையை நகர்த்துவாரே தவிர தைரியமாக போலீஸை நாடுவதில்லை. இந்த நிலை மாறப் போகிறது. இனி பக்கத்து வீட்டில் மனைவி மீது கணவன் வன்முறையில் இறங்கினால் யார் வேண்டுமானாலும் சம்



பந்தப்பட்ட அதிகாரியிடம் புகார் கொடுக்கலாம். ஆம்! வீட்டுக்குள் வன்முறையைத் தடுக்க சட்டம் வருகிறது.

"இப்படியொரு சட்டம் கொண்டுவர வேண்டும் என்பது பெண்கள் அமைப்புகளின் நெடு நாளைய கோரிக்கை. ஆனால் இப்போது சுற்றில் விடப்பட்டுள்ள இது பற்றிய வரைவு மசோதாவைப் பார்க்கும் போது, மிகவும் நீர்த்துப் போன வகையில் தான் பல அம்சங்கள் அதில் இடம் பெற்றிருக்கின்றன என்பது தெரிகிறது" என்கிறார் சாரா மேத்யூ. இவர் Feminists for Social Action என்ற அமைப்பின் தலைவர்.



1995ல் பீஜிங்கில் கூடிய உலக பெண்கள் மாநாட்டில் பெண்களுக்கெதிரான குற்றங்களைத் தடுத்து நிறுத்த கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. குறிப்பாக குடும்பத்தில் பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் வன்கொடுமைகள் அதிகரித்து வருவதாகவும், ஒவ்வொரு நாடும் அந்தக் கொடுமைகளைத் தடுக்க சட்டம் இயற்ற வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையும் இதற்கு ஆதரவை முழுமையாகத் தெரிவித்தது. மாநாட்டின் முடிவில், வீட்டுக்குள் நிகழ்த்தப்படும் வன்முறைகளைத் தடுக்க எல்லா நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையின் வழிகாட்டுதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டது.

இதைத் தொடர்ந்து மத்திய அரசு, தில்லியில் உள்ள பெண்கள் அமைப்புகளிடம், பாராளுமன்றத்தில் தாக்கல் செய்ய ஒரு வரைவு மசோதாவைத் தயாரித்து தரும்படி கேட்டுக் கொண்டது. அதன்படி பல மாதங்கள் சிரமப்பட்டு ஒரு விஸ்தாரமான, சகல அம்சங்களையும் கொண்ட வரைவு மசோதாவை தயாரித்துக் கொடுத்தன அவ்வமைப்புகள். அதன் அடிப்படையில் மத்திய அரசு ஒரு வரைவு மசோதாவைத் தயாரித்து, பெண்கள் அமைப்புகளின் பார்வைக்கு அனுப்பி வைத்தது. அதைப் பார்த்ததும் அவர்களுக்கு ஷாக்!

தாங்கள் தயாரித்துக் கொடுத்திருந்த வரைவு மசோதாவில் இருந்த பல அம்சங்கள் மத்திய அரசு தயாரித்திருந்த வரைவு மசோதாவில் இல்லை. இப்போது நாடு முழுவதும் உள்ள பெண்கள் அமைப்புகள், வீட்டுக்குள் நிகழ்த்தப்படும் வன்முறைகளை முழுதாகத் தடுக்கும் அளவுக்கு உறுதியான முறையில் இச்சட்டம் கொண்டு வரப்படவேண்டுமே தவிர, ஏனோ தானோவென்று நிறைவேற்றக் கூடாது" என்று மத்திய அரசை வலியுறுத்தி கருத்தரங்குகளையும், போராட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் அமைப்புகளின் நடவடிக்கை குழு அமைப்பாளராக இருப்பவர்தான் சாராமேத்யூ.

"அரசு தயாரித்துள்ள வரைவு திட்டம்



ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் மற்றும் வழி காட்டும் நெறிமுறைகளிலிருந்து மாறுபட்டு இருக்கிறது. வீட்டுக்குள் நிகழும் வன்முறைகள் குறித்த தெளிவான பார்வையும் அதில் இல்லை. அப்படிப்பட்ட வன்முறைகளுக்குத் தண்டனையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும் சரியாகக் குறிப்பிடப்படவில்லை. வருந்தத்தக்க அளவில் தொடர்ந்து ஒருவர் குடும்பத்தில் பாதிக்கப்படுவாரேயானால், அவர் நிவாரணத்துக்குக் கோர்ட்டுக்குப் போகலாம் என்று அரசு சொல்கிறது. ''வருந்தத்தக்க அளவில்'' என்பது தெளிவற்ற நீர்த்துப் போன வாசகம். உங்களுக்கு வருந்தத்தக்க அளவில் இருக்கும் விவகாரம் மற்றொருவருக்கு அது போல இருக்காது. மேலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டால் தான் கோர்ட்டுக்குப் போக வேண்டுமாம். வீட்டுக்குள் வன்முறை என்பதை முதல் நிகழ்விலேயே தடுத்து நிறுத்தும் வகையில்தான் சட்டம் கொண்டு வர வேண்டும். இது தவிர உடல் ரீதியாக ஒருவரைத் தாக்கினால் மட்டும் தான் வன்முறை என்பதல்ல; மன ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் ஒருவரைக் காயப்படுத்த முடியும். அரசு சட்ட வடிவில் இவை குறிப்பிடப்படவில்லை.

"மேலும், நிவாரணம் பெறுவதற்கு, பாதிக்கப்பட்டவர்கள் பொதுவான நீதிமன்றங்களை அணுக வேண்டும் என்று அரசு சொல்கிறது. இப்படி அணுகும்போது தாமதமாவது ஒரு பக்கமிருக்க, வழக்கு கிரிமினல் சட்ட அடிப்படைகளில் விசாரிக்கப்பட்டு இறுதியில் திருமண உறவே முறிந்து போகிறது. ஆனால் ஒரு பெண் திருமண முறிவு என்பதை மிக, மிகக் கடைசி நிவாரணமாகவே பார்க்கிறாள். அவளது நோக்கம், வன்முறை நிறுத்தப்பட்டு வாழ்க்கை, சுமுகமாகத் தொடர வேண்டும் என்பதுதான். எனவே அந்த வன்முறை தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்பதே அவள் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

இந்த நிலையில், வர இருக்கும் வன்முறைத் தடுப்புச் சட்டம் குடும்ப நீதிமன்றங்களின் மூலமே நிலை நிறுத்தப்பட்ட வேண்டும். அந்த குடும்ப நீதிமன்றங்களில் நீதிபதிகளுக்கு உதவியாக, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு வழி காட்டும் விதத்தில் அதிகாரிகள் (Protection officers) நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் புகார்களைப் பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், ஒரு குடும்ப விவகாரத்தில் வன்முறை நிறுத்தப்படாத சூழலில், திருமண முறிவுதான் தீர்வு என்று வருகிறபோது, குறிப்பிட்ட வழக்கு பற்றிய விவகாரங்கள் குடும்ப நீதி மன்றங்களில் ஏற்கெனவே இருப்பதால் நீதிபதிகள் விரைந்து முடிவு எடுக்க

ஹிட்லருக்கு ஒருநாள் தன் வாழ்நாள் எதுவரையில் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ரொம்பவும் ஆர்வமாக இருந்தது. ஒரு பிரபல ஜோசியரை வரவழைத்துக் கேட்டார்:

''ஜோசியரே.... மறைக்காமல் சொல்ல வேண்டும். நான் எப்போது இறப்பேன்?''

ஜோசியர் யோசித்து விட்டுச் சொன்னார்:

''யூதர்களின் விடுமுறை நாளன்று...!''

''யூதர்களுக்கு என்று விடுமுறை?''

''நீங்கள் இறக்கும் நாளன்றுதான்!''

— திருநள்ளாறு இ.ஜே.தீன்




உதவும். ஆகவே எங்கள் கோரிக்கை இந்தச் சட்டம் குடும்ப நீதிமன்றங்களின் அதிகார வரம்புக்குள் இருக்க வேண்டும்.

"தற்போது நரித்தனமாக சில ஆண்கள், வரதட்சணை மற்றும் வேறு பல காரணங் களுக்காக மனைவியைக் கொடுமைப்படுத்தி விட்டு, ''உங்கம்மா வீட்டுக்குப் போய்த் தொலை" என்று துரத்தி விடுகிறார்கள். பிறகு சில மாதங்கள் அந்தப் பெண் தாய்வீட்டில் இருப்பதையே காரணம் காட்டி, நைஸாக நீதிமன்றத்தை அணுகி விவாகரத்துக்கு அனுமதி கேட்கிறார்கள். இது போன்ற போக்குகளை இந்தச் சட்டத்தின் மூலம் தடுக்க வேண்டும். வரப்போகும் இந்தத் தடுப் புச் சட்டத்தின்படி நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலும், தொடர்ந்து ஒரு மனைவியான வள் கணவன் வீட்டிலேயே இருக்க வழி செய்ய வேண்டும். அதே வீட்டிலேயே தொடர்ந்து வாழ அவளுக்கு உரிமையுண்டு. இதன் மூலம் கணவனைத் திருத்துவதற்கும் ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

"இதுபோன்ற வழக்குகளை, குடும்ப நீதி மன்றத்துடன் இணைக்கப்பட்டுள்ள அதி காரி (Protection officers) நேரிடையாக கண்காணித்து வன்முறைகள் தொடரா வண்ணமும், மனைவி எந்த பிரச்னையுமில் லாமல் அதே வீட்டில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாரா? என்பதையும் கண் காணிக்க வேண்டும்.

"அரசு தயாரித்துள்ள வரைவு சட்டத்தில் ஒருவருக்குத் தன்னையும், தன் சொத்துக் களையும் காப்பாற்றிக் கொள்ள உரிமை உண்டு என்று சொல்லப்பட்டிருப்பது வேடிக்கையான ஒன்று. தவறு செய்யும் ஆண்களைத் தப்ப விடும் நோக்கில் இந்த ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறதோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது.. மற்ற சட்டங்களில் காணப்படும் பொதுவான இந்த அம்சத்தை எடுத்து இதிலும் புகுத்தி விட்டார்கள். வீட்டுக்குள் நடக்கும் வன்முறையில் 99சதவிகிதம் பாதிக்கப் படுவது பெண்கள்தான். அவள்தான் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறாள். அது தவிர ஒரு வீட்டில் இருக்கும் அசையும், அசையா சொத்துக்கள், கணவன் – மனைவி என்று இருவருக்கும் பொதுவானவை. எனவே கணவன் மட்டும் அதற்கு உரிமை கொண் டாட முடியாது. இவ்வாறு அரசின் சட்ட



முன் வடிவில் பல அம்சங்களை மாற்ற வேண்டியுள்ளது. அப்படி மாற்றி பாராளு மன்ற அங்கீகாரம் பெற்றால்தான், அந்த சட்டம் உறுதியாகவும், நோக்கம் நிறை வேறும் அளவிலும் இருக்கும்" என்கிறார் சாரா மேத்யூ.

'வீட்டிற்குள் வன்முறை என்றால் பாதிக் கப்படுவது பெண்கள் என்ற அடிப்படை யிலேயே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். மன ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் ஆண்கள் கூட பாதிக்கப்படலாமே! அவர்களுக்கு என்ன நிவாரணம்?"

"நீங்கள் சொல்வது போன்ற வழக்குகளை இத்தனை பெரிய சமுதாயத்தில் விரல் விட்டு எண்ணி விடலாம். இருந்தும் வீட்டுக் குள் வன்முறை தடுப்புச் சடத்தில் "பாதிக் கப்படுபவர்கள்" என்று குறிப்பிட்டிருக்கிறதே தவிர "பெண்கள்" என்று போடவில்லை" என்கிறார் சாரா மேத்யூ.

— ப்ரியன்

படம் : ராஜன்



சிவகாமியின் சபதம்

இருபத்து நான்காம் அத்தியாயம்

புள்ளலூர்ச் சண்டை

கண்ணபிரான் ரதத்தை விட்டுக் குதித்துக் குதிரைகளின் தலைக் கயிறுகளைப் பிடித்துக்கொண்டே, சிவகாமியை நெருங்கி வந்து, ''தங்கச்சி! இதென்ன? இங்கே எப்போது வந்தீர்கள்? இது என்ன ஊர்?' என்று துரிதமாய்க் கேட்டான்.

''சிதம்பரம் போகலாமென்று கிளம்பி வந்தோம், அண்ணா! வழியில் இங்கே தங்கினோம். இந்த ஊருக்கு அசோகபுரம் என்று பெயராம். அதோ அசோக மகாராஜாவின் ஸ்தம்பம் தெரிகிறதே! நீங்கள் பார்க்கவில்லையா?'' என்றாள் சிவகாமி.

''அதையெல்லாம் பார்க்க எனக்கு இப்போது சாவகாசமில்லை. ஆமாம், நீங்கள் என்னத்திற்காக இவ்வளவு அவசரப்பட்டுக்கொண்டு யாத்திரை கிளம்பினீர்கள்...!

''அந்தக் காட்டு வீட்டில் இந்த யுத்த காலத்திலே தனியாக இருப்பானேன் என்றுதான் கிளம்பினோம். குமார சக்கரவர்த்தியுந்தான் எங்களை அடியோடு மறந்து விட்டாரே....!''

''என்ன வார்த்தை, அம்மா சொல்கிறாய்? மாமல்லராவது, உங்களை மறப்பதாவது? போர்க்களத்துக்குப் போகும்படி சக்கரவர்த்தியிடமிருந்து அனுமதி வந்ததும், முதலில் உங்கள் வீட்டைத் தேடிக் கொண்டுதானே வந்தோம்!

அமரர் கல்கி

வீடு பூட்டிக் கிடந்ததைக் கண்டதும் மாமல்லருக்கு என்ன கோபம் வந்தது தெரியுமா?"

"எட்டு மாதம் எங்களை எட்டிப்பாராமலே இருந்தவருக்குக் கோபம் வேறேயா? போகட்டும், எங்கே இப்படி எல்லோரும் தலைதெறிக்க ஓடுகிறீர்கள்?"

"புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிக் கேள்விப்படவில்லையா?" என்று சொல்லிக்கொண்டே கண்ணன் ரதத்தில் ஏறினான்.

"ஓகோ! சண்டைக்குப் பயந்து கொண்டா இப்படி ஓடுகிறீர்கள்?" என்று சிவகாமி பரிகாசச் சிரிப்புடன் கேட்டாள்.

"இல்லை, அம்மா, இல்லை. சண்டைக்குப் பயந்து ஓடுகிறவர்களை நாங்கள் துரத்திக்கொண்டு ஓடுகிறோம். தங்கச்சி! நீ மட்டும் இங்கேயே இருந்தால், நான் திரும்பி வரும்போது இந்த ரதத்தின் சக்கரத்திலே கங்கபாடி அரசன் துர்விநீதனைக் கட்டிக்கொண்டு வருவதைப் பார்ப்பாய்!" என்றான்.

"அண்ணா! நான் கட்டாயம் இங்கேயே இருக்கிறேன். மாமல்லரிடமும் சொல்லுங்கள்!" என்று சிவகாமி கூறி, மறுபடியும் தயக்கத்துடன், "நான் ஏதாவது தவறு செய்திருந்தாலும் மன்னித்துக் கொள்ளும்படி சொல்லுங்கள்!" என்றாள்.

அதேசமயத்தில் கண்ணன் சாட்டையைச் சுளீர் என்று சொடுக்கவே, குதிரைகள் பிய்த்துக்கொண்டு கிளம்பின. கண்





ணன் தலையை மட்டும் திருப்பி, 'ஆகட்டும்' என்பதற்கு அறிகுறியாகக் குனிந்து சமிக்ஞை செய்தான்.

மறுகணம் ரதம் மாயமாய்ப் பறந்துசென்றுவிட்டது.

அப்போது உள்ளே இருந்து வந்த ஆயனர், ''சிவகாமி! யாருடன் பேசிக் கொண்டிருந்தாய்? ரதத்திலே போனது யார்?'' என்று கேட்டார்.

''கண்ணபிரான், அப்பா! ரதத்துக்கு முன்னால் குதிரை மேல் மாமல்லரும் பரஞ்சோதியும் போனார்கள்!''

''அப்படியா? நாம் அவர்களை விட்டு விட்டு வந்தாலும் அவர்கள் நம்மைவிட மாட்டார்கள் போலிருக்கிறதே?''

''அவர்கள் நமக்காக வரவில்லை, அப்பா!''

''நமக்காக அவர்கள் ஏன் வரப் போகிறார்கள்? சிற்பியின் வீட்டைத் தேடிச் சக்கரவர்த்திகள் வந்த காலம் எல்லாம் மலை ஏறிப்போய்விட்டது, சிவகாமி!''

''அப்படிச் சொல்லாதீர்கள், அப்பா! கோட்டையை விட்டுக் கிளம்ப அனுமதி கிடைத்தவுடனே மாமல்லர் நம்முடைய வீட்டைத் தேடிக்கொண்டுதான் வந்தாராம்.''

''அப்படியானால் குண்டோதரன் சொன்னது உண்மைதானா?'' என்று கேட்டார் ஆயனர்.

''ஆமாம், நாம் வீட்டில் இல்லாமற் போனதில் மாமல்லருக்குக் கோபம் என்பதும் உண்மைதான்.''

''அதனால்தான் நான் சொன்னேன், இருக்கும் இடத்திலேயே இருப்போம் என்று. நீ பிடிவாதம் பிடித்து, தேச யாத்திரை கிளம்ப வேண்டுமென்று ஒற்றைக் காலால் நின்றாய்! அதன் பலனைப் பார்!''

ஆயனருக்கு மனம் கசந்து போயிருந்தபடியால் இப்படியெல்லாம் பிறர் மேல் குறை சொல்வது கொஞ்ச நாளாக வழக்கமாய்ப் போயிருந்தது. எனினும், இப்போது அவர் கூறியது உண்மையான படியால், சிவகாமிக்குப் பெரிதும் வேதனை உண்டாயிற்று.

''போனதைப் பற்றிச் சொல்லி என்ன பயன், அப்பா?''

''ஒன்றுமில்லைதான்; இருந்தாலும், இந்த வழியாய்ப் போனவர்கள் சற்று நின்று நம்மைப் பார்த்து விட்டுப் போகக்கூடாதா? ஒரு காலத்தில் மாமல்லர் நம்மிடம் எவ்வளவு பிரியமாயிருந்தார்?''

''பிரியத்துக்கு இப்போதுதான் என்ன குறைவு வந்தது? இது யுத்த காலமல்லவா? அதனால் எல்லாருக்கும் அவசரமாயிருக்கிறது. திரும்பி வரும்போது மாமல்லர் இங்கே வந்து நம்மைப் பார்ப்பார் என்று கண்ணபிரான் சொன்னான், அப்பா!''

''அந்தமட்டில் சந்தோஷம். ஆனால் எதற்காக இப்படி எல்லாரும் ஓடுகிறார்களாம்!''

''புள்ளலூர் என்னுமிடத்தில் பெரிய யுத்தம் நடந்ததாம்...!''

''ஓகோ! யுத்தகளத்திலிருந்துதான் இப்படி ஓடுகிறார்களாக்கும்! ஆஹா! காலம் எப்படி மாறிவிட்டது! முன் காலத்தில் போருக்குப் புறப்படுகிறவர்கள் வெற்றி அல்லது வீர சொர்க்கம் என்று உறுதியுடன் கிளம்புவார்கள். போர்க்களத்தில் முதுகு காட்டி ஓடுவதைப் போல் கேவலம் வேறொன்றுமில்லை என்று நினைப்பார்கள்...''

''அப்பா! இந்த யுத்தத்தில் போர்க்களத்திலிருந்து ஓடியவர்கள் எதிரிகள்தான். அது உங்களுக்குத் திருப்தி

தானே?"

"அதிலே என்ன திருப்தி? சுத்த வீரர்களை வென்று ஜயக்கொடி நாட்டினால் புகழும் பெருமையும் உண்டு. புறமுதுகிட்டு ஓடுகிறவர்களைத் துரத்தி ஜயிப்பதில் என்ன கௌரவம் இருக்கிறது?"

எந்த வழியிலும் ஆயனரைத் திருப்தி செய்ய முடியாது என்பதைக் கண்ட சிவகாமி அவருடன் பேசுவதில் பயனில்லையென்று தீர்மானித்து மௌனம் பூண்டாள். இருவருடைய உள்ளங்களும் வெவ்வேறு சிந்தனையில் ஆழ்ந்தன.

அன்று சூரியன் அஸ்தமிக்க ஒரு நாழிகை இருக்கும்போது குண்டோதரன் திடும் பிரவேசமாக வந்து சேர்ந்தான். அவன் எங்கே போயிருந்தான். புத்த பிக்ஷுவைக் கண்டுபிடித்தானா, குதிரை திரும்பக் கிடைத்ததா என்னும் விஷயங்களைப் பற்றி ஆயனரும், சிவகாமியும் ஆவலுடன் அவனை விசாரித்தார்கள்.

"அதை ஏன் கேட்கிறீர்கள், போங்கள்! உங்களுடைய சொல்லைத் தட்டிவிட்டு புத்த பிக்ஷுவைப் பிடிப்பதற்காக ஓடினாலும் ஓடினேன்; நேரே யுத்த களத்திலேயே போய் மாட்டிக்கொண்டேன். அப்பப்பா! இந்த மாதிரி பயங்கர யுத்தத்தை நான் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை!" என்றான் குண்டோதரன்.

சிவகாமி, "என்ன சண்டை? எங்கே நடந்தது? சண்டை முடிவு என்ன ஆயிற்று?" என்று கேட்டாள்.

அதன்பேரில் குண்டோதரன் புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி விவரமாகக் கூறினான். பழந்தமிழ் நாட்டின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்ற அந்தப் புள்ளலூர்ச் சண்டையைப் பற்றி இப்போது வாசகர்களும் தெரிந்துகொள்வது அவசியமாகும்!

வாதாபிப் புலிகேசியின் சைன்யம் பல்லவ சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்து வந்த சில நாளைக்கெல்லாம் கங்க நாட்டு அரசன் துர்விநீதனுடைய சைன்யம் திரண்டு பல்லவ இராஜ்யத்தின் மேற்கு எல்லையில் வந்து நின்றது. வாதாபி சைன்யத்தினால் பல்லவர் படை முறியடிக்கப்பட்டது என்ற செய்தி வந்ததும் பல்லவ இராஜ்யத்துக்குள் பிரவேசிக்க ஆயத்தமாக அந்தச் சைன்யம் காத்துக்கொண்டிருந்தது. ஆனால், திடீரென்று துர்விநீதனுக்கு என்ன தோன்றிற்றோ என்னவோ, தெரியவில்லை. ஒருநாள் கங்கநாட்டு சைன்யம் பல்லவ இராஜ்யத்துக்குள் நுழைந்துவிட்டதென்றும் காஞ்சியை நோக்கி முன்னேறி வருகிறதென்றும் தெரிந்தது. இதையறிந்த மகேந்திர பல்லவர் வடக்குப் போர் முனையிலிருந்து குமார சக்கரவர்த்திக்குக் கட்டளை அனுப்பினார். திருக்கழுக்குன்றத்திலுள்ள பாதுகாப்புப் படையுடன் சென்று கங்க நாட்டுச் சைன்யம் காஞ்சியை அணுகுவதற்கு முன் அதை எதிர்க்கும்படியாகச் சொல்லி அனுப்பினார். இத்தகைய கட்டளைக்காக எட்டு மாத காலமாகத் துடிதுடித்துக் கொண்டிருந்த மாமல்ல நரசிம்மர் தளபதி பரஞ்சோதியுடன் உடனே கிளம்பிச் சென்று திருக்கழுக்குன்றத்திலிருந்த படைக்குத் தலைமை வகித்து நடத்திச் சென்றார். காஞ்சி நகருக்குத் தென் மேற்கே இரண்டு காத தூரத்தில் புள்ளலூர்க் கிராமத்து எல்லை

யிலே இரண்டு சைன்யங்களும் சந்தித்தன.

மாமல்லர் தலைமை வகித்த பல்லவ சைன்யத்தைக் காட்டிலும் கங்க நாட்டுச் சைன்யம் மூன்று மடங்கு பெரியது. ஆனாலும், மாமல்லரின் வீரப்படை கங்கநாட்டுச் சைன்யத்தின் மேல் எதிர்பாராத சமயத்தில் இடி விழுவது போல் விழுந்தது. மாமல்லரும் பரஞ்சோதியும் கையாண்ட யுத்த தந்திரங்களும், போர்க்களத்தில் முன்னணியில் நின்று நிகழ்த்திய வீரச் செயல்களும், பல்லவ வீரர்களுக்கு இணையில்லாத உற்சாகத்தையும் துணிச்சலையும் அளித்தன.

போர் உச்சநிலை அடைந்தபோது கங்க சைன்யத்தை மற்றொரு பக்கத்தில் இன்னொரு



புதிய படை தாக்குவதாக வதந்தி உண்டாயிற்று. அவ்வளவுதான்! அத்தனை நேரமும் ஒருவாறு தைரியமாகப் போரிட்டு வந்த கங்க சைன்யத்தின் வீரர்களைப் பீதி பிடித்தது. உயிர் பிழைத் தாற்போதும் என்று கங்க வீரர்கள் சிதறி ஓட ஆரம்பித்தார்கள்.

கங்க நாட்டரசன் துர்விநீதன் பட்டத்து யானை மேல் ஏறிக்கொண்டு தெற்குத் திக்கை நோக்கி ஓடிக் கொண்டிருந்ததாகச் செய்தி வந்தது. அவனை எப்படியாவது சிறைப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்து மாமல்லரும் பரஞ்சோதியும் பல்லவ சைன்யத்தைச் சிறு சிறு படைகளாகப் பிரித்துத் தெற்கு நோக்கிப் பல வழிகளிலும் போகச் சொல்லி விட்டுத் தாங்களும் அதே திசையில் அதிவேகமாகச் சென்றார்கள்.

போர்க்களத்தில் நறிகெட்டு ஓடிய ஒரு குதிரையைக் கைப்பற்றி அதன் மேல் ஏறிக்கொண்டு குண்டோதரனும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்தான். துரதிர்ஷ்ட வசமாக வழியில் அவன் ஏறி வந்த குதிரை காலை ஒடித்துக்கொண்டது. அதனால் அவன் பின்னால் தங்கி விடும்படி நேர்ந்தது. குதிரையை அப்படியே விட்டு விட்டுக் கால் நடையாக நடந்து அசோகபுரம் வந்து சேர்ந்ததாகக் கூறிக் குண்டோதரன் அவனுடைய வரலாற்றை முடித்தான்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

"திருப்பாற் கடல்"

புள்ளலூர்ச் சண்டையைப் பற்றிக் குண்டோதரன் கூறிய விவரங்களைக் கேட்கக் கேட்க, மேலும் மேலும் அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்னும் ஆவல் ஆயனருக்கும் சிவகாமிக்கும் பொங்கிப் பெருகியது. முக்கியமாகப் போர்க்களத்தில் மாமல்லர் நிகழ்த்திய அதி அற்புத தீரச் செயல்களைப் பற்றிக் கேட்பதில் சிவகாமி அடங்காத தாகம் கொண்டிருந்தாள். குண்டோதரனும் குதூகலத்துடன் அந்த வீரச் செயல்களை வர்ணித்தான்:

"ஆஹா! போர்க்களத்தில் எதிரிகளுக்கிடையில் புகுந்து மாமல்லர் வீர வாளைச் சுழற்றியபோது எப்படியிருந்தது தெரியுமா? அது கேவலம் வாளாகவே தோன்றவில்லை. திருமாவின் சக்ராயுதத்தைப் போலவே சுழன்று ஜொலித்தது! அந்த வாளிலிருந்து கணந்தோறும் நூறு நூறு மின்னல்கள் மின்னின. ஒவ்வொரு மின்னலும் ஒவ்வோர் எதிரியின் தலையைத் துண்டித்து எறிந்தது....!"

இப்படி வர்ணித்துக்கொண்டே இருந்த குண்டோதரன் திடீரென்று நிறுத்தி "குருவே! * இந்த விஹாரத்திலிருந்த வயோதிக புத்த பிக்ஷு எங்கே?" என்று கேட்டான்.

"அப்பனே! நாங்கள் வந்ததிலிருந்து அவர் பெரும்பாலும் இங்கே இருப்பதில்லை. அநேகமாக சைத்யத்திலேயே இருக்கிறார். தினம் இரண்டு தடவை இங்கே வந்து எங்களுக்கு என்ன வேண்டும் என்று விசாரித்து விட்டுப் போய் விடுகிறார்!" என்றார் ஆயனர்.

"குருவே! அவரை அவசரமாகப்

---

* "விஹாரம்" என்பது புத்த பெருமானின் கோயிலும் பௌத்த பிக்ஷுக்கள் தங்கும் மடமும் சேர்ந்து அமைந்தது. "சைத்யம்" என்பது புத்த பகவானின் தனிப்பட்ட ஆலயமாகும்.

பார்க்க வேண்டும். பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனான்.

குண்டோதரன் விஹாரத்திலிருந்து கிளம்பி வாசலில் வந்தபோது சூரியன் அஸ்தமித்து அந்தி மயங்கிக் கொண்டிருந்த நேரம். ஆனால், அன்று சாதாரண அந்திநேரமாகக் காணப்படவில்லை. இரவானது திடீரென்று இருண்டு திரண்டு நாற்புறமும் சூழ்ந்து வந்ததாகத் தோன்றியது. இதற்குக் காரணம் என்னவென்று குண்டோதரன் வானத்தை நோக்கியபோது, வடக்குத் திக்கில் மைபோல் கருத்த கொண்டல்கள் திரள் திரளாக மேலே எழுந்து வருவதைக் கண்டான். "ஆஹா! இன்றிரவு பெருங் காற்றும் மழையும் திருவிளையாடல் புரியப் போகின்றன. பகலெல்லாம் அவ்வளவு புழுக்கமாயிருந்த காரணம் இதுதான் போலும்!" என்று குண்டோதரன் தனக்குள் சொல்லிக்கொண்டான்.

அவர்கள் தங்கியிருந்த விஹாரத்திலிருந்து சற்றுத் தூரத்தில் தனித்திருந்த பாழடைந்த புத்த சைத்யத்தைக் குண்டோதரன் நெருங்கியபோது உள்ளேயிருந்து பேச்சுக்குரல் வந்தது.

வெளியிலேயே இருள் கவிழ்ந்து சூழ்ந்திருந்த நிலையில், சைத்யத்துக்குள் குடி கொண்டிருந்த அந்தகாரம் எப்படியிருந்திருக்க வேண்டுமென்று சொல்ல வேண்டியதில்லை. அந்தக் கன்னங்கரிய இருளின் உதவியால் குண்டோதரன் பேச்சுக் குரல் வந்த இடத்துக்கு வெகு சமீபத்தில் போய் மூச்சுக் கூடக் கெட்டியாக விடாமல் தூண் மறைவில் நின்றான். பின்வரும் சம்பாஷணை அவன் காதில் விழுந்தது:

"உடனே, இந்தக் கணமே, அவர்களை அழைத்துக்கொண்டு கிளம்புங்கள். பொழுது விடிவதற்குள்ளாக வராக நதியைத் தாண்டி விட வேண்டும். வழியிலுள்ள கிராமங்களில் வண்டி கிடைத்தால் ஏற்றிக்கொண்டு போங்கள். எப்படியும் நாளைச் சூரியோதயத்துக்குள் வராக நதியைத் தாண்டி விடுங்கள்."

"அவர்கள் கிளம்ப மறுத்தால்...?"

"தொல்லைதான், ஏதோ ஒரு பிசகினால் நான் போட்ட திட்டமெல்லாம் வீணாய்ப் போய்விட்டது. ஆனாலும், புத்த பகவான் அருளால் எல்லாம் ஒழுங்காகிவிடும். அவர்களிடம் எதையாவது சொல்லிப் புறப்படச் செய்யுங்கள். இங்கே பெரிய சண்டை நடக்கப் போவதாகச் சொல்லுங்கள். இதெல்லாம் ஒன்றும் பலிக்காவிட்டால், திருப்பாற்கடல் உடைப்பு எடுத்துக்கொண்டு விட்டதாகச் சொல்லுங்கள்!"

"சுவாமி! இது என்ன சொல்கிறீர்கள்?"

"ஆம்; திருப்பாற்கடல் ஏற்கெனவே அலைமோதிக் கொண்டிருக்கிறது. புத்த பகவான் கருணையினால் இன்று மழை பெய்தால் கட்டாயம் கரை உடைத்துக்கொள்ளும்..." என்று கூறி, நாகநந்தி தமது ஆழ்ந்த பயங்கரக் குலில் சிரித்தார்.

புத்த பிக்ஷு மேலும் கூறிய மொழிகள் முன்னைக் காட்டிலும் மெதுவான குரலில் வெளிவந்தன.

"அப்படியும் அவர்கள் கிளம்பாமல், உடைப்பு எடுத்து வெள்ளமும் வந்துவிட்டால், என்ன செய்ய வேண்டும் தெரியுமா? விஹாரத்தில் இன்னும் ஒரு தெப்பம் மீதி இருக்கிறதல்லவா? அதில் ஏற்றிக்கொண்டு, போன மாதம் பார்த்த பாறை மேட்டுக்குப் போய்ச் சேருங்கள். மற்றவர்கள் எப்படியானாலும் சிவகாமியைக் கட்டாயம் காப்பாற்றியாக வேண்டும். தெரியுமா சுவாமி!"

மேற்படி சம்பாஷணையில் கடைசிப் பகுதியைக் கேட்டுக்கொண்



டிருந்தபோது, குண்டோதரனுக்கு நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. நாகநந்தியின் சிரிப்பு அவனுடைய தேகத்தைச் சிலிர்க்கச் செய்தது. அன்று ராத்திரி ஏதோ பெரிய விபரீதம் ஏற்படப் போகிற தென்பதையும், அதைத் தடுக்க வேண்டிய பொறுப்பு தன்னுடைய தலையில் சார்ந்திருக்கிறதென்பதையும் அவன் உணர்ந்தான். அந்தக் காரியத்தில் தனக்கு உதவி புரியும்படி தான் வழிபடும் தெய்வமாகிய பழனி மலையில் வீற்றிருக்கும் முருகக் கடவுளை வேண்டிக்கொண்டான்.

சம்பாஷணை முடிந்ததும் பிக்ஷுக்கள் இருவரும் சைத்யத்திலிருந்து வெளியில் வந்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து குண்டோதரனும் வந்தான். இதற்குள்ளாக மாலை போய் இரவு வந்து, நன்றாக இருட்டிவிட்டது. வடகிழக்கிலிருந்து திரண்டு வந்த மேகங்கள் வானத்தைப் பெரும்பாலும் மூடியிருந்தாலும், தெற்கிலும் மேற்கிலும் இன்னும் சில நட்சத்திரங்கள் தெரிந்தன.

சைத்தியத்திலிருந்து வெளியேறிய பிக்ஷுக்களில் ஒருவர் அருகிலிருந்த விஹாரத்தை நோக்கிச் சென்றார். மற்றொருவர் சைத்யத்தைச் சுற்றிக் கொண்டு தென்மேற்குத் திசையை நோக்கிச் சென்றார்.

ஒருகணம் குண்டோதரனுடைய மனத்தில் ஒரு போராட்டம் நிகழ்ந்தது. விஹாரத்துக்குப் போய் ஆயனருக்கு எச்சரிக்கை செய்ய வேண்டாமா என்று எண்ணினான். ஆனால், என்னவிதமாக எச்சரிக்கை செய்வது? எப்படியும் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்று மேற்படி பிக்ஷுக்களின் சம்பாஷணையிலிருந்தே நன்கு தெரிந்தது. எனவே, அச்சந்தர்ப்பத்தில் தன்னுடைய வேலை நாகநந்தியைப் பின் தொடர்வதுதான் என்று குண்டோதரன் தீர்மானித்தான்.

அவ்விதமே அவரைப் பின் தொடர்ந்து குண்டோதரன் சற்று தூரத்திலேயே நடந்துசென்றான்.

கொஞ்ச தூரம் போனதும் ஒரு மரத்தின் பின்னால் கட்டியிருந்த குதிரையை அவிழ்த்து அதில் நாகநந்தி ஏறிக்கொண்டார்.

'ஆஹா! திருட்டு போன குதிரை மறுபடியும் கிடைக்கப் போகிறது!?' என்று குண்டோதரன் எண்ணிக் கொண்டான்.

கணத்துக்குக் கணம் வேகமாகிக் கொண்டிருந்த காற்றினாலும் இருட்டினாலும் நாகநந்தி குதிரை மேல் ஏறியபோதிலும் மெதுவாகவே போக வேண்டியிருந்தது. எனவே அவரைத் தொடர்ந்து போவது கஷ்டமாயில்லை. சிலசமயம் குதிரை அடிச்சத்தம் முன்னால் கேட்கிறதோ பின்னால் கேட்கிறதோ என்பது சந்தேகமாயிருந்தது. இரண்டு பக்கத்திலும் கேட்பது போலவும் இருந்தது. இது வீண் பிரமை என்று எண்ணிக் கொண்டு மேலே சென்றான்.

ஏறக்குறைய மூன்று நாழிகை வந்த பிறகு, எதிரே நீண்ட மலைத்தொடர் போன்ற ஓர் இருண்ட கரை நெடுந் தூரத்துக்கு நெடுந்தூரம் தென்பட்டது.

அதேசமயத்தில் கண்ணைப் பறிக்கும் மின்னல்களுடனும், அண்டம் அதிரும் இடி முழக்கங்களுடனும் மழை பெய்யத் தொடங்கியது.

மின்னல் வெளிச்சத்தில், நாகநந்தி மேட்டின் ஓரமாக இருந்த ஒரு மரத்தில் குதிரையைக் கட்டிவிட்டு அந்தக் கரையின் மேல் ஏறுவது குண்டோதரனுக்குத் தெரிந்தது. அதே

இடத்தில் மேட்டின் மீது அவனும் ஏறினான். மழையில் நனைந்த காரணத்தினால் கரையின் மண் சேறாகி வழுக்கத் தொடங்கி விட்டபடியால் மேட்டில் ஏறுவது சுலபமாயில்லை. கடைசியில், கரையின் அடியிலிருந்து வளர்ந்திருந்த மரத்தின் உதவியால் கஷ்டப்பட்டு ஏறிக் குண்டோதரன் கரை உச்சியை அடைந்தபோது, பளீரென்று வீசிய மின்னல் வெளிச்சத்தில் ஓர் அபூர்வ பயங்கரக் காட்சி தென்பட்டது.

கரைக்கு அப்பால் இருந்த திருப்பாற்கடல் என்னும் ஏரி புயற்காற்றினால் கொந்தளித்தது. ஒரு மகா சமுத்திரத்தைப் போல் அலை மோதிக்கொண்டு காட்சியளித்தது. கொந்தளித்து எழுந்த அலைகள் மின்னல் வெளிச்சத்தில் வெள்ளை வெளேரென்று ஜொலித்தபடியால், உண்மையிலேயே திருப்பாற்கடல் என்னும் பெயர் அந்த ஏரிக்கு அச்சமயம் மிகவும் பொருத்தமாயிருந்தது.

அதே நேரத்தில் குண்டோதரன் நின்ற இடத்துக்குச் சற்றுத் தூரத்தில் அவனுடைய உடம்பின் இரத்தத்தையெல்லாம் சுண்டச் செய்யும்படியான இன்னொரு பயங்கரத் தோற்றமும் தென்பட்டது.

அலைமோதிய ஏரிக்கரையில் கையை உயரத் தூக்கிக்கொண்டு நின்ற நாகநந்தி, 'ஹா ஹா ஹா' என்று பேய்க் குரலில் சிரித்த சப்தமானது, புயல் முழக்கத்தின் ஓசையையும் அலைகளின் ஆரவார ஒலியையும் அடக்கிக் கொண்டு மேலெழுந்தது.

நாகநந்திக்குப் பக்கத்தில் ஏரிக்கரையைப் பிளந்து கொண்டு ஒரு சிறு கால்வாய் வழியாகத் தண்ணீர் ஓட ஆரம்பித்தது.

நாகநந்தி அடிகளின் காலடியில் ஒரு மண்வெட்டி கிடந்தது!

(தொடரும்)

அருள்வாக்கு

ஏடு என்றால் நடுவிலே நரம்பும் அதற்கு இரண்டு பக்கம் இலையுமாக இருக்கிறதில் ஒரு பக்கம் என்று அர்த்தம். வாழையிலையை இப்படிக் குறுக்காகப் பிளந்து ஒவ்வொரு பாதியையும் ஏடு என்கிறோம். பனை மட்டையில் இருக்கிறதை இப்படியே நடு நரம்பை எடுத்து விட்டு ஒவ்வொரு பக்கத்தையும் எடுத்து ஏடு என்பதுதான் ஏட்டுச் சுவடி. அதுதான் நீண்ட நாளானாலும் பழுத்துப் போகாத, பழுதாகாத இயற்கையின் காகிதம்! அதில் எழுத்தாணியை வைத்துக் கொண்டு செதுக்கி எழுத வேண்டும். ஞானசம்பந்தரின் தேவார ஏடு வைகையை எதிர்த்துக் கொண்டு கரையேறிய இடம் இன்றைக்கும் பாண்டிய நாட்டில் திருவேடகம் (திரு ஏடு அகம்) என்ற ஸ்தலமாக விளங்குகிறது. அங்கே ஈச்வரனுக்குப் 'பத்ரிகா பரமேச்வரர்' என்று பெயர். இப்போது, 'பேப்பர்' என்றால் காகிதம் என்பது ஒரு அர்த்தம். 'மாகஸின்' (ஸஞ்சிகை) என்றும் அர்த்தம். 'மாகஸின்' என்பதைப் பத்திரிகை என்கிறோம். நேச்சரின் பேப்பரான இயற்கைப் பத்திரிகை, கரையேறின ஊரில் ஸ்வாமியே 'பத்திரிகா பரமேச்வரன்' என்று ஜர்னலிஸ்ட் ஆகியிருக்கிறார். 'பத்ரம்', 'பத்ரிகா' என்றாலும் இலை என்றே அர்த்தம். இலையிலிருந்து வந்ததுதானே ஏடு? அதனால் ஏட்டுக்குப் பத்திரிகை என்று பெயர். இதுதான் அந்த நாள் காகிதமாக இருந்ததால் கடிதாசும் (லெட்டரும்) இதிலேதான் எழுதுவார்கள். அதனால் கடிதாசுக்குப் 'பத்ரம்' என்றே பேர் வந்துவிட்டது.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்





தேசபக்திக்கு குட்டை!

பத்திரிகை பேட்டி என்றாலே பிளேக் பீதியோடு ஓட்டம் பிடிக்கிற நடிகர்களின் பட்டியலில் அர்ஜுனுக்கும் இடமுண்டு. தற்போது திரைக்கதை அமைத்து இவர் இயக்கிவரும் 'ஏழுமலை' படத்தில் நாயகனும் இவரே. ஏ.வி.எம். ஸ்டுடியோ வளாகத்தில் நிறைமாத கர்ப்பிணி வேடத்தில் நின்றிருந்த சிம்ரனுக்கு, நடிப்புச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த அர்ஜுனை நெருங்கினோம். "ஒரு பிரபல நடிகர் என்ற முறையில் பத்திரிகைபேட்டி தருவதில் உங்களுக்கு என்ன பிரச்னை?" என்ற தாக்குதலோடு நமது வேலை தொடங்கியது.

"எனக்கு சினிமாவைத் தவிர வேறு எதுவும் தெரியாது. நீங்கள் என்னிடம் அரசியலைப் பற்றிக் கேட்டால் பேந்தப் பேந்த விழிப்பேன். சரி சினிமாவைப் பற்றி என்ன பெரிதாகப் பேசிவிட முடியும். எனக்குத் தெரிந்த விஷயங்கள் எல்லாம் உங்களுக்கும் தெரியும். இப்படியிருக்க, பேட்டி என்பதெல்லாம் சுத்த ஹம்பக் என்று தோன்றுகிறது. இப்படிச் சொல்வதை நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பேட்டி கொடுக்கிற அளவுக்கெல்லாம் நான் பெரிதாக எதையும் சாதித்துவிடவில்லை. என்னைப் பற்றி எழுதுவதைவிட எனது படத்தைப் பற்றி எழுதுங்களேன் ப்ளீஸ்" என்று நழுவ நினைத்தவரை விடுவதாக இல்லை.

"சேவகன், ஜெய்ஹிந்த், பிரதாப் போன்ற உங்கள் படங்களெல்லாம் வெற்றிகரமாக ஓடின. இந்தப் படங்களில் திகட்டத் திகட்ட தேசபக்தியை வியாபாரம் செய்தீர்கள் என்பதை ஒத்துக் கொள்கிறீர்களா?" என்றதுதான் தாமதம். அர்ஜுனின் அபாரத் தோள்கள் கோபத்தில் துடித்தன.

"ஏதோ தேசபக்தியை நான் மட்டும் தான் தொடற மாதிரி சொல்றீங்க. ரஜினிகாந்த், விஜயகாந்த் தேசபக்தியை மையமா வைச்சுப் படமெடுக்கலையா? ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி பிறந்தது தப்பா? என் மேலே மட்டும் ஏன் சார் தேசபக்தி முத்திரை குத்தறீங்க? தேசபக்தியை நான் குத்தகைக்கு எடுத்துட்டதா நீங்க நினைச்சிடக் கூடாதுன்னுதான் 'வேதம்' எடுத்தேன். நாடு நல்லா இருக்கணும்னா, வீடு நல்லா இருக்கணும். கணவன் – மனைவி விட்டுக் கொடுத்துப் போகணும்னு சொன்னேன். ஆனா அந்தப் படத்தைக் கைவிட்டுட்டீங்க. அதுக்காக நான் மறுபடியும் தேசபக்திக்குப் போயிடலை. தெலுங்கில் பாலகிருஷ்ணா, சிம்ரன் நடித்து வெள்ளிவிழா கண்ட 'நரசிம்ம நாயுடு' படத்தை 'ஏழுமலை'யாகத் தமிழுக்குத் தகுந்த மாதிரி எடுத்துக்கிட்டிருக்கிறேன். இங்கேயும் சிம்ரன்தான் ஹீரோயின். இரண்டாவது ஹீரோயினாக கஜாலான்னு ஒரு பெண்ணை அறிமுகப்படுத்துறேன்" என்ற அர்ஜுனை மேலும் உசுப்பும் விதமாக, "இந்தப் படத்தில்

மட்டும் புதுசா என்ன பண்ணிடப் போறீங்க? அதே அடிதடி, வெட்டுக்குத்து, டூயட், இதுதானே?" என்று வெறுப்பேற்றினோம். ஆனால் இந்தமுறை கோப உணர்ச்சிகளைக் காட்டாமல் கூலாக பேச ஆரம்பித்து விட்டார்.

"நான் இதுவரைக்கும் ஏற்காத டான்ஸ் மாஸ்டர் பாத்திரத்தில் நடிக்கிறேன். டான்ஸ் மாஸ்டர்னா கிளாசிக்கல் டான்ஸ். படத்தில் மூணு நிமிஷம் சிவதாண்டவம் ஆடுகிறேன். அதுவும் பாடல் இல்லாத இசைக்கு. என்னோட மாணவர்களுக்குச் சொல்லித் தருகிறமாதிரி காட்சி அமைப்பு. என்னோட மாணவர்களாக நடிக்கிறவங்க கலாக்ஷேத்ரா ஸ்டூடண்ட்ஸ். அவங்க முன்னாடி படப்பிடிப்பில் அவமானப்படக் கூடாதேன்னு தினசரி மூன்று மணி நேரம் நடனப் பயிற்சி எடுத்துக்கிட்டேன். அதே மாதிரி என் படங்களில் இடம் பெறும் வழக்கமான சண்டைக் காட்சிகள் மாதிரி இல்லாமல், இந்த முறை ஓடும் ரயிலில் நிறைய ஆபத்துகளைச் சந்திச்சு ஒரு சண்டையைப் படமாக்கி இருக்கிறோம். ஐம்பதாயிரம் பேர் திரண்ட நிஜத்திருவிழா கூட்டத்தில் ஒரு சண்டையைப் படமாக்கியிருக்கிறோம்" என்றவரை தடுத்து.

என்னை நிரூபிச்ச பிறகுதான் 'ஜென்டில்மேன்' வாய்ப்பு கிடைச்சது. இப்போ இரண்டு வெளிப்படங்களில் நடித்தால், அடுத்து வரும் இரண்டு படங்களில், நானே இயக்கி நானே நடிக்கிறேன். இப்படித்தான் அர்ஜுன் எக்ஸ்பிரஸ் போய்க் கொண்டு இருக்கு. இப்போதைக்கு எந்த டெஸ்டினேஷனும் இல்லை. ஓடிக் கொண்டே இருக்க வேண்டியதுதான்" என்றவரிடம் உங்கள் வீட்டு வேலைக்காரப் பெண்ணின் மகளை, "உங்கள் மகள் படிக்கும் கான்வென்ட்டிலேயே படிக்க வைக்கிறீர்களாமே?" என்றோம்.



"நீங்கள் இயக்கும் படங்கள் எல்லாமே ஒரே மாதிரியான தொனியில் இருக்கின்றன. மற்றவர்களின் இயக்கத்தில் நடித்தால் வித்தியாசமாகத் தெரிகிறீர்கள்! ஏன் மற்ற இயக்குனர்களின் படங்களில் அதிகம் நடிக்கக் கூடாது?"என்றோம்.

"நான் என்ன நடிக்க முடியாதுன்னா சொல்றேன்; பதினெட்டு வருஷமா நடித்துக் கொண்டிருக்கிறேன். எவ்வளவு பெரிய நடிகனுக்கும் ஒரு தேக்கம் உண்டு. அப்படித்தான் எனக்கும். என்னை புக் பண்ண ஆள் இல்லை. சரி நாமே தயாரிக்கலாம், டைரக்ட் பண்ணுங்கன்னு பிரபல இயக்குனர்களைக் கூப்பிட்டேன்; வரலை. இத்தனை வருஷ அனுபவம் இருக்கும் போது நாமே ஏன் இயக்கி நடிக்கக் கூடாதுன்னு எண்ணம் வந்தது. அப்படித்தான் 'சேவகன்' எடுத்து வெற்றி கொடுத்தேன். பிரதாப், ஜெய்ஹிந்துன்னு அடுத்தடுத்து வெற்றி கொடுத்து

"நான் பாரபட்சமே பார்க்கிறதில்லே. ஏழ்மை நிலையிலேயும், படிப்பில் முதலாவதாக வந்தால் தேவையான உதவி செய்யறேன். ஏழை பிள்ளைகளைப் படிக்க வைக்கிறேன்னு சொன்னால் அவர்களின் வரிய நிலையை விளம்பரப்படுத்துவது மாதிரி இருக்கு. அதை நான் விரும்பவில்லை" என்றவர், பேட்டியின் முடிவில் 'ஜெய்ஹிந்த்' என்று சொல்ல மறக்கவில்லை.

சந்திப்பு : ஸ்ரீசக்கரம்



இவர்கள் நீதிமன்றத்தில்

"பிரபாகரனை இலங்கை அரசு இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும்" என்கிறார் ஜெயலலிதா. இன்றையச் சூழலில் இலங்கை அரசு இதற்குச் செவிசாய்க்குமா?

தமது ஆட்சிக் காலத்தில் பல கொலைகளுக்குக் காரணமாக அமைந்தவர் சிலி நாட்டின் சர்வாதிகாரி பினோசெட். கொலை செய்யப்பட்டவர்களில் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களும் கணிசமானவர்கள் என்பதால் பினோசெட்டை தங்கள் நாட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றன பல ஐரோப்பிய நாடுகள். ஆனால் சிலி அரசு இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

தாலிபன் ஆட்சி செய்தபோது, "எக்காரணம் கொண்டும் ஒசாமா பின்லேடனை எங்கள் நாட்டிலிருந்து வெளியேற்ற மாட்டோம்" என்று அழுத்தமாகக் கூற, அமெரிக்காவுக்கு என்ன செய்வதென்றே புரியாத ஆத்திரம்.

யாசர் அராபத் பல படுகொலைகளுக்குக் காரணமானவர் என்று கதறியது இஸ்ரேல். இப்போது இஸ்ரேல் அரசும் பழிக்குப் பழி வேலையில் இறங்கியிருப்பதோடு ஐ.நா. சபையின் பிரதிநிதியைக் கூட அராபத்தைச் சந்திக்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது.

கம்போடியாவின் கொடுங்கோலன் போல்பாட் கடைசி வரை நீதிமன்றத்தின் பிடியில் சிக்கவேயில்லை. சதாம் உசேன் என்ன பாதகம் செய்தாலும் அவர் மீது போர் தொடுப்பதைத் தவிர வேறெந்த நேரடி நடவடிக்கையும் எடுக்க முடியாது. இதற்குக் காரணம் ஈராக் அரசு அவரை ஒருபோதும் காட்டிக் கொடுக்காது. (சொல்லப் போனால் அவர் தானே அரசு!)

வருங்காலத்தில் இந்த நிலை மாற வாய்ப்பு உண்டு. பிரபாகரன், அராபத், பின்லேடன், சதாம் உசேன் போன்றவர்கள் எந்தக் குறிப்பிட்ட நாட்டையும் சேராத நீதிமன்றம் ஒன்றினால் விசாரிக்கப்படலாம். அது "சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்!"

படுகொலைகள், போர்களின் போது நடைபெறும் அதீத அத்துமீறல்கள், மனித உரிமைக்கெதிரான குற்றங்கள் ஆகியவற்றுக்குக் காரணமான தனி நபர்கள் மீது சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் இனி வழக்குத் தொடுத்து தீர்ப்பு வழங்கும்.

இப்போதே கூட உலக நீதிமன்றம் என்ற ஒன்று இருக்கிறது. ஆனால் இது இரு நாடுகளுக்கிடையே ஏற்படும் ஒப்பந்த மீறல்களில் தான் பெரும்பாலும் கவனம் செலுத்துகிறது. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் தனிப்பட்ட குற்றவாளிகளின் மீது நடவடிக்கை எடுக்கும்.



நிற்கப் போகிறார்கள்!

ஐ.நா.வால் 1998ல் ரோம் நகரில் கூட்டப்பட்ட கூட்டத்திலேயே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கான அடித்தளம் போடப்பட்டுவிட்டது. இதில் கலந்து கொண்ட 160 நாடுகளில் ஏழு நாடுகள் இதற்கெதிராக வாக்களிக்க, 21 நாடுகள் வாக்கெடுப்பிலிருந்து பின்வாங்கி விட, மீதமுள்ள அத்தனை நாடுகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. சீனா, ஈராக், அமெரிக்கா ஆகியவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் உருவாவதற்கு எதிராக வாக்களித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளில் வாழும் குற்றவாளிகளுக்கு எதிராக மட்டுமே சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க முடியும். குற்றவாளியாகக் கருதப்படுபவருக்கு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ளுதல், பதில் கூற மறுத்தல், தன் தரப்புக்கு ஆதரவாகச் சாட்சிகள் கொண்டு வருதல் ஆகிய பல உரிமைகள் உண்டு.

அந்தந்த நாட்டில் உள்ள நீதிமன்றங்களுக்கு உரிய மரியாதையை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் அளிக்கத் தவறாது. மிகக் கடுமையான, உலக அளவில் அறியப்பட்ட, குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை மட்டுமே சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கவனிக்கும். தவிர, சம்பந்தப்பட்ட நாடுகளும் அவற்றின் நீதிமன்றங்களும் தங்களது கடமையிலிருந்து பிறழ்வதாகத் தோன்றினால் தான் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளும்.

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் ஒரு சரித்திர திருப்புமுனை. இந்த நீதிமன்றம் நெதர்லாந்தில் உள்ள ஹேக் என்ற இடத்தில் செயல்படும் என்று தெரிகிறது. பிற நாடுகளில் அவ்வப்போது இயங்கவும் இந்த நீதிமன்றம் தயாராக இருக்கும். இந்த நீதிமன்றத்துக்கான செலவை ஐ.நா. சபை தனது நிதியிலிருந்து அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இன்னும் சில மாதங்களில் இயங்கத் தொடங்கி விடும் இந்த நீதிமன்றம்.

அற்பமான அரசியல் குற்றச்சாட்டுகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் நேரத்தை விழுங்கி விடக் கூடாது இல்லையா? அதற்காக குறிப்பிட்ட வழக்குகள் சாரம் மிகுந்தவையா என்பதைத் தீர்மானிக்க ஆரம்பச் சுற்று நீதிபதிகள் குழு ஒன்று இயங்கும். அந்தந்த நாட்டின் உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகளாக இருப்பவர்களை மட்டுமே சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிபதிகளாக இயங்க அந்த நாடு பரிந்துரை செய்யலாம்.

— ஜி.எஸ்.எஸ்.

பிரேசில் பிடியிலிருந்து உருகுவே விடுபட்டு நூறு ஆண்டுகள் ஆன சமயம் அது. அந்த வருடத்தில்தான் (1930) கால்பந்து உலகக் கோப்பைப் போட்டிகள் தொடங்கின. தங்கள் நாட்டில்தான் அவை நடைபெற வேண்டும் என்றும் அப்படி நடைபெற்றால் அது தங்களது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் சிகரமாக அமையும் என்றும் வாதிட்டது உருகுவே. சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு அதை ஏற்றுக் கொண்டதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அதற்கு முன் நடைபெற்ற ஒலிம்பிக்ஸில் உருகுவேதான் சாம்பியன்!

பிறகு நான்காண்டுகளுக்கு ஒருமுறை இந்தப் போட்டிகள் நடந்தாலும், வரும் மே மாதம் 31ம் தேதி நடக்கப் போகும் உலகக் கோப்பைப் போட்டிகள் இருவிதங்களில் ஸ்பெஷலானவை! ஆசியாவில் இவை நடைபெறப் போவது இதுவே முதல்முறை. இரண்டு நாடுகள் இந்தப் போட்டியை நடத்துவதென்பதும் இதுவே முதல்முறை. அதுவும் கடந்த காலத்தில் டாமும் ஜெர்ரியுமாக இருந்த தென் கொரியாவும் ஜப்பானும் இணைந்து இந்தப் போட்டிகளை நடத்த முன்வந்திருப்பது மேலும் அதிசயம்!

முப்பத்திரண்டு நாடுகள் தகுதிச் சுற்றுகளைத் தாண்டி வந்திருக்கின்றன. அவை சீனா, சவுதி அரேபியா, தென்னாப்பிரிக்கா, காமரூன், பிரேசில், ஜெர்மனி, அர்ஜென்டினா, அமெரிக்கா, இங்கிலாந்து, செனகல், துனிசியா, நைஜீரியா, கோஸ்டாரிகா, மெக்ஸிகோ, பராகுவே, உருகுவே, ஈகுவடார், போலந்து, பிரான்ஸ், ஸ்வீடன், ஸ்பெயின், குரோஷியா, ரஷ்யா, போர்ச்சுகல், டென்மார்க், இத்தாலி, ஸ்லோவேனியா, துருக்கி, பெல்ஜியம், அயர்லாந்து மற்றும் தென்கொரியா, ஜப்பான்.



கால் பந்து





உலகக் கோப்பையைத் தன்வசமாக்கிக் கொண்டது பிரான்ஸ். ஆனால் ஒருவிதத்தில் நாடு உலகக் கோப்பையைப் பெற்றாலும் அதில் இத்தாலிக்குப் பங்கிருக்கிறது!

முக்கால் யுத்தம்!

கால்பந்து உலகக் கோப்பையை 'நிஜமாகவே' தன்னிடம் தக்க வைத்துக் கொண்டிருப்பது ஜெர்மனிதான். உலகக் கோப்பை சுழற்சி முறையில் வெல்லும் நாடுகளுக்குச் செல்வதுதான் வழக்கம். மூன்று முறை தொடர்ந்து எந்த நாடாவது கோப்பையைப் பெற்றால் அந்த நாடே அந்தக் கோப்பையை வைத்துக்கொள்ளலாம் என்பது விதி. அந்த முறையில் 1970ல் ஜெர்மனி வென்றபோது மேற்படி சாதனையைச் செய்ய, கோப்பை அதன்வசமே தங்கி விட்டது. இதைத் தொடர்ந்து 1974 உலகப் போட்டிகளுக்குப் புதிய கோப்பை வடிவமைக்கப்பட்டது. இத்தாலியில் உள்ள மிலன் நகரில் வாழ்ந்துவரும் சில்வியோ கஸயா என்பவர்தான் தற்போதைய உலகக் கோப்பையை வடிவமைத்தவர். ஆக எந்த

திறமையோடு வலிமை, இளமை ஆகியவையும் தேவைப்படும் விளையாட்டு என்பதால் பீலே, மாரடோனா போன்ற மெகா ஸ்டார்கள் அடுத்த மாதம் தொடங்கும் போட்டிகளில் இல்லை. சொல்லப் போனால் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட பிரேஸில் நாட்டைச் சேர்ந்த பிரபல கால்பந்து வீரர் ரொமாரியோகூட இந்தப் போட்டிகளில் இடம் பெற வாய்ப்பு மிகக் குறைவு. பயிற்சி காலத்தில் இவர் வீட்டிலேயே தங்கிவிட்டது அந்த நாட்டு கால்பந்து அணியின் பயிற்சியாளர் லூயி ஸ்கொலாரி என்பவருக்குப் பிடிக்கவில்லை. ஏப்ரல் பதினேழாம் தேதி போர்ச்சுக்கலுடன் ஆடவிருக்கும் போட்டிக்காகக் கிளம்பியபோது ரொமாரியோவை அணியில் சேர்த்துக்கொள்ளவில்லை இவர்.

தவறை மன்னிக்குமாறு ரொமாரியோ கண்ணீர்விட்டது கூட எதிர்பார்த்த பலனைத் தருவதாகத் தெரியவில்லை.

தொடக்கப் போட்டி மே முப்பதாம் தேதி தென்கொரியாவில் நடக்கும். இறுதிச் சுற்றுப் போட்டி ஜப்பானில். ஜெயிக்கப் போவது யார்? கால்பந்துப் பந்தயங்கள் துவங்குவதற்கு முன்பே பெட்டிங் பந்தயங்கள் துவங்கிவிட்டன. ஏதோ ஒரு ஐரோப்பிய நாடு அல்லது தென்னமெரிக்க நாடு என்பதில் மட்டும் பெரும்பாலான விமர்சகர்கள் ஒற்றுமை காட்டுகிறார்கள்.

● இங்கிலாந்து இடிந்து போயிருக்கிறது. அதன் கால்பந்து அணி காப்டன் டேவிட் பெகோலங் தனது இடதுகாலில் ஏற்பட்ட எலும்பு முறிவால் துடித்துக் கொண்டிருக்கிறார். ஆறிலிருந்து எட்டு மாதங்களாகும் சரியாக என்கிறார்கள் மருத்துவர்கள். இன்னும் சில வாரங்களில் ஸ்விடன் அணியை எதிர்கொள்ள வேண்டும் இங்கிலாந்து அணி. சஸ்பென்ஸில் தவிக்கிறது இங்கிலாந்து. தற்காலிகமாக ஓவன் என்பவரை கேப்டனாக்கியிருக்கிறார்கள்.



● உலகக் கோப்பை போட்டியின் தகுதிச் சுற்றுகளை சீனா தாண்டிவந்தபின், அந்த நாட்டில் ஒரு கால்பந்து புரட்சியே நடப்பது போன்ற தோற்றம் ஏற்பட்டுள்ளது. சீனா பங்கேற்கும் அத்தனைப் போட்டிகளுக்கான டிக்கெட்டுகளும் இப்போதே விற்றுத் தீர்த்துவிட்டன.

● தென்கொரியா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளிலும் உள்ள கால்பந்து மைதானங்களில் பிரம்மாண்டமான திரைகள் வைக்கப்பட்டு பந்தயம் அதில் அப்படியே அவ்வப்போது தெரியும்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பரபரப்பான, சர்ச்சைக்கிடமான முடிவுகளை ஆக்ஷன் ரீப்ளே செய்யவும் முதலில் திட்டமிட்டார்கள். ஆனால் இதனால் ஏற்படக்கூடிய சங்கடங்களையும் கலவரங்களையும் நடுவர்கள் குழு எடுத்துக் கூறிய பிறகு இந்த யோசனை கைவிடப்பட்டது. சின்னத் திரைகளில் மட்டும்தான் ஆக்ஷன் ரீப்ளே; ராட்சத திரையில் கிடையாது.

● மற்ற விளையாட்டுகளைவிட வெறி பிடித்த ரசிகர்கள் கால்பந்து விளையாட்டுக்கு அதிகம். சென்ற கால்பந்து உலகக் கோப்பை பந்தயங்களின்போது எதிரணியைச் சேர்ந்த ஒருவரின் வன்முறையால் முகத்தில் ரத்தம் கொட்ட ஒரு விளையாட்டு வீரர் நிலைகுலைந்து நின்றபோது, அவரைப் பார்த்து ஒரு ரசிகர் "அடப்பாவி அடிபட்டுக்கிட்டா அதுக்காக பந்தை சரியாக உதைக்காம விடணுமா என்ன? உன்னைமாதிரி ஜந்துக்கள் எல்லாம் சிவப்பு விளக்குப் பகுதியில்கூட பாயிண்ட் எடுக்க மாட்டீங்க" என்று கத்தினார் என்றால் எப்படிப்பட்ட வெறி!


● கால்பந்து உலகக் கோப்பை சரித்திரத்தில் முதல் 'கோல்' போட்டவர் என்ற பெருமை பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூசின் லாரண்ட் என்பவருக்குத்தான். 1930 போட்டிகளில் மெக்சிகோவுக்கெதிரான ஆட்டத்தில்தான் அவருக்கு இந்தப் பெருமை கிடைத்தது.

● மே 29 அன்று சர்வதேச கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் தேர்தல் நடக்கவிருக்கிறது. மீண்டும் தேர்தல் களத்தில் குதிக்கிறார் இப்போது அந்த அமைப்பின் தலைவராக இருக்கும் ஜோஸப் ப்ளாட்டர். இவருக்குச் சரியான போட்டியாகக் கருதப்படுபவர் காமரூன் நாட்டைச் சேர்ந்த இஸா ஹயாடன்.

● ஒருமுறை உலகக் கோப்பையைக் கைப்பற்றுவதே சாதனை. அப்படியிருக்க இரண்டு நாடுகள், தலா நான்குமுறை சாம்பியனாகி உள்ளன. அவை ஜெர்மனி மற்றும் பிரேசில்.


● இந்திய கால்பந்து அணி 1950ல் தகுதிச் சுற்றை அடைந்தது (எதிரணி போட்டியில் கலந்துகொள்ளவில்லை). ஆனால் ஒரு விளையாட்டு விதியின் காரணமாக, தொடர்ந்து வந்த போட்டிகளில் இந்திய அணி கலந்துகொள்ள மறுத்துவிட்டது. 'விளையாட்டு வீரர்கள் வெறும் காலோடு ஆடக் கூடாது' என்பதுதான் அந்த விதி!

— குல்லு



டிராக்டர் மெல்ல உருண்டு கொண்டு போனது. அதன் அதிர்வுகளோடு தானும் அதிர்ந்து கொண்டே கொழுமுனைகளைப் பார்த்தான் செல்வம்.

கொழுமுனைகள் ஆழமாகப் புதைந்து மண்ணை அள்ளியணைத்து அள்ளியணைத்து மேலும் மேலும் நிலத்தைக் கிழித்துத் தழுவின. தீராக் காதல் போலத் தோன்றியது. காய்ந்த நிலம் பிளந்து எம்பி உடைவதைப் பார்த்துக் கொண்டே சிறிது தூரம் ஓட்டினான். வரப்பு நெருங்கி வருவதைக் கண்டு டிராக்டரை ஒடித்து வளைத்தான்.



சக்கரம்

மிகச் சரியாகச் செய்தான். கொழுமுனை மிகத் துல்லியமாக வரப்பின் ஓரமாக மண்ணைப் பிளந்து கொண்டு வந்தது.

இதைப் போலவே ஒவ்வொரு முறையும் டிராக்டரை லாகவமாக ஓடித்துத் திருப்பினான். அது அவனுக்கு விளையாட்டாக இருந்தது.

"டேய், நீ வரப்ப வாரிப் போடத்தாண்டா வழி பண்ற!"

கண்ணப்பாவின் குரல் வந்த திசைக்குத் திரும்பினான்.

அவர் கைகளை ஆட்டி, தலையில் அடித்துக் கொண்டு கேலி செய்தபடி வருவதைச் சிரித்துக் கொண்டு பார்த்த செல்வம், தன் பாக்கெட்டில் பீடியைத் தூழாவினான். வரப்பை உடைப்பது போல மீண்டும் டிராக்டரை இயக்கி கண்ணப்பாவைச் சிணுங்க வைக்க வேண்டும் என்று நினைத்தபடி பீடியை வாயில் வைத்தபோது, சண்முகம் டீத் தூக்குடன் சைக்கிளில் வருவது தெரிந்தது. டிராக்டரைப் புங்கமர நிழலில் நிறுத்தினான். மரம் சாலையில் நின்றது. என்றாலும் அதன் நிழல் வயலுக்கு உள்ளே பரவியது. பீடிப் புகையை வானத்தைப் பார்த்து ஊதிவிட்டு எச்சிலை நிழலின்மீது துப்பினான்.

"மொதலியாரே, டீ சாப்பிட வர்றது"

கண்ணப்பா வயலில் இறங்கி நடக்கத் தொடங்கியிருந்தார். புரட்டிப் போடப்பட்ட புத்தம்புது மண் அவரது கால்கள் பட்டு அழுந்தியது. செருப்பில்லாத வெற்றுப் பாதங்கள் மணலை வாரி இறைத்தபோது அவரது உள்ளங்காலின் வெளுப்பு பளீர் எனத் தெரிவதைப் பார்க்க முடிந்தது.

இரா. சோமசுந்தரம்

ஐம்பது வயது கடந்த தேகம் அவன் அருகில் வந்து மூச்சிறைத்து நின்றது.

"கெழவி எப்படிடா இருக்கு?"

"இன்னும் சாகல.."

"தரித்திரப் பயல... உன்னப் பெத்ததுக்கு இந்தப் பேச்சு வேணும்தான்."

"என்ன மாமா இந்தப் பக்கம்... அத்திப் பூத்தாப்ல.."

"பொழப்புதாண்டா..." மேல்துண்டை வரப்பின்மீது போட்டுவிட்டு உட்கார்ந்தார். "நம்ம சதாசிவம் நெலத்தை விக்கணும்னார். அவரோட கஷ்டகாலம். பொண்ண கழிச்சாகணும். 'காலகாலமா உழுது என்னத்த கண்டேன், மாமா. கல்யாணத்துக்காவது ஆகட்டும்'ன்னார். நெல்லு அறுவடைக்குப் பின்னால தானே வெலை பேசத் தோது! என்ன லட்சணத்துல இருக்குன்னு பார்க்க வந்தேன்."

பையனிடமிருந்து தூக்கை வாங்கி, அதற்குள் இருந்த டம்ளரில் டீயை ஊற்றி, கண்ணப்பாவிடம் கொடுத்தான். தூக்கோடு தானும் டீ குடித்தான். ஒரு மிடறு குடித்துவிட்டு கேட்டான். "கல்யாணம் பண்ணக் கூட காசில்லையா?"

"உன்ன நெலை அதான். என்னத்தப் பண்ண..."

"அவரு வெவரமுள்ள ஆளுன்னு நெனைச்சேன்."

"நானுந்தான் நெனைச்சேன். மனுஷன் சொல்றப்ப கண் கலங்குது. நேத்து ஏரியில கால் கழுவிட்டு கரை ஏறி வர்றேன், அவரு ரோட்ல போறாரு. நானும் இறங்கிப்போய்ப் பேசிட்டே நடந்தேன். "செண்பகத்தோட நெலம் சென்ட் எவ்வளவு போச்சு?"ன்னார். சொன்னேன். அதுக்கு மனுஷன் சொல்றார். அப்ப நம்ம நெலத்துல பொண்ணு கல்யாணத்த முடிச்சிடலாம் போல'' நா ஆடிப் போயிட்டேன் 'நெலத்த விக்கணும்னு' நேரடியா சொல்லாம அரை மணி நேரமா சுத்திச் சுத்திப் பேசறார்."

"எப்படி மாமா சொல்ல வரும்.. ஊதாரித்தனமா இருந்துட்டு நெலத்த வித்தேன். எனக்கே வார்த்தை வரலை, அவருக்கு எப்படி வரும்?"

"விவசாயம் போச்சுடா.... யார்தான் என்ன பண்ண முடியும்? ஏரிய சுத்தி பிளாட் போட்டுட்டானுங்க. வாய்க்கால தூர்த்துப்புட்டானுங்க. ஏரி போச்சு, வீடு கட்டினவனுக்குக் குடிக்க தண்ணியில்ல... நமக்கு மண்ணுக்குத் தண்ணியில்ல..."

"அவனுகளுக்கென்ன மாமா... பத்து கிலோமீட்டருக்கு பைப் போட்டு தண்ணி குடுக்கறானுங்க. நஷ்டப்பட்டது நாம தானே...?"

என்ன வெயில் காய்ந்தாலும் ஏரியில் தண்ணீர் இருந்த காலம் ஒன்று இருந்தது. வெயில் நேரத்தில் பள்ளிக்கூடம் போகாமல் ஏரியில் நீச்சலடித்த நாட்களை நினைத்தான். அப்பாவும் அவனும் ஏரிக்கரை பிள்ளையார் கோயில் படித்துறையில் குளித்த காலங்கள் அலையலையாய் ஓடின. அப்பா முதலில் இறந்தார். அவரைத் தொடர்ந்து நடேசன் அண்ணன். அதற்குப்பின்

"பக்கத்து தேசத்துக்குச் சென்றிருந்தேன். ஒரு கொடி, படர இடமில்லாமல் தவித்தது. தேரை அங்கேயே நிறுத்தி வந்துவிட்டேன், மந்திரியாரே!"

"பக்கத்து தேசத்தில் சூதாடி, தேரை இழந்த உண்மைச் செய்தி அப்போதே இங்கு எட்டிவிட்டது மன்னா!"

- வி. சகிதா முருகன்



சுப்பிரமணி. ஏன் தன்னை மட்டும் மரணம் கால அவகாசத்துடன் விட்டு வைத்திருக்கிறது? என்று பல நேரங்களில் தோன்றும். ஒவ்வொருவரும் சாகிற போது சொத்தில் ஒரு பகுதி 'செத்து'க் கொண்டே வந்தது. செல்வமும் கெழவியும்தான் ஏதுமில்லாமல் நின்றனர்.

"டீய குடிடா... என்ன யோசனை!"

செல்வம் பேசாமல் டீசை ஒரு மிடறு குடித்தான்.

நடேசன் உயிரோடு இருந்த காலத்தில் டீ என்பது ஒரு கெட்டில் நிறைய வரும். குறைந்தது பத்து பேர் வேலை செய்வார்கள். கூலியில் கறார் என்றாலும் டீ, சாப்பாடு விஷயத்தில் தாராளம்தான். விருந்து போல நடத்துவார். நடேசனும் கண்ணப்பாவும் ரொம்ப நெருக்கம்.

"டம்ளர் நிறைய டீ குடிக்க பழக்கிட்டான் பாவி. அவன் போய்ச் சேர்ந்துட்டான். அவன் உயிரோடு இருந்தா நா தரகு பண்ணியா பொழப்பேன்?"

புங்கமரக் காற்று குளுமையாக இருந்தது. டிராக்டர் மீது பூக்கள் விழுந்து சரிந்தன. சில பூக்கள் டிராக்டரை அலங்கரித்து நின்றன.

"இன்னிக்கும் சொல்வேண்டா. நடேசுவ ஆளு வச்சி லாரியில அடிச்சது கே.எம்.சி. தான். ரேணுகாவ அவன் வச்சிருந்தான். அந்தப் பொண்ணு நடேசன் மேல பிரியமாயிடுச்சி. அந்த நாயிக்கு அது பொறுக்கல. ரேணுகாவ அப்புறம் காணலையே. அவளையும் கொன்னுப் பொதைச்சிருப்பான். பாவி... சண்டாளன்."



"டாக்டர்! எருமை மாடு கத்தற மாதிரி சப்தம் கேட்குது!"

"நல்ல சகுனம்... ஆபரேஷனை ஆரம்பிச்சுட வேண்டியதுதான்!"

- ரிஷிவந்தியா

கண்ணப்பா சொல்வது உண்மைதான். நடேசுக்கு நெருக்கமானவர்கள் எல்லாருக்கும் இது தெரியும். அம்மா எப்போதாகிலும் சாபமிட்டு அழுவாள். சுப்பிரமணி குடித்தபோதெல்லாம் நடேசு விஷயம் பேசப்படாமல் முடியாது. ஆனால் என்ன செய்ய முடியும்? இவர்கள் சாதாரண மனிதர்கள். வாழ்க்கையில் முடியாத காரியங்கள் நிறைய இருந்தன. சினிமாவில் பிணத்தின்மீது ஆணையிடுகிற காட்சி வரும்போது செல்வதுக்குச் சிரிப்பு வரும். எவ்வளவு பெரிய பொய் எனத் தோன்றும். ஒரு வேளை நாம்தான் கோழையாக அடங்கிப் போகிறோமோ என்றும் நினைப்பான். மீண்டும் திரைப்படக் கதைக்குள் மனத்தைச் செலுத்த நேரமாகும்.

நடேசு ஏதோ ஒரு லாரியில் சிக்கி இறந்தபின், குடும்பம் தலைமை இல்லாமல் தவித்தது. அப்பாவின் மருத்துவக் கடனுக்குக் கொடுத்தது போக மிச்சமிருந்த சொத்துகளைச் சுப்பிரமணி மனம்போன போக்கில் அழித்தான். எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிற காலத்திலேயே கல்லூரி மாணவன் போல எல்லா கெட்டப் பழக்கங்களுக்கும் செல்வம் அடிமையானான். தேர்வில் தோற்றுப் போய்ப் புத்தகத்தை மூட்டை கட்டியபோது குடும்பமே தோற்றுக் கிடந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக விவசாயம் திரும்பத்

திரும்ப நஷ்டத்தை விளைவித்தது.

''கிளம்பறண்டா. போய் நெலத்தப் பார்த்துட்டு வர்றேன்.''

''சரி மாமா.''

''இன்னும் டீ குடிக்கலையா? பச்சத் தண்ணியா போயிருக்குமே!''

மிச்ச டீயை நிலத்தில் சாய்த்தான். ''மாமா, நாம மட்டும் ஏன் இப்படி ஆகிட்டோம், நாம யாருக்கும் எந்தத் துரோகமும் பண்ணலை. அடுத்தவன் குடும்பத்தக் கெடுக்கல. கூலி ஏமாத்தல. ஊதாரித்தனத்துல போனதவிட அதிகமா எங்கள ஏமாத்தித்தானே எல்லாரும் சாப்பிட்டானுங்க. அவனுங்க நல்லா இருக்கானுங்க...''

''ஏண்டா மனசைப் போட்டு உளப்பறே. நாம குறியா இல்ல. அவ்வளவுதான். இது ஒரு காலச் சக்கரம். நேத்து வேலை வாங்கினோம். இன்னிக்கி வேலை செய்ய றோம்.''

''வேலைக்காரன் முதலாளியானா பரவாயில்லையே! கே.எம்.சி. போல ஆளுதானே நல்லாயிருக்கான்.''

''நீ நல்லவன்னா உன் வாழ்க்கையும் நல்லா இருக்கணும்னு சட்டமா? சுமை வச்சிருக்கவனுக்குக் கழுத்து வலிக்கல, சும்மா இருக்கிற எனக்கு ஏன் வலிக்குதுன்னு கேட்டா இது ஒரு கேள்வியா? சுமக்கிற வனுக்கு வலிச்சா உன்கிட்ட சொல்லு வானா?'' எழுந்து நின்று வேட்டியை இறுக் கினார். ''ஆட்டுக்கு வாலை அளந்துதான் வச்சான். நா வர்றேன்.''

மாமா நடந்து போவதைப் பார்க்காமல் உழுத மண்ணைக் கைகளால் அள்ளி அள்ளி இறைத்தான். அவன் மனசு களர் நிலம் போல காய்ந்தது. கண்களை நீர் மறைத்தது. கொழுமுனைக் கிளப்பிக் கொண்டு பீர் பாட்டில் துண்டுகளும் மண்ணின் மேலுக்கு வந்திருந்தன. அவன் எழுந்துபோய் அதை எடுத்து சாலையோரமாக வீசிவிட்டு டிராக்டரில் ஏறி உட்கார்ந்தான். மீண்டும் பழையபடி வேலையைத் தொடங்க நேரம் பிடித்தது. ●



என்ன கோபம்?

''என்னது! பத்தாண்டு வாழ்த்துக்கள்னு எழுதி அனுப்பியிருக்கீங்க?''

''போஸ்டல் சார்ஜ் அடிக்கடி ஏறிடுதே என்ன செய்ய?''

● ●

''உடம்புல சக்தி குறைஞ்சுட்டே வருது டாக்டர்?''

''எப்படி தெரிஞ்சுது?''

''சண்டையின் போது கரண்டிக்கு பதிலா ஸ்பூனைத்தான் விட்டெறிய முடியுது..''

— எம். சாம்பமூர்த்தி

● ●

''அந்த ஆளு கல்யாணத்தை எவ்வளவு சிக்கனமா முடிச்சிட்டாரு பார்த்தியா...''

''எப்படி?''

''கோயில்ல வைச்சு தாலி கட்டி முடிச்சதும் கல்யாணத்துக்கு வந்தவங்க எல்லோரும் கோயில் அன்னதானத்தைச் சாப்பிட்டுக்கணுமாம்.''

— அம்பை சுவாமிநாதன்

● ●

"ஹீரோயினுக்கு என்ன கோபம்?"

"ஊட்டி ஷூட்டிங்குக்கு ரயில்லே போறப்ப அவருக்கு 'ஸீனியர் சிட்டிஸன்' சலுகையிலே டிக்கெட் எடுத்துட்டாங்களாம்!"

— கணியூர் சீனிவாசன்

● ●

''எவ்வளவு புகார் பண்ணியும் ஃபோன் கனெக்ஷனை சரிபண்ணலைன்னு டிபார்ட்மெண்டைக் கடுமையா திட்டிட்டுப் போறாரே. யாரு? உன் அப்பாவா?''

''ஊஹூம்! வழக்கமா எங்க வீட்டுக்கு ஓசி ஃபோன் பேச வருகிற எதிர்வீட்டு முனுசாமி!''

— உ. ராஜாஜி

அயோத்தி சாமியார்களின் ஃபைவ் ஸ்டார் வாழ்க்கை!

அயோத்தியில் பெரிதும் சிறிதுமாக எட்டாயிரம் இந்து மடங்கள் இருக்கின்றன. இவற்றில் நாற்பதாயிரம் சாமியார்கள் இருக்கிறார்கள். இந்த மடங்களில் உள்ள தலைவர்களின் வாழ்க்கை ஐந்து நட்சத்திர ஓட்டலின் தரத்தை ஒட்டியதாகவே இருக்கிறது. சொகுசு மாருதி, ஃபோர்டு கார்கள், ஜீப்புகள், கலர் தொலைக்காட்சி, ஃப்ரிட்ஜ், ஏ.ஸி, டெலிபோன், செல் என்று அட்டகாசமாக இருக்கிறார்கள் சில மடங்களின் தலைவர்கள். இதற்குக் காரணம் இவர்கள் கையில் புரளும் கோடிக்கணக்கான ரூபாய் பணம். ஒரு மடத்தின் தலைவர் மற்றொரு மடத்தின் சொத்துக்களை அபகரிக்க நினைக்கிறார். போட்டி! பூசல்! பல மடங்களில் அடியாட்களைச் சோறு போட்டு வளர்க்கிறார்கள்.

அயோத்தியில் மடம் துவங்குவது என்பது எளிது. தனக்குச் சொந்தமான ஒரு வீட்டில், ராம, லட்சுமண, சீதா சிலைகளை வைத்து, ஏற்கெனவே இருக்கும் ஒரு மடத்தின் தலைவரைக் கூப்பிட்டுப் பூஜை செய்து மடத்தைத் துவக்கிவிடலாம். வீட்டின் சொந்தக்காரரே கூட மடத்தின் தலைவராக மாறிவிடலாம். இல்லையேல் வேறொரு சாமியாரை நியமிக்கலாம். அயோத்தியிலிருக்கும் சாமியார்கள் பெரும்பாலும் பீகாரைச் சேர்ந்தவர்கள்; பிராமணர் அல்லது பூமிகார் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டுமென்று நாடெங்கும் சென்று நிதி வசூலித்து அதை முறையாகக் கணக்கு வைக்காமல் தங்கள் ஆடம்பர வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பல மடங்கள் கந்து வட்டித் தொழிலை நடத்துகின்றன.

அயோத்தியில் உள்ள மடங்களுக்குப் பல மாநிலங்களில் ஏராளமாகச் சொத்துக்கள் உண்டு. இந்தச் சொத்துக்கள் வேறு ஒருவர் கைக்குப் போய்விடப் போகிறதேயென்று தலைமைச் சாமியார்கள் திருமணம் செய்து கொண்டு, வாரிசை உருவாக்கிக் கொள்கிறார்கள்! சிலர் 'சின்ன வீடும்' வைத்துக் கொள்கிறார்கள்!

ராம்சரண்தாஸ் என்ற சாமியார் மீது பல கிரிமினல் வழக்குகள் இருந்தன. இவர் தமது கள்ளக் காதலியைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது போலீஸாரால் மடக்கப்பட்டார். அப்போது நடந்த துப்பாக்கிச் சண்டையில் கொல்லப்பட்டார். சொத்துத் தகராறு காரணமாக அடிக்கடி கோஷ்டி மோதல் நடப்பதால் சுமார் ஐம்பது தலைமை சாமியார்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது!

மூன்று வருடங்களுக்கு முன் எடுத்த புள்ளிவிவரப்படி சுமார் தொண்ணூறு சாமியார்கள் மீது கிரிமினல் வழக்குகள் இருக்கின்றன. 1998ல், பயங்கர குற்றவாளிகளைத் தேடுவதற்காக சில மடங்களில் போலீஸார் அதிரடி சோதனை நடத்தினார்கள். அப்போது சுதாமா தாஸ், லட்சுமணதாஸ், பஜ்ரங்தாஸ் என்ற சாமியார்களிடமிருந்து நவீன துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன.

அயோத்தியில் உள்ள ஹனுமான் கார்கி என்ற மடத்தில் நடைபெறும் கோஷ்டிச் சண்டை மிகவும் பரவலாகப் பேசப்படுவது. அங்கு கியான்தாஸ், ராம்தாஸ் என்ற இரு தலைமைச் சாமியார்களிடையே பயங்கரமான அதிகாரப் போட்டி நடந்து கொண்டிருக்கிறது. இதில் கியான்தாஸுக்கு சமாஜ்வாடி கட்சியும், ராம்தாஸுக்கு பா.ஜ.கவும் முட்டுக் கொடுக்கின்றன! இந்த மடத்தில் உள்ள படிக்கட்டு ஒன்றில் அசோக் சாம்ராவ் என்பவரின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறது. இவர் போலீஸால் தேடப்பட்டு வந்த கிரிமினல்! மோதலில் கட்டுக் கொல்லப்பட்டார். இவரது குரு திரிபுவன் தாஸ் என்பவர். இந்தத் திரிபுவன் தாஸ் ஹனுமான் கார்கி மடவிவகாரங்களில் தலையிட்டு ராம்தாஸுக்கும், கியான்தாஸுக்கும் இடையில் பாலிடிக்ஸ் செய்தவர். இந்த மடத்தின் அதிகாரப் போட்டியில் பல கொலைகள் விழுந்துள்ளன. ஒருமுறை திரிபுவன் தாஸ் போலீ

லால் மடக்கப்பட்டபோது முன்னாள் பிரதமர்கள் சந்திரசேகர் மற்றும் நரசிம்மராவ் பெயர்களை உபயோகித்தாராம்.

இது போன்று சாமியார்களின் போட்டி, பொறாமை, வன்முறை, ஆபாசம் ஆகியவற்றால் இந்து மதத்திற்கு வரும் அவப் பெயரைத் துடைக்கவும் சாமியார்களைச் "சுத்தப்படுத்த"வும் சில காலத்துக்கு முன் வி.ஹெச்.பியால் 'அயோத்தி விதாஸ் மன்ச்' என்ற அமைப்பு துவங்கப்பட்டது. ஆனால் சங் பரிவாருக்கு எதிராக இருக்கும் சாமியார்கள் இந்த அமைப்பைச் சார்ந்தவர்களை மிரட்டியதால் மன்ச் முடக்கப்பட்டது.

இப்போது அயோத்தி சாமியார்கள் ஒட்டுமொத்தமாக திகம்பர் மடத்தின் தலைவரான ராமச்சந்திர பரம்ஹம்ஸை எதிர்த்து நிற்கிறார்கள். இதற்கு முக்கியக் காரணம் பரம்ஹன்ஸ், வி.ஹெச்.பியுடன் சேர்ந்து கொண்டு அவர்கள் ஆதாயத்துக்கு ஏற்ப ராமர் கோயில் விவகாரத்தை கையாள்வதுதான். அது தவிர பரம்ஹம்ஸுக்கு ராமர்கோயில் கட்ட அளிக்கப்படும் கோடிக்கணக்கான ரூபாயும், மற்ற சாமியார்களின் கண்களை உறுத்துகிறது!

ஆதாரம் : த வீக்.

தொகுப்பு : கௌசி





கைப்பையைத் திறந்த ஹேமா, "ஐயோ...!" என்று தீயைத் தொட்டுவிட்டவள் போல் அலறினாள்.

"என்னாச்சு? ஏன் கத்தறே?" - பரத் கேட்டான்.

"பணத்தைக் காணோங்க..."

"உன் ஹேண்ட்பேக்கில் இருக்கிற பணத்தைத் திருடறதுக்குன்னு ஸ்பெஷலாவா வீட்டுக்குத் திருடன் வரப் போறான்? சரியாப் பாரு. இருக்கும்."

"ரெண்டு நூறு ரூபா நோட்டு. புதுசு. காலையில தான் எடுத்து வச்சேன். காணோம்."

"காணாமப்போன ரூபா நோட்டை சாயந்திரமா தேடிக்கலாம். இப்ப சீக்கிரமா கிளம்பு. ஆபிஸுக்கு லேட்டாகுது. நேத்தே எம்.டி. என்னை வறுத்து எடுத்துட்டார். உன்னை வேற டிராப் பண்ணிட்டு அப்புறம் போகணும் நான்..."

காற்றில் அலைந்தன தலை முடியும், சேலைத் தலைப்பும். இழுத்து செருகிக்கொண்டாள் ஹேமா. பரத்திடம் சொல்வதா, வேண்டாமா? பில்லியனில் இருந்த ஹேமாவால் தீர்மானிக்க முடியவில்லை. குழம்பினாள்.

பரத் கோபக்காரன்.

சரியாகப் படிப்பதில்லை. ஊர் சுற்றுகிறான். உதவாக்கரை... பொறுக்கி என்று ஹரீஷைக் கண்டாலே அவனுக்கு ஆகாது. மகன் தந்தையிடம் ஒட்டுவதே கிடையாது. ஆத்திரம் வந்தால் கண் மண் தெரியாது பரத்துக்கு. அவன் பேச மாட்டான். இடுப்பு பெல்ட்டு தான் பேசும். ஹரீஷின் முதுகெல்லாம் சிவந்துவிடும்... விளாறு விளாறாக... அறையும் உதையும் மாறி மாறி விழும்.

கொஞ்ச நாளாகவே ஹரீஷ் தன் கைப்பையைக் குடைவதை ஹேமா கண்டிட நேர்கிறது. சொல்லி வைத்தது போல் அந்தக் குடைச்சல் பொழுதுகளுக்குப் பிறகு ரூபாய் நோட்டுகள் மாயமாக மறைந்து விடுகின்றன. விசாரிப்புகளின்போது, "பேனா எடுத்தேம்மா", "பேப்பர் இருக்கான்னு பாத்தேன்" என்கிற சாக்குகள்.

ஹரீஷ் பணத்தைத் திருடுகிற விஷயம் தெரிந்தால், பரத் ஹரீஷை உண்டு இல்லை என்று ஆக்கிவிடுவான். ஆனால் மகனின் திருட்டுத்தனம் தந்தைக்குத் தெரியாமலிருப்பதும் நல்லதல்ல.

"பரத், உங்ககிட்ட ஒரு முக்கியமான விஷயம் பேசணும்."

"சொல்லு..."

"ஹரீஷ் பத்தி..."

"என்ன? உம் மகன் வழக்கப்படி எல்லா சப்ஜெக்ட்டுலயும் கோட்டு. அதானே...?"

"இல்லைங்க. இது வேற விஷயம்..."

"என்ன?"

"ஹரீஷ், பணத்தைத் திருடறான்னு நினைக்

வர்ஷா



"எப்படியோ ஒழி..." ஹேமாவின் அலுவலகம் வந்து சேர்ந்திருக்க, பைக் நின்றது. இறங்கிக் கொண்டாள்.

"என்னங்க, சாயந்திரம் சீக்கிரமா வந்துடுங்க. சித்ரா பௌர்ணமி. கோவிலுக்குப் போகணும்...'' - பைக்கில் விரைந்து கொண்டிருந்த பரத்தின் முதுகு நோக்கி ஹேமா பேசிய வார்த்தைகள் காற்றில் கரைந்து, தேய்ந்து பரத்தின் இலேசான தலையசைப்பில் அசிரத்தையாக எதிரொலித்தது.

வெள்ளைக்கார முகங்கள்... ஒருவர் வாயை இன்னொருவர் மென்று தின்று கொண்டிருந்தனர். அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தனித்துக் கிடந்த ஜோடிகளில் சில, மென்று தின்றலைப் பிரதிபலிக்க முயற்சித்துக் கொண்டிருந்தன. திரையரங்கு இருட்டு கொடுத்த துணிச்சல். அந்த ஜோடிகளுள் ஒன்றில், ஒரு தலை பரத்தினுடையது. இன்னொன்று... ஹேமாவினுடையது இல்லை!

திரை வெற்றாகி விளக்குகள் பிரகாசித்தன.

பேனா

கிறேன்..."

"என்னது?"' பைக் ஒருமுறை வளைந்து பின் நேரானது. "ஆமாங்க. ஆரம்பத்தில் அஞ்சு பத்துன்னுதான் குறைஞ்சுது. இப்ப... நூறு இரு நூறுன்னு காணாப் போயிடுது..."

"பணம் அடிக்கடி தொலையுதுங்கறே. ஏன் இத்தனை நாளா எங்கிட்ட சொல்லலை? கடச் சுட இரும்புக் கம்பியால உள்ளங்கையில நாலு இழுப்பு இழுத்தா... மறுபடி அந்தக் கை திருடுமா?"

"இப்படி நீங்க அடி உதைன்னு இறங்கிடுவீங்கன்னுதான் உங்ககிட்ட சொல்லலை. வளர்ற புள்ளைங்க அவன். நல்லது கெட்டதை நாமதான் எடுத்துச் சொல்லி திருத்தணும்."

"நாலு மிதி மதிச்சாதான் அவன் சரியா வருவான். இந்தத் திருட்டு விஷயத்தை எங்கிட்ட விட்டுடு. நான் பார்த்துக்கிறேன்..."

"நான் ஹரீஷ்கிட்டப் பேசிப் பார்க்கறேனே..."

"மறுபடி எப்போ பரத்?"' பரத்தோடு இழைந்துகொண்டிருந்தவள் கேட்டாள். எக்கச்சக்கமான ஒப்பனை கலைந்திருந்தது.

"நான் ஃபோன் பண்றேனே?"

"நம்பர் மாறிடுச்சு பரத். புது நம்பரைக் குறிச்சுக்க..."

"ம்..." பாக்கெட்டிலிருந்த சினிமா டிக்கெட்டை எடுத்து உள்ளங்கைகளில் வைத்துக்கொண்டு, "சொல்லு" என்றான் பரத்.

"ஃபோர் சிக்ஸ் நைன்...எய்ட் ஒன் ஃபைவ் த்ரீ..."

"சிக்ஸ்... நைன்... ச்சட்..." இலக்கம் இலக்கமாக எழுதிக் கொண்டிருந்த பரத்தின் பின்னாலிருந்து ஒருவர் மோத, எகிறித் தெறித்து விழுந்தது பேனா.

குனிந்து தேட ஆரம்பித்தான் பரத். எந்த

இருக்கையின் கீழ், எங்கே உருண்டு ஓடியதோ பேனா... அவன் கைகளில் சிக்கவில்லை. "சார்..." - அரங்கை விட்டு வெளியேறும் அவசரத்திலிருந்த பரபரப்புக் குரல்கள் பரத்துக்குப் பின்னால் வரிசையாக ஒலித்தன.

'விடு பரத், பேனாதானே..' விட்டுவிட்டு வெளியேற வேண்டியதாகப் போயிற்று.

தங்க நிற பேனா. ஜொலிக்கும். எழுத்துக்கள் வெண்ணெயாக வழுக்கும். தொலைந்த பேனாவை மறப்பது சிரமமாக இருந்தது பரத்துக்கு.

வார்த்தைகளின் அழுத்தத்தில் தெரிந்தது ஹேமாவின் கோபம். "சீக்கிரமா வாங்க. கோவிலுக்குப் போகணும்னு காலையிலேயே சொன்னேன். பன்னிரண்டு மணிக்கு மேல வீட்டுக்கு வர்றீங்க."

"இல்லை ஹேமா. கிளம்புற நேரம் எம்.டி. ஒரு வேலை கொடுத்துட்டார். ஒரு ஃபாரின் கிளையண்ட், ஏர்போர்ட் போய் ரிசீவ் பண்ண சொல்லிட்டார். எந்த ஃப்ளைட் கரெக்ட் டயத்துக்கு வருது? அதை விடு. உன் திருட்டுப் புள்ளை என்ன சொல்றான்? இன்னைக்குச் சீக்கிரம் வந்திருந்தேன்னா அவனை உண்டு இல்லைன்னு ஆக்கியிருப்பேன்..."

"விடுங்க. ஹரீஷ் தூங்குறான். இன்னொரு நாளைக்குப் பாத்துக்கலாம்."

சண்டைக்காரன் கையில் சாட்சிகள் சிக்கிக் கொள்கிற நியதியைச் சொல்லியபடி விடிந்தது காலை.

"ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டில் கையெழுத்து வேணும்..." குரலைப் போலவே முகமும் இறுகிக் கிடந்தது ஹரீஷுக்கு.

நீல நிற முன்னேற்ற அட்டை விசிறிக் கடாசப்பட்டது. ரௌத்ரமானான் பரத். 'நீ படிக்கிற லட்சணத்துக்கு என் கையெழுத்து ஒரு கேடா?"



கோமாளி கல்லூரி

வெனிஸ் நகரில் கோமாளி கல்லூரி அமைந்துள்ளது. கோமாளிகளுக்கு பயிற்சியளிக்கும் இக் கல்லூரியில் 50 மாணவர்களுக்கு மட்டுமே இடமுண்டு. எட்டு வாரப் பயிற்சியில் கழைக்கூத்தாடுதல், பொய்க்கால் கட்டி ஆடுதல் போன்ற பல வித்தைகள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

- நெ. இராமன்

ஹரீஷிடம் அச்சமில்லை. அசைவுமில்லை. "கையெழுத்து நீங்க போட வேணாம்." இன்னொரு நாற்காலி இழுத்துப் போட்டு தந்தைக்கு எதிர்ப்புறம் அமர்ந்தான். "நானே போட்டுக்குறேன்..."

பாக்கெட்டிலிருந்து பேனாவை எடுத்து, 'ப...ர...த்...' நிதானமாக தந்தையின் கையெழுத்தைப் போட்டுக் கொண்டிருந்தன ஹரீஷின் கரங்கள். பார்வையில் வெளிப்படை அலட்சியம். வேண்டுமென்ற அவமரியாதை.

ஜொலித்தது தங்க நிற பேனா. சிலையாகிவிட்ட பரத்தைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது.

"டேய் ஹரீஷ்... என்னடா இது? அப்பா முன்னாடியே அப்பா கையெழுத்தை... டேய்.."

அம்மாவின் பதற்றத்தையும்கூட எளிதாகப் புறக்கணித்து, வெளியேறினான் ஹரீஷ்.

மணிபர்ஸை மூடி பாண்ட் பாக்கெட்டுக்குள் வைக்கப்போன பரத், ஏதோ பொறி தட்ட, மூடிய பர்ஸை மறுபடி திறந்தான். புருவம் சுருங்கியது. முகம் கறுத்தது.

"என்ன பரத்? பணம் குறையுதா? எங்கிட்ட விட்டுட்டு உங்ககிட்ட திருட ஆரம்பிச்சுட்டானா? ஹரீஷ் போக்கே சரியில்லை. எனக்கு ரொம்ப பயமாயிருக்குப் பரத்..."

"சின்னப் பையன் தானே... போறான் விடு. எல்லாம் சரியாயிடும்."

ஹேமா நம்ப முடியாமல் பார்த்தபோது அந்தப் பார்வையைத் தவிர்த்தான் பரத். அவன் கவலை அதிகமாயிற்று... ○

✉ அரசியல்வாதிகளும் அவர்தம் உறவினர்களும் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களுள் பாதியை ஏற்கெனவே விழுங்கி விட்டனர். மீதமுள்ளதையும் தரிசு நில அபிவிருத்தி திட்டத்தின் மூலம் விழுங்கப் போகின்றனர் என்பது உண்மை. மக்கள் வாயில்லா ஜீவன்களாக இருக்கும்வரை இந்நிலை தொடரத்தான் செய்யும்.

சொக்கலிங்கநகர்,
ராஜேஸ்வரி

✉ 'குக்கிராமத்தில் ஒரு நாள்' அட்டைப்படக் கட்டுரை அனுபவங்கள் ஒரு கிராமத்துக்கே அழைத்துச் சென்றுவிட்டன. என் இளமைக்காலத்தில் கிராமத்தில் வாழ்ந்த வாழ்க்கையை அசை போட வைத்தன. பரபரப்பான இன்றையச் சூழலும் அன்றைய அமைதியான சூழ்நிலையும் எண்ணி ஏங்க வைத்தன.

ஈரோடு, ந.சந்திரமௌளி

✉ மண்ணையும், மனுஷங்களையும் படம் பிடித்துக் காட்டிய பாரதிராஜா 'வேட்டி கட்டினால் உடல் தளர்ந்து, அதனால் உள்ளமும் தளரும்..' என்று கூறியிருப்பது வித்தையாக உள்ளது. உழைக்கிறவனுக்குத் தெம்பு, உடுத்தற உடுப்புல இல்லைங்க, அது அடிமனசுல இருக்கு...

கல்லிடைக்குறிச்சி,
வே.முத்துக்குமார்

✉ வாஸந்தியின் புதிய தொடர் நல்ல ஓப்பனிங் கோடு பறக்க ஆரம்பித்து விட்டதே!

நெய்வேலி, சாந்திசுந்தர்



தோப்பில் சுற்றி...
பதநீர் குடித்து...
வாய்க்காலில் குளித்து...



✉ பீறிடும் பேருற்சாகத்திற்கு ஜீன்ஸையும், உளத் தளர்வுக்கு வேஷ்டியையும் காரணம் காட்டி வித்தியாசமான கருத்துப் பின்னலுடன் தம் மனவாசனையைத் தத்ரூபமாக வெளிப்படுத்தியுள்ளார், இயக்குநர் பாரதிராஜா!

கு.கழுகாசலபுரம்,
எஸ்.ஏ.கேசவன்

✉ சில சிறுகதைகள் நம் உள்ளத்தை உருக்கிவிடும். 'தம்பி லட்சுமணா' அந்த ரகம். அதன் யதார்த்தம் மிகவும் கவர்ந்தது.

கும்பகோணம்,
வி.லக்ஷ்மணன்

✉ சுப்ர. பாலனின் 'மண்ணைப் பற்றி' பல அரிய தகவல்களைத் தந்தது.

மதுரை, பி.சாய்குரு.

✉ கி.ராஜநாராயணனின் 'காதல் சடுகுடுகுடு' தகவல்கள் சுவையாக இருந்தன. காதலில்தான் எத்தனை விதம்! அடையாத காதல்தான் வெற்றிப் பெற்ற காதலா? இப்படியொரு புதுப் பிரச்னையைக் கிளப்பியுள்ளாரே!

லைன்மேடு, பொ.கு.பிரியா

✉ தமிழகம் முழுவதும் உள்ள அற்புதமான கிராமங்களைச் சுற்றிப் பார்த்து, பதநீர் குடித்து, வாய்க்காலில் குளித்து, தோப்பில் சுற்றிய சுகானுபவத்தை மீண்டும் உணர வைத்தது, மண் வாசனைச் சிறப்பிதழ்.

கோவில்பட்டி,
வீ.கணேசன்

திறுதலையாய்ச் சுற்றிக் கொண்டிருந்த சட்டக் கல்லூரி மாணவன் சூர்யா, இந்திய தபால் தலையில் இடம் பெறும் அளவுக்கு உயர்வதுதான் கதை!

கதையின் கரு என்னவோ 'நச்' என்றுதான் இருக்கிறது. ஆனால் படம் பண்ணியவிதம் "அச்சச்சோ" என்று உச்சுக் கொட்ட வைக்கிறது. ஓவர்டோஸ் காட்சிகளின் பாரம் தாங்காமல் மூச்சுத் திணறும் திரைக்கதைதான் முதல் காரணம்.

எது மாதிரியும் இல்லாமல், புதுமாதிரியாகவும் இல்லாமல் டார்ச்சர் பண்ணும் இமானின் இசை.

விஜயை ஹீரோயிசத்துக்குள் வலிய திணிக்க முயற்சி செய்வதால் யதார்த்தத்திலிருந்து அந்நியப்படும் தெலுங்குப்பட வாசனை. இப்படி இதரக் காரணங்களை நிறையவே அடுக்கலாம்.

டாபிகல் டாகுமெண்டரி தன்மையோடு சம்பவங்களைக் கையாள்கிறேன் பேர்வழி என்று மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்னையைப் பூஞ்சோலை என்று பெயரில் மட்டுமே உல்டா செய்திருக்கும் இயக்குனர், அந்தப் பிரச்னையின் ஆழம் தெரியாமல் அதை அரை வேக்காடாக்கியிருக்கிறார். பாவம் உலக

நேற்று முளைத்த ஹீரோ கூட தாதா இமேஜ் கதைகளைத் தேடிப் போய் நடித்து, பிலிம் சுருளை இரத்தத்தில் கழுவும் கால கட்டத்தில், பிரசாந்தை மட்டும் நொந்து கொள்ள முடியாது என்ற ஆறுதலோடு படம் பார்க்கத் தயாராகிறோம். முழு அடைப்பன்று (பந்த்) பிரசவ வலியால் துடிக்கும் பெண்ணைக் காரில் மருத்துவமனைக்கு அழைத்துப் போகும்போது தடுத்து நிறுத்தி தாக்குகிறது ரவுடிக் கும்பல்! உயிர்காக்க 'தமிழ்' அழைக்கப்படுகிறார். விரைந்து வந்தவர், கர்ப்பிணிப் பெண்ணின் அண்ணன், அம்மா, கார் ஓட்டுனர் எல்லோரும் அடிவாங்குவதைக் கூலாக நின்று போஸ் கொடுத்தபடி சில வினாடிகள் வேடிக்கை பார்த்துவிட்டு, ரவுடிகளைத் தனியொரு ஆளாக விரட்டி அடிக்கிறார்.

அய்யோடா சாமி... நாம் எதிர்பார்த்தது மாதிரிதான் இருக்கின்றன ஆரம்பக்காட்சிகள் என்று நெளிய ஆரம்பித்தால், பிளாஷ் பேக் வந்து விடுகிறது.

'தமிழ்' எப்படி ரௌடியானான் என்ற பிளாஷ்பேக். ஒரு ஐந்து நிமிடம்தான் படம் ஓடியிருக்கும்... பிரசாந்த் என்கிற நடிகன் தொலைந்து போய் வெளிநாட்டு வேலைக்காகக் காத்திருக்கும் ஒரு சாதாரண நடுத்தர குடும்பத்து எளிய இளைஞனாக, மதுரையில் தமிழைச் சந்திக்கிறோம்.

செயற்கையாக சித்திரிக்கப்பட்டிருக்கும் பெரியவர் பாத்திரம், இடையிடையே வரும் பாடல் காட்சிகள், இவைதான் நாம் சினிமா பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அவ்வப்போது நினைவூட்டுகின்றன. மற்றபடி எல்லா பாத்திரங்களும் இரத்தமும் சதையுமாய் நம்மை நெருங்கி வருகின்றன.



பிரசாந்த் – சிம்ரன் காதலை வலிந்து திணித்துவிடாமல், திரைக்கதை நெடுகிலும், சந்தோஷமும், வலியும் நிறைந்த காதலாய் இழையோட விட்டிருப்பது,

தமிழ்

தமிழன்



அழகி! நடிப்பு எங்கேனும் விலைக்குக் கிடைக்குமானால் வாங்கிக் கொள்வார் போலும். விஜய், ப்ரியங்கா காதலை அக்மார்க் இன்பாச்சுவேஷனாக அறிமுகப்படுத்திவிட்டு, கூடுதலாக 'லப்டப்பதி' என்று மோடி வித்தையெல்லாம் காட்டி, விவேக்கின் விரச நகைச்சுவையோடு போட்டி போடுகிறார் இயக்குனர்.

ரேவதி, டெல்லிகணேஷ், கலை இயக்குனர் சாபுசிரில் ஆகிய மூவரும் தனித்து தெரிகிறார்கள்.

நிற்க; பாமரனுக்கும் நாட்டின் அடிப்படைச் சட்டம் தெரிந்திருக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்த மசாலாவின் துணையை நாடியிருக்கிறார்கள். லாஜிக் பற்றியெல்லாம் யோசிக்காமல் மனம் திறந்து பாராட்டிவிட்டு வரலாம். மற்றபடி நல்ல கதையை அலங்கோலப்படுத்தியதில் தமிழனைக் காணவில்லை. தகவல் தெரிந்தால் தெரிவிக்க வேண்டிய முகவரி: விஜய்அட்அறுவைடாட்காம்!

• ஆவரெஜ்

யதார்த்தத்தின் விகிதத்தை மேலும் கூட்டி விடுகிறது.

துஷ்டனைக் கண்டால் தூர விலகிப்போகும் மென்மையான இளைஞனாய், உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஒரு கணம் தடுமாறி எதிரியின் கையை வெட்டி விட்டு, "நாம்தான் வெட்டினோமா?" என்று கலங்கும் பிரசாந்தின் நடிப்பில் முதல் முறையாய்க் கொஞ்சம் முதிர்ச்சி பளிச்சிடுகிறது.


"கத்தியை எடுத்தவன் அதை என்ன காரணத்துக்காக எடுத்தான் என்பதைப் பொறுத்துதான் அவனுக்கு வாழ்வா? சாவா?ன்னு முடிவாகுது" என்று அனுபவம் பேசும் தொழில்முறை ரௌடியாக, நொடிக்கொரு 'திருக்குறள்' உதிர்த்தபடி ரத்தினம் பாத்திரத்தில் மிளிர்கிறார் நாசர்.

இடைவேளைக்குப் பிறகு இறுக்கமாகிவிடும் மனநிலைக்கு அவ்வப்போது இதம் தருகிறது பரத்வாஜின் இசை.

'தமிழ்' பிரசாந்த் படமோ, சிம்ரன் படமோ அல்ல. ரவுடியிசத்தை நேர்மையாகவும், நடுநிலையோடும் கையாண்டிருக்கும் இயக்குனரின் படம். வெல்டன் ஹரி.

— விஷுவல்தாசன்

• அபவ் ஆவரெஜ்





* கடல் தாவர வகைகள்



மகாசக்தி இந்தக் கடல்! இதில் இல்லாததே இல்லை. ஆற்றலில் கதிரவனுக்கு ஒப்பானதாய்க் கூடச் சொல்லலாமோ என்னவோ!

பூமிப் பந்தின் வெளிப்பரப்பில் எழுபத்தோரு சதவிகிதம் கடலால் மூடப்பட்டிருக்கிறது என்பதில் வியக்க ஒன்றுமில்லை. ஆனால் வானத்தைப் பற்றி நாம் அறிந்துள்ளவற்றைவிடக் கடல் ஆழச் செல்வங்களைப் பற்றி நாம் அறிந்திருப்பது குறைவு என்கிறார்கள்.

கடலாழத்தை எதிரொலிக் கருவிகளின் மூலமாகவே (Echo sounder) அறிந்து கொள்ள முடிகிறது. அதிகபட்ச ஆழம் ஏறக்குறைய பதினோரு கி.மீ. இதில் மூன்று கிலோமீட்டர் உயரத்துக்குக் கடலின் அடித்தரை மிருதுவான சேறும் சகதியுமாக உள்ளது. கடல் வாழ் உயிரினங்களின் எலும்புத் துகள்களால் ஆனது இது.

அவ்வளவு ஆழத்துக்கு யாரும், எந்தக் கருவியும் போய்ப் பார்த்ததில்லை. கடல் நீரின் மேல் அழுத்தம், கீழே போகப் போக அதிகமாகிக் கொண்டே இருக்கும். ஆதலால் கடல் ஆழம் தொடுகிற ஆற்றல் - இப்போதைக்குச் சாத்தியமே இல்லை. சூரியப் பரப்பில் போய் இறங்குகிற காலத்தில் இதுவும் சாத்தியமாகலாம்!

கடல் அலைகள் கரைப் பகுதியை நோக்கி வருகிறபோது திரட்டிக் கொண்டு வருகிற சக்தி அபரிமிதமானது. இந்தக் கடல் அலைகளை நம்முடைய தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்கிற தொழில் நுட்பம் இன்னும் கைகூடவில்லை. எதிர்காலத்தில் மின் ஆற்றல் தேவைகளை ஈடு செய்யக்கூடிய 'நுகரப்படாத திறன்' (untapped potential) இந்தக் கடல் அலைகளில் நிரம்பிக் கிடக்கிறது.

இதைத் தவிரக் கடல் நீரின் மேற்பரப்பில் மேல் படுகிற கதிர்வீச்சால், கடல் நீர் கொதிப்படைகிறது. ஆனால் இந்தக் கடல் வெப்பப் பரப்புக்கு ஆயிரம் மீட்டர்கள் ஆழத்திலோ, உறை நிலைக்கும் சற்றுக் கூடுதலான வெப்பம் நிலவுகிறது என்கிறார்கள். சூரிய வெப்பத்தைக் கடல் பரப்புச் சேமித்து வைக்கிற முறைக்குக் 'கடல் வெப்பத் திறன் மாற்றம்' (OTEC) என்று பெயர் சொல்கிறார்கள்.

பிரான்சு நாட்டு அறிவியல் அறிஞர் ஆர்ஸேய்ன் டி ஆர்ஸோன்வால் என்பவர் இந்தக் கடல் வெப்ப மாற்றம் பற்றி நூற்றி

கடலைச் சரண் புகுவோம்!

யிருபது ஆண்டுகளுக்கு முன்பே கருத்துச் சொல்லியிருக்கிறார். இதன் அடிப்படையில், இவருடைய மாணவர் ஒருவர், 1930 வாக்கில் கியூபாவின் கடல் பகுதி ஒன்றில் கடல் பரப்பு வெப்ப ஆற்றல் நிலையம் ஒன்றை நிறுவினார். ஆனால், அப்போது வீசிய புயல் ஒன்றால் அந்த நிலையம் சேதமுற்று அழிந்தது. அந்தக் கால கட்டத்தில் எண்ணெய் வளம் மலிவானதாக இருந்து, நிரம்பவும் கிடைத்ததால் அந்த முயற்சி தொடரப்படவில்லை.

Seaweeds எனப்படுகிற விதம்விதமான கடல் தாவர வகைகள் உண்டு. தென் அமெரிக்கக் கடல் பகுதியில் டியெர்ரா டெல் ப்யூகோ என்கிற இடத்தில் ஆயிரம் அடி நீளமுள்ள கடல் தாவரங்கள்கூட உள்ளன என்கிறார்கள். பசிபிக் பெருங்கடல் பகுதியில் சில தாவரங்கள் தினசரி நாற்பது




செ.மீ நீளம் வளர்வதாகவும் சொல்கிறார்கள். இந்தக் கடல் தாவரங்கள் ஒளிச் சேர்க்கை முறையில் சூரிய ஆற்றலைத் தம்முள் கிரகித்துக் கொள்கின்றன. இவற்றைத் தக்க முறையில் பயன்படுத்தினால் எரிபொருள், உணவுப் பொருள் தேவைகளைத் தவிர, தொழிற்சாலைத் தயாரிப்புகளுக்கும் உதவும் என்று கண்டறிந்திருக்கிறார்கள்.

நம் நாட்டில், மகாராஷ்டிரக் கடற்கரைப் பகுதியில் மட்டும் மூவாயிரம் டன் கடல் தாவரங்களை ஒவ்வோர் ஆண்டும் உற்பத்தி செய்ய முடியும் என்று, இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கணக்குத் தரப்பட்டது.

கடல் அலைகளிலிருந்து மின் ஆற்றல் பெறும் நிலையங்கள் பிரான்சு, சீனா, அர்ஜண்டினா போன்ற நாடுகளில் நிறுவப்பட்டு, மின் ஆற்றல் பெறுகிறார்கள். நம் நாட்டில் குஜராத், மேற்கு வங்கக் கடல் ஓரங்களின் சில குறிப்பிட்டப் பகுதிகளில் நிறுவ முடியும் என்று தேசியக் கடல் வள ஆய்வு நிறுவனம் ஆய்வு செய்து தெரிவித்தது. தென்னகத்தில் மாமல்லபுரம் கடற்கரைப் பகுதிகூட இந்த முயற்சிக்கு உதவலாம்.

கடல் வளத்திலிருந்து ஆற்றல் பெறுவதில் முக்கியமான ஒரு நன்மையும் உண்டு. இந்த முறையில், சுற்றுப்புறம் மாசுபடுதல், கழிவு அகற்றுதல் போன்ற பிரச்னைகள் எதுவுமே இல்லை என்பதே அது.

— சுப்ர. பாலன்



திரேஸ் கிழவி அவனிடம் காட்டிக் கொண்டதே இல்லை தன் உள்ளக் காயங்களை. அவனும்...

தேவையும் இல்லை. காயம் படாதவனுக்குச் சாராயக்கடையின் முதலுதவி எதற்கு?

இவர்கள் முதலுதவி என நம்பி, மனக் காயங்களை உடலளவில் ஏற்றிக் கொள்கிறார்கள்.

உள்ளுக்குள் காயம் படாமல் எந்த உயிரும் இருக்க முடியாது.

வாழ்க்கை சந்தோஷ கணங்களைவிட, தோற்றுப் போன, வெருண்ட, இருண்ட, கணங்களையே அதிகம் தேர்ந்தெடுத்து நினைவில் கொள்ளுகிறது. எதிர்காலத்தில் பாடங்களாக, அபாய முன்னறிவிப்புகளாக அவை பயன்படும் என்கிற சிற்றாசை, எதிர்பார்ப்பு...

பெரும்பாலும் அவை பயன்பட வேண்டிய நேரம், பயன்படுத்த லாயக்கில்லாத, திருமணக் கூரைப்புடைவைகளாக, கல்யாணக் கோட்டுகளாக... நைந்தோ, அளவு சிறுத்தோ போய்விடுகின்றன.

திடீரென கண்ணை இருட்டிக் கொண்டு வரும் கிழவிக்கு. மூச்சிறைக்கும். பசியோ என நினைப்பாள். தானாக சரியாய்ப் போகும் என நினைப்பாள். உள்ளே உருளும் வலி. வலிகள். கண்கள் தாமாக அழும்.

உடல் உறுப்புகள் ஒன்றையொன்று எவ்வளவு நேசிக்கின்றன.

சாவு நினைவு அடிக்கடி வந்தது. அவளுக்குச் சாவு வந்துவிட்டால் நல்லதுதானே? இனி இருந்து ஆவதென்ன? என்ன அனுபவம் தட்டுக் கெட்டுப் போகிறது...

சாராயக் கடைக்குச் சாவைத் தேடித்தான் போனாள். சாவு அல்ல... அங்கே பட்டுப்பாய் விரித்துக் காத்திருந்தது வாழ்க்கை. இதுவரை, அவளது அறுபத்துச் சொச்ச வயதுவரை கிட்டாத வாழ்க்கை!

வாழ்க்கையில்... என்ன அபத்தமான உணர்வுக் கலவைகள்...

மகன்மீது ரொம்ப ஆசையும் பிடிப்பும் வைத்திருந்தாள்... அவனுக்கு ஒரு கல்யாணம் பேசி, மருமகளைப் பார்த்து, பேரக் குழந்தைகளைக் கொஞ்சி, சீராடி...

மகன் இறந்து போனான்.

வாழ ஆசைப்பட்ட மனத்தின் கிளை விரித்தலில்



நச்சென்று விழுந்த கோடரி வெட்டு.

இன்னொரு கையையும் நீட்டினால், கிடைத்தது தங்க வளையல்!

மீண்டும் வாழ ஆசையாய் இருந்தது. அருமையான பிள்ளை சிங்கராஜ். தினசரி தவறாமல் வீட்டுக்குத் தேவையான சாமான் வாங்கிப் போடுவதும், அவளைக் கிண்டலடிப்பதும்...

சோகக் கடலில் மூழ்கி மயங்கி மூச்சுத் திணறி, புதிய தீவின் கரையில் ஒதுங்கிய உற்சாகம் அவனுக்கும்.

தனியே வாழ்க்கையில் சிரிப்பு என்றும், அழுகை என்றும் கிடையாதோ?

சிரிப்பின் உச்சத்தில் கண்ணீர் வருகிறது.

பாறை. பறையின் அடியே நீரின் ஊற்று.

தலை சுற்றச் சுற்ற நடமாடியபடி வீட்டு வேலைகள் செய்தாள். சிங்கராஜுக்காகவாவது நான் வாழ வேண்டும்.

யார் இவன்? என்ன ஜாதி? இவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? உறவும் இல்லை. ஒட்டும் இல்லை. ஒரே மதக்காரனும் இல்லை.

அவள், அவன் பையை வாங்கிக் கொண்டபடியே "எந்தச் சாராயக்கடைல காய்கறி விக்குறாங்கவே?" என்று கிண்டல் செய்கிறாள்.

குடல் அரித்து, வெந்துபோய்... குடல் செத்துப் போனதை அறிவிக்கும்.. தண்டோரா போடும் வலி நடமாட்டம்.

அவன் சாப்பிட உட்கார்ந்தான். உள்ளேயிருந்து சோற்றை எடுத்து வருகையிலேயே... எப்படியோ நிகழ்ந்துவிட்டது. கண்கள் இருண்டு தலை சுற்றி சுடப்பட்ட பறவை போல.

ஆகாயத்தில் முட்டிக் கொண்ட பறவை போல...

அவன் முன்னே பொத்தென வீழ்ந்தாள்.

அவன் பதறி எழுந்து கொண்டான்.

சுவரைப் பிடித்துக் கொண்டு வந்திருக்கலாம், என்று நினைத்துக் கொண்டாள். மயக்கம் தெளிந்து அவன் மடியில் படுத்திருந்த கணம் அது. அப்படியே செத்துப் போயிருக்கக் கூடாதா. என ஏக்கமாய் இருந்தது.

"என்னாச்சு உனக்கு?"

"வயசாச்சு!"

"சரி, வா. யாராவது வைத்தியராண்ட காட்டிட்டு வருவம்..."

"எதுக்கு? எனக்கு இளமை திரும்பவா?"

"சிரிக்காதே நாயே..." என்று கத்தினான் அவன்.

"நான் சிரிச்சா நீதானே அழகா இருக்குன்னு சொல்லுவே?" என்று மேலும் சீண்டினாள்.

"நீ சிரிச்சா நான் அழுதுருவேன்..." என்றவனை விசித்திரமாய்ப் பார்த்தாள். நடுங்கும் விரலால் அவன் முகத்தைத் தடவினாள்.

"சரி, நீ சிரி. நான் சிரிக்கிறேன்..." என்றாள் கிழவி. "நீ அழக்கூடாது. நீ அழுதா, நானும் அழுதுருவேன். என்னால தாள முடியாதுல. நாய்ப்பய, என்னடா இருக்கு இந்தக் கிழவிட்ட.. எம்மேல இத்தனை பாசம் வெச்சிருக்கே?"

ஆகாயத்தில் முட்டிக் கொண்டேன்

எஸ்.ஷங்கரநாராயணன்

ஒரே இரவில் பெரும் மாற்றங்கள். மாயா ஜாலம்!

கல்லறை மேட்டில் வாசனை மரங்கள். பூக்கள்.

பூக்களைப் பார்த்துச் சிரித்தான் சிங்கராஜ் உற்சாகமாய். அடியே இருந்தது கல்லறை!

அவன் வரும்போது எப்போதும்போலச் சிரித்தபடி கதவைத் திறக்கிற கிழவி. சற்று கலவரத்துடனே அவன் கையைப் பிடித்துக் கொண்டு "எய்யா இனி நீ குடிக்கக் கூடாது" என்று அவனிடம் கேட்டுக் கொண்டாள்.

"இப்ப நான் நேராச் சாராயக்கடைலேர்ந்துதான் வரேன்..." என்கிறான் அவன்.

''தொ்ல!'' என்றபோது இருவருமே சிரிக்கிறார்கள்.

அவன் விடவில்லை. "வா டாக்டர்ட்டப் போயி, என்ன ஏதுன்னு பாத்துட்டு வருவம்.."

அவள் அவனைப் பார்த்தாள். விடமாட்டான் போலிருந்தது. ''சரி, சோத்தைத் தின்னு முதல்ல. பெறகு அதைப் பாப்பம்..'' என்றாள்.

ரொம்ப நாளைக்கப்புறம் மனம் யேசுவே, என அரற்றியது. எனக்கு இதுக்கெல்லாம் தகுதியுண்டா யேசுவே? கர்ப்பப்பை கூசினாப்போல ஒரு கிளுகிளுப்பு. குருஸ் கோயில் மணியடித்தது. கடல் அலையில் நிற்கிறாப்போல ஒரு தள்ளாட்டம்.

"ஏண்டா நான் செத்துருவேன்னு பயமா இருக்கா?"

''என்னா சொல்ற நீ? அறை வாங்காதே..'' என்று கத்தினான் அவன். அவன் உடம்பு நடுங்கியது.

உண்மையில் அவளுக்கு அப்போது செத்துப் போக ரொம்ப ஆசையாக இருந்தது.

''மவனே?'' என்று புன்னகை செய்தாள். "ரொம்ப நாளாவே எனக்கு ஆசைடா.. உன்கூட சைக்கிள்ல வரணும்னு..''

அவர்கள் சைக்கிளில் போய்க் கொண்டிருந்தபோது ஊரே சிரிப்பாய்ப் பார்த்தது.


கிழவியின் வயிற்றை அமுக்க, ஆ ஆவென அலறித் துடிக்கிறாள். டாக்டர் உதட்டைப் பிதுக்கினார். "உள்ள குடலே இல்லயேய்யா... எல்லாம் அரிச்சிப் போச்சி... ஒரு எக்ஸ்ரே எடுத்திட்டு வா. எழுதித் தரேன்..'' என்றவர் அவனைப் பார்த்து "கிழவி குடிக்குமா?" என்கிறார்.

இருவரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக் கொண்டார்கள். முதலில் அவள் சிரித்தாள். அவன் தயங்கி, அப்புறம் மெல்லப் புன்முறுவல் செய்து, பிறகு அழுதான்.

''படம் முடியும்போது சம்பந்தமே இல்லாம 'சரக்கு ரயில் விஜயவாடாவில் தடம்புரண்டது'னு ஹீரோ சொல்றாரே.. ஏன்?''

''படத்தின் மூலமா ஜனங்களுக்கு ஏதாவது ஒரு செய்தி சொல்லணுமாம்!''

- தஞ்சை தாமு



''யார் இந்தக் கிழவி?'' என்றார் டாக்டர் சிங்கராஜைப் பார்த்து.

"தொ்ல" என்றாள் கிழவி முந்திக் கொண்டு. சிரித்தாள். அவனுக்குச் சிரிப்பு வரவில்லை.

வரும் வழியில் மருந்துக் கடையில் டாக்டர் சீட்டுக்கு மருந்து வாங்கிக் கொண்டார்கள்.

''மருந்து வேண்டாம். சாராயம் வாங்கிக் குடு'' என்று சிரித்தாள்.

"ஏன் என்னியப் போட்டு இப்பிடி வதைக்கறே..'' என்றான் அவன்.

''உன்னியப் பாத்தா, காத்துப் போன சைக்கிள் டயர் மாதிரி இருக்கு..'' என்று சிரித்தாள்.

"சிரிக்காதே..''

''முந்தில்லாம் என்னியச் சிரி, சிரிம்பே.. இப்ப சிரிக்காதே, சிரிக்காதேன்றியே..''

அவன் பதில் சொல்லவில்லை.

உண்மையில் அவன் மனம், 'யேசுவே. என்னைக் கொண்டு போ, கொண்டு போ..' என்று பிரார்த்தனை செய்து கொண்டிருந்தது.

அன்றிரவு மருந்தைக் குடித்ததும் அவள் சொன்னாள்.

''ஏல, உனக்கொரு பொண்ணு பாத்துருக்கேன்..''

அவன் திரும்பிப் பார்த்தான். "நெசந்தான். பூக்காரிட்டச் சொல்லி வெச்சிருந்தேன். ஒரு துப்பு கொண்டு வந்தா..''

எக்ஸ்ரே, வருமுன் நிகழ்ந்துவிட்டது அது. கிழவி செத்துப் போனாள்.

அவனுக்குக் குளிக்க என்று சுடுதண்ணி வைக்கப் போனவள், தள்ளாடினாள். குடத்துநீர் சிதறச் சிதற... நடக்கும்போதே ஊவென்று... வாயில் ரத்தம்...

கிழவி சுருக்கமாய்ச் செத்துப் போனாள்.

அவன் தலையில் தலையில் அடித்துக் கொண்டு

அழுதான். பார்க்க சகிக்க வில்லை.

நம்ப முடியாத கனவு தானா வாழ்க்கை? கனவு கண்டால் குதிரைத் தள்ளல் தள்ளி மண்வாரி இறைத்து பின்காலால் விடுகிறது ஓர் உதை... அழும்போது மிட்டாய் தருகிறது. கிலுகிலுப்பை ஆட்டுகிறது.

இருட்டு. தனியே வீட்டுக்குள் படுத்திருக்கிறான். புரள்கிறான். கிழவியின் சிரிப்பு காதில் கேட்கிறது. தானறியாமல் "சிரிக்காதே" என்று கத்தி, எழுந்து உட்கார்ந்து கொள்கிறான். உடம்பே நடுங்கி, வியர்த்து வழிகிறது.

அழுகிறான்.

''அழாதே'' என்கிறாள் கிழவி. சுற்று முற்றும் பார்க்கிறான். யாரும் இல்லை.

எழுந்து கொண்டான் சிங்கராஜ். "எங்க போறே?"

"வழியை விடு.. கிழவி!"

"நீ எங்க போறேன்னு எனக்குத் தெரியும்..."

''தெரியுதில்ல... வழியை விடு!"

ஆச்சரியம். "சரி போ" என்று வழியை விட்டாள் கிழவி.

வெளியே வந்தான். தெருவே இருட்டுக்கசமாய்க் கிடந்தது. டிரைனேஜுக்குள் அடைபட்ட உலகம். கிழவி சிரிக்கிறாப் போல இருந்தது. திரும்பிப் பார்த்தான். யாருமில்லை. "போ" என்று காதில் குரல்.

வேண்டாம், என மனது மறித்தது. போவேன், என்று பிடிவாதம் பிடித்தான். அழுகை வந்தது. எனக்கு யாருமில்லை. யாருமே இல்லை...

நான் அழ விதிக்கப்பட்டவன். வேண்டாம், என மறித்தது மனது. தன்னையே பிடித்துத் தள்ளிக் கொண்டு போனான். கால் தயங்கியது. கால்களையும் இழுத்து நகர்த்திக் கொண்டு போனான்.



"நீங்க கொடுத்த செக், பணம் இல்லைனு திரும்பி வந்துடிச்சு சார்..?"

"பாங்க்லயே பணம் இல்லைனா நான் என்ன பண்ணமுடியும் சொல்லுங்க?"

- சீர்காழி வி.ரேவதி



எனக்கு யாரும் இல்லை. யாருமே இல்லை...

சாராயக்கடையில் கூட்டம் இல்லை. "வாங்க தம்பி" என்று கல்லாவில் இருந்து ஒரு சிநேகக் குரல். ''உங்களப் பாத்து நாளாச்சிதே..'' என்று புன்னகைத்தான் அவன்.

வண்ணை பேசவில்லை. நேரே போய் பாட்டிலை வாங்கிக் கொண்டான். வேண்டாம் என மறிக்கிறது ஒரு மனசு. பாட்டிலையே பார்த்தான். "குடி" என ஒரு குரல் சிரிப்புடன்.

"ஏ கிழவி இந்தக் கிண்டலெல்லாம் வேணாம்... நீ சொன்னாலும் சொல்லாட்டியும் நான் குடிக்கத்தான் போறேன்..."

கடகடவென்று ஒரு பாட்டிலைக் கவிழ்த்துக் கொண்டான்.

திகைத்துப் போனான். போதை ஏறவேயில்லை.

என்ன செய்வது? இன்னொரு ரவுண்டு எடுப்பமா? "எட்றா.." என்றன் ஆவேசமாய்.

இன்று இரவு நான் தூங்கியாகணும்...

பாட்டிலை வாங்கியவன் அதைத் தூக்கிப் பார்த்தான். "குடி" என்று உள்ளேயிருந்து சிரிக்கிறாள் கிழவி.

"கிழவி, நீ ஜெயிச்சுட்டே என்னால குடிக்க முடியல.." என்றான் வண்ணை சத்தமாய்.

அவன் அப்படியே வைத்துவிட்டுப் போன பாட்டிலை யாரோ வந்து எடுத்துக் கொண்டார்கள்.

வீடு திரும்பியபோது போதையே இல்லை. மழை விட்டாப் போல இருந்தது.

"சந்தோஷம்" என்று குரல் கேட்டது. சுற்று முற்றும் பார்த்தான். பிறகு சிரித்தான்.

சிங்கராஜ் மறுநாள் காலை கண்விழித்துப் பார்த்தபோது உலகம் வேறுவிதமாய் இருந்தது.

(முற்றும்)



திருச்சியில் கேரளா!

மூவாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் காமராஜரின் முயற்சியால் திருச்சியில் உருவான பாய்லர் ஆலையில் தற்போது சுமார் பத்தாயிரம் பேர் பணிபுரிகின்றனர். கூடவே பத்து லட்சம் மரங்கள் ஜில்லென்று நிழல் பரப்புகின்றன.

பொதுவாக ஆலை என்றாலே அதன் கழிவுநீர், வெளியேறும் புகை மற்றும் சுகாதாரக்கேடு போன்றவை, அருகில் வசிப்போரை வெறுக்கடித்து விடும்.

ஆனால் பாய்லர் ஆலையோ அற்புத வனமாகக் காட்சி தருகிறது. அரசு, ஆல், மூங்கில், வாகை, மா, பலா, வாழை என ஏகப்பட்ட மரங்களோடு நூற்றியிருபத்தியேழு வகையான மூலிகை செடிகளைக் கொண்ட மூலிகைப் பண்ணையும் இங்கிருக்கிறது.

இதுவரை ஏழரை லட்சம் மரங்களைப் பாய்லர் ஆலை நிறுவனமும், இரண்டரை லட்சம் மரங்களைத் தமிழக வனத்துறையினரும் நட்டு வைத்துள்ளனர். இப் பகுதியின் சீதோஷ்ண நிலை எப்போதும் கேரளா போல இருக்கிறது. அருகில் உள்ள திருச்சி மாநகர் உட்பட வேறெங்கும் மழை பெய்யாத நேரத்திலும்கூட இங்கு அவசியம் மழை பொழிகிறது. மழைக்காலங்களில் சாதாரணமாக நூற்றிப்பத்து மில்லி மீட்டர் வரை மழை கிடைக்கிறது.

“ஆரோக்கியமானதொரு சுற்றுச் சூழலைப் பெற்றிருப்பதோடு, தைல மரம் மற்றும் காய்கனி மரங்களால் கணிசமான அளவு லாபமும் கிடைக்கிறது'' என்கிறார் பாய்லர் ஆலை மக்கள் தொடர்பு அதிகாரி மகாலிங்கம்.

பாய்லர் ஆலை கூடுதல் பொதுமேலாளர் ஹர்ஷா, “எங்கள் நிறுவனம் சுற்றுச்சூழல் பராமரிப்பில் முன்னணியில் இருக்கின்றது. இதற்காக நாங்கள் பல விருதுகளையும் நற்சான்றுகளையும் பெற்றிருக்கிறோம்!'' என பெருமையுடன் குறிப்பிடுகிறார்.

அண்மையில் பத்து லட்சமாவது மரக்கன்றை பாய்லர் ஆலை செயலாண்மை இயக்குனர் கோபிநாத் நட்டு வைத்துள்ளார். “மரங்கள் வளர்ப்பினால் மழையும், சுத்தமான காற்றும், மன மகிழ்ச்சியும் கிடைக்கிறது. மனிதனுக்கு வேறென்ன வேண்டும்?” என்கிறார்.

— ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

ஆட்டம் போடும் அதிகாரிகள்!

— வெடிக்கிறார் வெற்றிவேல்!

“ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம். சென்னை மாநகராட்சி, மேயர், துணைமேயர் என இரண்டு பட்டிருப்பதால் அதிகார வர்க்கத்தின் கொடிதான் பறக்கிறது. மக்கள் நலனைப் பற்றி யாரும் கவலைப்படுவதில்லை” என்கிறார் மாநகராட்சி த.மா.க. அணித் தலைவர் வெற்றிவேல்.

“பொறுப்பில் இருக்கும் ஆணையாளர், துணை ஆணையாளர்கள் யாரும் கவுன்சிலர்களை மதிப்பதில்லை. அ.தி.மு.க., தி.மு.க. என்று அந்த விஷயத்தில் கட்சி பாகுபாடு ஏதுமில்லாமல் அதிகாரிகள் அலட்சியம் தொடர்கிறது. தங்கள் வட்டங்களில் உள்ள சில குறைபாடுகளை ஆணையரிடம் சொல்லப்போனால் நீண்ட நேரம் காக்க வைக்கப்படுகிறார்கள். தி.மு.க.தரப்பு மேயரும், ஆளும்கட்சி தரப்பு துணை மேயரும் அதிகாரத்தை நிலைநிறுத்த போட்டிப் போடுகையில், சந்தடி சாக்கில் அதிகாரிகள் தங்கள் கைவரிசையைக் காட்டுகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்ஸிலர்கள் மிகக் கேவலமாக அதிகாரிகளால் நடத்தப்படுகிறார்கள். எந்த கேள்விக்கும் பதில் சொல்வதில்லை.



“உதாரணமாக சென்னை சால்ட் கொட்டார்ஸ் பகுதியில் அரசுக்குச் சொந்தமான ஒன்பது கிரவுண்ட் பொது இடம் மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. வாடகைக்கு விட்டாலும் சரி, குத்தகைக்கு விட்டாலும் சரி, நிறைய வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் இடம் அது. ஆனால், மாநகராட்சி மேயருக்கோ, கவுன்சிலருக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ வாடகைக்கு விட எந்த அதிகாரமும் இல்லை. இருந்தும் அதிகாரிகள் மீன் வியாபாரிகள் சங்கத்துக்கு 25000 ரூபாய்க்கு அந்த இடத்தை வாடகைக்குக் கொடுத்து விட்டார்கள். பெரிய மோசடி. விஷயம் கேள்விப்பட்டு நான் தடுத்தவுடன், போட்ட உத்தரவை நிறுத்தி வைத்தார்கள். சிறிது காலம் அமைதியாக இருந்துவிட்டு மீண்டும் அந்தச் சங்கத்துக்கு நிலத்தைக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இது வெளிப்படையான அதிகார துஷ்பிரயோகம். அரசு இதை தடுத்து நிறுத்த வேண்டும்.

இது தவிர பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி நிதியிலிருந்து செய்யப்படும் நலப்பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் கொடுப்பதில் பத்து பர்சென்ட் அடிக்கிறார்கள் அதிகாரிகள். இது ஒரு பக்கம் இருக்க, மாநகராட்சி ஊழியர்களிடமே, சம்பள நிர்ணயம், பிரமோஷன் போன்றவற்றிற்குப் பணம் பிடுங்குகிறார்கள்.

“மாநகராட்சியின் நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்குச் சொத்து வரி வசூலை தீவிரப்படுத்த வேண்டும் என்று யோசனைகள் தெரிவித்தேன். இப்போது நான்கரை லட்சம் குடியிருப்புகளில்தான் சொத்து வரி வசூலிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட பத்து லட்சம் குடியிருப்புகளில் சொத்து வரி வசூல் செய்யலாம். அந்த அளவு வரி ஏய்ப்பு நடக்கிறது. ஆனால் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இந்த விஷயத்திலும் வசூல் வேட்டையில் இறங்கியிருக்கிறார்கள்.

“இதே நிலை தொடர்ந்தால் இந்தியாவின் நான்காவது பெரிய மாநகராட்சி நாறிப்போய் விடும்!”

சந்திப்பு : ப்ரியன்

படம்: ராஜன்

நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : பணவரவு முயற்சிகளில் வெற்றி உண்டாகும் வாரமிது. சூரியன் வேறு உச்சியில் அமர்ந்து கொண்டிருப்பதால், எதிலும் புத்துணர்ச்சி பொங்கும். 2ல் ராகு, சனி, செவ்வாய் உலவுகிறார்கள். அதனாலும் கவனக்குறைவு, மறதி போன்றவை ஏற்படும். விழிப்பாக இல்லாவிட்டால், வசமாக ஏமாற்றப்படுவீர்கள். வெளிநாட்டுத் தொடர்பு அனுகூலம் தரும். குடும்பத்தில் குதூகலம் கூடும். வார பிற்பகுதியில் பயணம் தவிர்ப்பது நல்லது.



ரிஷபம் : மந்த நிலை மாறி, ஆனந்த நிலை ஏற்படும் வாரமிது. ராசிநாதன் ராசியில் சஞ்சாரம் செய்வதால், அதிர்ஷ்டமான, அனுகூலமான பலன்களை எதிர்பாருங்கள். சுய தொழில் செய்பவர்கள் மேன்மையடைவார்கள். குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் ஏற்படும். திருமணம், புதுமனை புகுவிழா போன்ற சுபகாரியங்கள் நடக்க அடிகோலப்படும். சொத்து சம்பந்தமான வழக்குகள் வெற்றியடையும். ஸ்பெகுலேஷன் இனங்களில் அளவோடு லாபம் உண்டாகும்.




மிதுனம் : தெய்வப்பணி, ஆன்மிக காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும் வாரமிது. 11ல் சூரியன், 6ல் கேது உலவுவதால், பொருளாதாரம் அளவோடு பலன் தரும். கலைத் துறையைச் சேர்ந்தவர்களுக்குச் சுபிட்சம் கூடும். உத்தியோகஸ்தர்கள், அலுவலகப் பணியாளர்கள் விழிப்புடன் செயல்படுவது அவசியம். மறைமுகமான எதிரிகளால் பிரச்னை ஏற்படலாம். குடும்பஸ்தானம், வாக்குஸ்தானம் ஆகிய இடங்களை, சனி ராகுவுடன் கூடிப் பார்ப்பதால், குடும்பநலம் சீராக இருக்கும்.



கடகம் : உத்தியோக விஷயத்தில் நல்ல அனுகூலமான திருப்பம் ஏற்படும் வாரமிது. கிரக பலம் படு ஸ்ட்ராங்காக இருப்பதால், உங்கள் திறமை, செயல்பாடுகள் அனைத்திலும் ஒரு வித பிரகாசம் வெளிப்படும். மறைமுகமாகச் செயல்பட்டு, தொந்தரவு தந்து கொண்டிருந்த எதிரிகள், அப்படியே அடங்கிப் போய்விடுவார்கள். தடைகளும், இடையூறுகளும் விலகி, நன்மையே உண்டாகும். மாணவர்கள் வெற்றி நடை போடுவார்கள். வரவேண்டிய பணம் வசூலாகும். சுபச் செலவுகள் ஏற்படலாம்.



சிம்மம் : உற்சாகமான மனநிலையோடு உலா வரப்போகும் வாரமிது. குடும்பத்திலும், வெளி வட்டாரத்திலும் நல்ல பெயர், புகழ், பாராட்டு அதிகரிக்கும். உத்தியோகஸ்தர்கள், அலுவலகப் பணியாளர்கள் ஆகியோர் உயர் அதிகாரிகளின் அதிருப்தி விலகி நல்ல பெயர், பாராட்டையும் பெறுவார்கள். கொடுக்கல் வாங்கல் சீராகவே இருந்து வரும். குடும்பத்தில் அமைதி ஒற்றுமை ஏற்படும். 7ம் இடத்தை குரு பார்ப்பதால், சுப காரிய முயற்சிகள் வெற்றியடையும். புதிய பொருள்கள், சொத்துகள் வந்து சேரும்.




கன்னி : துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் வாரமிது. சுக்கிரன் 9ல் சனி, ராகு, செவ்வாயுடன் என்பதால் நல்லதும் அல்லாததுமான பலன்கள் நடந்து வரும். சில நல்ல தகவல்கள் வந்து சேரும். கல்வித் துறைகளைச் சேர்ந்தவர்கள் மேன்மை அடைவார்கள். தாமதித்து வந்த சில காரியங்கள் இப்போது நிறைவேறும். புதிய முயற்சிகள் தொடங்கலாம். வாக்கு ஸ்தானத்தை, குரு பார்ப்பதால் குடும்பத்தில் ஒற்றுமை, அமைதி, பண நடமாட்டம் சீராக இருந்து வரும். தான தருமம வழிபாடுகளில் கவனம் செலுத்துங்கள்.



துலாம் : தேக ஆரோக்கியம் மட்டுப்படும். மனக்குழப்பம் அதிகரிக்கும் என்றாலும் குரு பார்வையால் பிரச்னைகள் அடக்கியே வாசிக்கும் வாரமிது. உத்தியோகஸ்தர்கள், உயர் அதிகாரிகளின் கண்டிப்பை அனுசரித்துப் போவது நல்லது. சக ஊழியர்களிடம் சகஜமாகப் பழகுவது உத்தமம். கூட்டாகத் தொழில்புரிபவர்கள் மேன்மை அடைவார்கள். குரு 9ம் இடத்தில் உலவுவதால் பொருளாதார சிக்கல்கள் விலகி, வெற்றி காண்பீர்கள்.



கடக ராசிக்காரரான கர்நாடக இசைப் பாடகி ஹரிப்ரியாவுக்கு இடையூறுகள் விலகி நன்மைக் கிடைக்கப் போகுதாம்.




விருச்சிகம் : திருமணம், மழலை வரவு போன்ற சுபகாரியங்கள் ஏற்படும் வாரமிது. ராசிநாதன் செவ்வாய் 7ல் சனி, ராகுவுடன் இருப்பதால் எதிலும் நிதானம் தேவை. உங்கள் திட்டங்கள், எண்ணங்கள், முயற்சிகள் யாவும் அளவோடு நன்மை தரும். வெளியூர் வெளிநாட்டுப் பயண முயற்சிகள் அனுகூலம் தரும். தெய்வ அனுக்கிரகம் கிடைக்கும். புனித காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். 2ம் வீட்டின் அதிபதியான குரு 2ம் வீட்டைப் பார்ப்பதால், குடும்ப ஒற்றுமை, மேன்மை கூடும்.



தனுசு : புதிய நண்பர்களால் நன்மைகள் உண்டாகும் வாரமிது. குரு 7ல் கேந்திர பலம் பெற்று உலவுவதால், புதியவர்கள் அறிமுகமாவார்கள். உடல் நலிவு, கடன் தொல்லை, எதிர்ப்புகள் என இதுவரை நீங்கள் பட்ட கஷ்டங்கள் எல்லாம் கதிரவன் கண்ட பனிபோல மாயமாய் மறைந்து விடும். பண நடமாட்டம் சீராகவே இருந்து வரும். சிலர் கடல் கடந்து வெளிநாடு போகும் முயற்சிகளில் வெற்றி பெறுவார்கள்.



மகரம் : கோர்ட், வழக்கு, வியாஜ்ஜியங்களில் அனுகூலமான திருப்பம் ஏற்படும் வாரமிது. ராசிநாதன் சனி ராகுவுடன் மற்றும் சுக்கிரன் புதன் ஆகியோருடன் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் இருக்கிறபடியால், தெய்வ பலம் பரிபூர்ணமாக அமையும். 8ம் அதிபதி சூரியன் 4ல் உச்சம் பெற்றிருப்பதால், இதுவரை தாமதமாகி வந்த காரியங்கள் இப்போது நிறைவேறும். அயல்நாடு போகும் வாய்ப்புகள் நெருங்கி வரும். திருமணம் கைகூடும். பெண்கள் நிலை உயரும். பங்கு மார்க்கெட், லாட்டரி விவகாரங்களில் ஈடுபடக் கூடாது.



கும்பம் : மாணவர்களும், கல்வியாளர்களும் சிறப்பான பலன்கள் பெறும் வாரமிது. 3ல் சூரியன் உச்சம், 5ல் குரு பூர்வ புண்ணியஸ்தானம் என்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிரம்பியிருக்கும். இதுவரையிருந்து வந்த மனஸ்தாபம் விரோதம் மறைந்து, பிரிந்தவர்கள் கூடுவார்கள். சிக்கல்களும் சிரமமான சூழ்நிலைகளும் ஏற்பட்ட போதிலும் கடைசியில் வெற்றிக்கொடி பறக்க விடுவீர்கள். சனிப்ரீதி, தெய்வ பிரார்த்தனை, நவக்கிரக சாந்தி செய்வதன் மூலம் தெய்வ பலம் கூடும். ரேஸ், ஸ்பெகுலேஷன் தவிர்க்கவும்.



மீனம் : புதிய தொழில், நூதன வியாபாரம், புதிய உத்தியோக முயற்சிகளில் வெற்றியே கிடைக்கும் வாரமிது. ராசிநாதன் குரு 4ம் இடத்தில் இருந்தாலும், 6ம் அதிபதி சூரியன் உச்சம் பெற்று பலமாக இருப்பதால், காரியங்களிலும் நல்ல பலன்களே உண்டாகும். உத்தியோகத்தில் உற்சாகமான சூழ்நிலை உருவாகும். வியாபாரிகள் வளர்ச்சி காண்பார்கள். குடும்பஸ்தானத்தில் உச்ச சூரியன் செவ்வாய் 3ல் என்பதால் குதூகலமான பலன்கள் கிடைக்கும். சாதுக்கள், சமயப் பெரியோர்கள் தொடர்பு மன அமைதி தரும்.

அக்னி சர்மா பக்கம்

ஏப்ரல் 24 முதல் 30 வரை

பவளமலை பாலகமுருகன்

'முருகனின் மறுபெயர் அழகு' என்று தொடங்கும் பெஹாக் ராக பாடல் ஒன்று உண்டு!

குளுமைக்கு அவன் ஒரு நிலவு
குமரா எனச் சொல்லிப் பழகு...

என்று மெல்லின இடையினப் பிரயோகங்களால் மனத் தொட்டிலில் முருகனையிட்டுத் தாலாட்டி அழகு பார்க்கும் பாடல்! இந்தப் பாடலின் வர்ணனைக்கு ஏற்ப, குளுமைக்கு ஒரு நிலவாகக் காட்சி தரும் குமரனைக் காண நாம் செல்ல வேண்டிய இடம் பவளமலை.



• பவளமலைப் படிகள்

குரு சுரஜானந்தாவின் பாடலைப் போலவே கோயிலும் புதியது தான். சுமார் எழுபது ஆண்டுகள்தான் ஆகியிருக்கும் இந்தக் கோயில் கட்டப்பட்டு.

இயற்கை வளமும் பசுமையான சூழ்நிலையும் அரண் அமைக்க, அதன் மத்தியில் பரபரவென்று இயங்கிக் கொண்டிருக்கும் கோபிசெட்டிப்பாளையம் செல்ல வேண்டும். அங்கிருந்து அத்தியூர் செல்கிற சாலையில் பிரியும் கிளைப்பாதையில் இருக்கிறது பவளமலை. பேருந்தில் போனால் முருகன் புதூர் நிறுத்தம் என்று கேட்க வேண்டும்; இறங்கி நடக்க வேண்டும். ஆட்டோ பிடித்துப் போனால் நடை மிச்சம். மேற்கு திசை நோக்கிய சிறு குன்று. சுமார் நூறடி உயரம்தான். தொண்ணூறு படிகள் ஏறினால் போதும், கண்ணார அவன் அழகைப் பார்த்து விடலாம்!

'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்!' என்பது போன்ற ஆசுவாசத்தில் அடிவாரத்திலேயே அமர்ந்திருக்கிறார் விநாயகர். அவரை முதலில் 'வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு' வணங்கிவிட்டு மேலே ஏறுவோம்.


படியேறிச் சென்றால் மீண்டும் முகப்பு மண்டபத்தில் விநாயகர் இருக்கிறார்! அங்கேயும் கும்பிட்டுக் கொண்டு அண்ணாந்து ராஜ கோபுரத்தைக் கண்டு கன்னத்தில் போட்டுக் கொள்கிறோம். அதிலே அழகிய சுதைச் சிற்பங்களாக ஸரஸ்வதியும் பாலதண்டாயுதபாணி சுவாமியும் கண்ணில் படுகின்றனர்.



• கோயில் தோற்றம்

கிழக்கு நோக்கிய வாயிலைக் கடந்து மேற்குப் பக்கம் உள்ள பிராகாரத்தை அடைகிறோம். மீண்டும் கணநாயகன் இங்கே தனி சன்னிதியில் இருக்கிறான். இடும்பனும் நாகரும் காவல் தேவ

குருஜி ஏ.எஸ். ராகவன்





''செத்துப் போன நம்ம தலைவர் நேத்து என் கனவுல வந்தார்!''

''எப்படி?''

''ஆயிரம் கார்ல 'ஆவி'களை அழைச்சிக்கிட்டு ஊர்வலமா வந்தார்!''

— நெல்லையப்பபுரம் செல்வன்

தைகள் இங்கே. இவர்களிடம் வந்தனம் சொல்லிவிட்டு முன்னேறினால் வள்ளி – தெய்வானையர் தென்படுகின்றனர் – உலகத்தை வென்ற திருப்தி இருவர் முகத்திலும் தாண்டவமாடுவதாகத் தோன்றுகிறது! அழகனை அடைந்த, அவனால் ஆட்கொள்ளப்பட்ட பேரமைதி!

நவக்கிரஹங்களுக்கான சன்னிதியும் உள்ளது. வலம் வந்து, கிழக்குப் பிராகாரத்தில் துவஜஸ்தம்பத்தை அடைகிறோம். அதன் அடிப் பாகத்திலேயே பொருத்தமாக பாலதண்டாயுதபாணியின் உருவமும், வேல், வினாயகர், பட்டீசர் ஆகிய உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. கொடிமரத்தை யொட்டி மயில் வாகனம் இருக்கிறது. வண்ண ஓவியங்களால் சுவர்கள் நிறைக்கப்பட்ட மகா மண்டபத்தைத் தாண்டி, அர்த்த மண்டபத்தை அடைகிறோம்.

கருவறையில் 'முத்துக் குமரன்' என்ற கொஞ்சுதமிழ்ப் பெயருடன் ஷண்முகக் கடவுள் ஒரு முகமும் இரு கரங்களுமான தோற்றத்தில் காட்சி தருகிறான்.

வலது கையில் சிறியதாக ஒரு தண்டம். இடது கை அருள் பாலிக்கும் முத்திரையில் இருக்கிறது. முகத்தைப் பார்த்ததுமே மனம் இளகிக் கனிந்து விடுகிறது. அப்படியொரு குழந்தைத்தனமான அழகு இந்த பாலக முருகன்!

சுப்ரமண்ய கவிராயர் என்பவர் கொஞ்சிக் கொஞ்சி குழந்தை முருகனைப் பாடியது ஞாபகம் வருகிறது:

அருகிருக்கும் பரிநடத்தும் அரசன்
முத்தந்தருகவே
அரைவடக் கிண்கிணி ஒலிக்கும்
அழகன் முத்தந்தருகவே
ஒரு கிரிக்கும் அங்கு அயில் விடுக்கும்
உசிதன் முத்தந்தருகவே
உபய பத்மம் தரும் எனக்கும் ஒருவன்
முத்தந்தருகவே
திருக்கடப்பந் தொடைதரிக்கும் சரண்
முத்தந்தருகவே
தமிழ்உமைக்கும் சரநதிக்கும் தனயன்
முத்தந்தருகவே
குருகிரிக்கும் குறமயிற்கும் குரிசில்
முத்தந்தருகவே
குறைவறக் குன்றையில் இருக்கும்
குமரன் முத்தந்தருகவே

மயிலை வாகனமாகக் கொண்ட மன்னவன், இடையிலே மணிச் சதங்கை அணிந்த பாலகன் என்று தோற்றப் பொலிவையும் கிரௌஞ்சகிரியை வேலால் பிளந்த வீரசாகசத்தையும், கங்கைக்கும் உமைக்கும் மகனாய்ப் பிறந்த அவதாரச் சிறப்பையும் குருகிரியாகிற சுவாமி மலையிலும் குறவள்ளியின் இதயக் கமலத்திலும் தலைவனாய் வீற்ற சிறப்பையும் சொல்லி, அப்படிப்பட்டவன் தனது இரு திருவடிகளையும் நாம் வணங்கும்படி சௌலப்யத்துடன் காட்சிதருகிறானே என வியக்கும் பாடல் – வியப்பு முற்றுப்

• முன் மண்டபம்





கருவறை விமானத்தில் கவனித்துப் பார்த்தால், வள்ளி – தெய்வானை சமேதனான மயில் வாகனன் ஷண்முகக் கடவுளாகக் காட்சி தருவது தெரியும்.

ஆரம்ப நாட்களில் இந்தக் கோயில் முருகன் ராஜ கம்பீர அலங்காரனாக மட்டுமே இருந்தான். பின்னர்தான் யோக மூர்த்தியாக – தண்டாயுதபாணியாகவும் ஒரு தோற்றம் தந்து மகிழ்ந்தார்கள் பக்தர்கள்.

மூன்று கால பூஜையும் விழாக்களும் குறைவின்றி நடைபெறுகின்றன. அருகேயுள்ள வெள்ளாளம்பாளையம் என்ற கிராமத்து மக்கள் அனைத்து விழாக்களிலும் பங்கேற்கும் பேறு பெற்றவர்கள் என அறிகிறோம். அவர்களைப் போல் அருகிருந்து மகிழும் பாக்கியம் நமக்கில்லாவிட்டாலும் இந்த பாலமுருகனை நம் உள்ளங்களிலே சிறை வைத்துச் சுமக்கும் இன்பத்தை யார்தான் தடை செய்ய முடியும்? அந்த வேலையையும் நமக்குவெகு சுலபமாக்கி விடும் உருவப் பொலிவு இந்தப் பவள மலை முருகனுடையது!

பெற்று வாத்ஸல்யத்துக்கு இடங்கொடுத்துவிட, கவிஞர் குமரனைக் குழந்தையாக்கி உரிமையோடு கொஞ்சித் தீர்க்கிறார்!

பவளமலை முருகனைப் பார்க்கப் பார்க்க நமக்கும் அப்படிப்பட்ட வாத்ஸல்யம் சுரக்கிறது! நமக்கே இப்படியிருக்கிறது என்றால், பெற்ற தாய் தகப்பனுக்கு எப்படியிருக்கும்! தென் பிராகாரத்தில் கைலாச நாதராகவும் பெரிய நாயகியாகவும் அமர்ந்திருக்கும் அந்தத் தெய்வப் பெற்றோர் பூரிப்பில் திளைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தண்ணீரில் கண்டம்!

"சிறு வயதில் கிணறோ, குளமோ, கடலோ, தடாகமோ எங்கு தண்ணீரைக் கண்டாலும் அது என்னை வா, வா என்று அழைக்கும். எனது அப்பா ஒரு ஜோதிடர். அவர் எனக்குத் தண்ணீரில் கண்டம் இருக்கிறது என்றார். அது எந்தத் தண்ணீரோ?! (சிரிப்பு). அப்பா சொன்னதாலோ என்னவோ எனக்குத் தண்ணீரைக் கண்டாலே ஓர் ஆர்வம். ஒருமுறை நான் குளத்தில் விழுந்துவிட, நம்ம கதி அவ்வளவுதான் என்று நீரில் மூழ்கிய நேரத்தில், தன் தாடியிலிருந்து நீர் சொட்டச் சொட்ட ஒரு சாமியார் என்னைத் தூக்கி வந்தார். அப்போதிலிருந்து அவரோடு எனக்கு நட்பு ஏற்பட்டது. சாமியாராகும் எண்ணமும் இருந்தது."



- சென்னையில் நடந்த 'காவ்யா வட்டம்' துவக்க விழாவில் ஜெயகாந்தன்.

காமராஜ்: சில

திருப்பூர் முக்கோணப் பூங்கா எதிரே, ராயபுரம் கிருஷ்ணர் கோயில் மைதானத்தில் பெருந்தலைவர் காமராஜ் பேசப் போகிறார். நான் அப்போது சிக்கண்ணா கல்லூரி மாணவன். செய்தி கிடைத்ததும் மைதானத்துக்குப் பறந்தேன். தேர்தலையொட்டிப் பேச வந்திருந்தார் அவர். பின்னாளில் அவர் அணியின் 'பிரசார பீரங்கி' எனச் சொல்லப்பட்ட நா.பா.விடம் பணியில் சேர்ந்து, அதன் மூலம் அவரை நெருக்கமாகவே சந்திக்கப் போகிறேன் என்பது அப்போது எனக்குத் தெரியாது.

கூட்டம் அலைமோதியது. காமராஜுக்கு முன்பாக குமரி அனந்தன் பேசினார். ஏற்கெனவே முன்னொரு முறை கல்லூரி முத்தமிழ் மன்றத்திற்காக குமரி அனந்தனைப் பேசக் கூப்பிட்டிருந்தோம். சிக்கண்ணா கல்லூரி அரங்கிற்குக் குமரன் கூடம் என்று பெயர். 'குமரன் கூடத்தில் இந்தக் குமரி பேசுவது பொருத்தம்தானே?' என்று பேச ஆரம்பித்து மாணவர்களைக் கவர்ந்தவர். கண்ணை மூடிக் கொண்டு கேட்டால் அவர் பேச்சு, சிவாஜி கணேசன் பேச்சைப் போலவே தோன்றும்.

தெளிவான ஏற்ற இறக்கங்களுடன், கம்பீரமான குரலில் காமராஜ் பற்றி மேடையில் புகழ்ந்து கொண்டிருந்தார். 'ஏழைகள் இல்லந்தோறும் தேடிவரும் கால்கள் எவர் கால்கள்? அவை பெருந்தலைவர் கால்கள்! ஏழைகள் துயரைப் பார்த்துக் கண்ணீர் விடும் கண்கள் எவர் கண்கள்? அவை பெருந்தலைவர் கண்கள்!' என்று பாதாதி கேசமாக சொக்கவைக்கும் தமிழில் வர்ணனைகளை அடுக்கிக் கொண்டிருந்தார். புகழ் மொழிகளைக் காமராஜ் ஒரு போதும் விரும்பியதில்லை. 'சும்மா இருங்கண்ணேன்' என்று உரத்து ஒரு குரல் கொடுத்தார். அவ்வளவுதான். அதையே கட்டளையாக ஏற்று 'நன்றி' என்று முடித்துக் கொண்டு, குமரி அனந்தன் சடக்கென்று அமர்ந்துவிட்டார். கூட்டம் முழு அமைதியில் திளைத்துக் கொண்டிருந்தது.

காமராஜ் பேச எழுந்தார். நல்ல உயரம். கறுப்பு நிறம். கண்களில் இனந்தெரியாத பிரகாசம். முழங்கால் வரை நீண்ட ராஜலட்சணமான கைகள். கிராமியப் பேச்சு. 'ஸ்தாபன காங்கிரசுக்கு வோட்டுப் போடுங்கள்' என்று அவர் ஒரு போதும் கேட்கவில்லை. இந்தக் கட்சியின் அறிக்கை, இவற்றையெல்லாம் வாக்குறுதியாகத் தருகிறது. எதிர்க்கட்சிகளும் வேறு சிலவற்றைச் சொல்கின்றன. மக்கள் சீர்தூக்கிப் பார்த்து, தங்களுக்கு நல்ல கட்சி என்று தோன்றும் கட்சிக்கு மனச்சாட்சிப்படி வாக்களிக்க வேண்டும். இப்படிப் பேசிவிட்டுப் புறப்பட்டார்.



அடுக்குமொழி இல்லை. ஆரவாரம் இல்லை. நகைச்சுவை இல்லை. இலக்கணத் தமிழைக்கூட அவர் பயன்படுத்தவில்லை. ஆனால் நெஞ்சைத் தொடும் பனியன்களைத் தயாரிக்கும் திருப்பூர் நகர மக்கள் அனைவரின் நெஞ்சைத் தொட்ட பேச்சு அது. காரணம்

சுவடுகள் : 16

நினைவலைகள்...

திருப்பூர் கிருஷ்ணன்

அவர் பேச்சில் சத்தியம் இருந்தது. நான் உங்களில் ஒருவன் என்கிற தொனி இருந்தது. உதட்டிலிருந்து பேசாமல் மனத்திலிருந்து பேசினார் அவர். அன்று முதல் நான் காமராஜின் ரசிகனானேன்.

சில ஆண்டுகள் சென்றன. காமராஜ் பிறந்த நாளையொட்டி, கல்லூரி மாணவர்களுக்காக ஒரு கட்டுரைப் போட்டி நடைபெற்றது. 'தேசபக்தி' என்று தலைப்பு. எனக்கு முதல் பரிசு. 'இருக்க இடமும் வரும், எல்லோருக்கும் வாழ்வு வரும்' என்று காமராஜ் பற்றி வாணி ஜயராம் பாடிய இசைத்தட்டு.

மேலும் சில ஆண்டுகள் ஓடின. நான் சென்னை வந்தேன். ஒருமுறை காமராஜைப் பார்க்க நா.பா. சென்றபோது நானும் உடன் சென்றேன். 'தம்பியும் எழுத்தாளரா?' என்று கேட்டார் காமராஜ்.

"ஆமாம். என்னிடம் அன்புடையவர்."

"பாக்க உங்க தம்பி மாதிரிதான் இருக்காரு. தம்பீ, இவரு மாதிரி நாட்டுக்கு நல்லது செய்யற சங்கதிகளைத்தான் எழுதணும். தெரியுதா?"



• குமரி அனந்தன்

காமராஜுக்கு மிக அருகில் நான் அமர்ந்திருந்தேன். அன்புமயமாக என் கரங்களைப் பற்றிக் கொண்டு ஒளிவீசும் விழிகளால் கூர்மையாக என்னைப் பார்த்தவாறு சொன்னார் அவர். நயன தீட்சையும் ஸ்பரிச தீட்சையும் ஒருங்கே நடந்த மாதிரி எனக்கு இனந்தெரியாத பரவசம். ஆன்மிகத் துறவிகள் தான் துறவிகளா! தேசத்திற்காக சகலத்தையும் துறந்த இவர் தேசத்துறவி அல்லவோ! சொந்தத் தாய்க்குக் கூடத் தன் அரசியல் அந்தஸ்து காரணமாக ஒரு சலுகையும் பெற்றுக் கொள்ளாத மாமனிதர். சொத்தே சேர்க்காத அரசியல்வாதி.

மேலும் சில ஆண்டுகள் உருண்டன. காமராஜ் இருந்தவரை சோ, நா.பா. ஜெயகாந்தன் ஆகியோருக்கு யாரை ஆதரிப்பது என்பதில் குழப்பமே ஏற்படவில்லை. அவர்கள் மூவரும் காமராஜ் அணியில் சேர்ந்து மேடைகளில் பெருந்தலைவருக்காக ஓங்கிக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். நான் காமராஜ் பேச்சைக் கேட்கவும் காமராஜ் பற்றிப் பேசுவதைக் கேட்கவும் என, ராமன் புகழ் கேட்க விரும்பும் அனுமன் மாதிரி, தொடர்ந்து ஸ்தாபன காங்கிரஸ் கூட்டங்களுக்குச் செல்லலானேன்.

காமராஜரால் பெரிதும் கவரப்பட்ட நா.பா. விறுவிறுவென்று ஸ்தாபன காங்கிரசின் ஆஸ்தான பேச்சாளராக மாறினார். தொடர்ந்து வெளியூர்க் கூட்டங்கள்.

ஒருமுறை என்னிடம் அந்தரங்கமாகப் பேசும்போது நா.பா. சொன்னார் :

"என்னுடைய பொருளாதாரப் பிரச்னைகள் பிறர் அதிகம் அறியாதவை. ஐந்து குழந்தைகளைக் கொண்ட குடும்பம். நான் ஒருவன்தான் சம்பாதிக்கும் நபர். அரசியல் மேடைகளில் பேசுவதன் மூலம் கிடைக்கும் வருவாய் ஓரளவு பிரச்னையைச் சமாளிக்க உதவுகிறது. என்றாலும் தீபம் இதழுக்கும் அளவுகடந்து செலவாகிறது. என்ன செய்வது! அரசியல் பேச்சுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக சன்மானம் கிடைத்தால் நன்றாயிருக்கும். ஆனால் பெருந்தலைவரிடம் இதை நேரில் எப்படிச் சொல்வது!"

நான் சற்றே யோசித்தபின் தயக்கத்தோடு நா.பா.விடம் என் ஆலோசனையைச் சொன்னேன்.

"காமராஜுக்கும் உங்களுக்கும் ஒரு சேர நெருக்கமான ஒரு நண்பர் மூலமாக இந்த விஷயத்தை அவர் காதுக்கு எட்டச் செய்யலாமே!"

நா.பா. சற்று நேரம் பேசாமலிருந்தார். "அதுவும் சரிதான்" என்று பின் ஒப்புக் கொண்டார். நானும் நா.பா.வுமாக காரில் அந்த நண்பர் வீட்டுக்குப் போனோம். நான் காரிலேயே காத்திருந்தேன். அந்த நண்பர்...

(தொடரும்)

யார் கண் பட்டதோ? தெரியவில்லை. மும்பையை ஒட்டியுள்ள கல்யாணில் திடீரென்று கலவரம் வெடித்திருக்கிறது. மைனாரிட்டி இனத்தைச் சேர்ந்த ரிக்ஷாக்காரருக்கும், மெஜாரிட்டி இனத்தைச் சார்ந்த பயணி ஒருவருக்குமிடையே எழுந்த வாக்குவாதத்தில் ஆரம்பித்தது... அவ்வளவுதான்; அவர்கள் இவர்களையும், இவர்கள் அவர்களின் குடியிருப்புகள், கடைகள் முதலியவற்றையும், கல்லெறிந்து, பெட்ரோல் ஊற்றிக் கொளுத்துதல், வாகனங்களை எரிய விடுதல் போன்ற வழக்கமான கலாட்டாக்களுடன், இப்போது, ஹாஸ்பிடல்களைத் தாக்குதல் என்ற புதிய அக்கிரமத்திலும் ஈடுபடுகிறார்கள். அஷோக் வாலுஞ்ச் என்ற சிவசேனைக்காரரை வீட்டிலிருந்து வெளியே இழுத்து அடித்தே கொன்றிருக்கிறார்கள்.



• கல்யாண் கலவரத்தில்...

பார்த்துக் கொண்டிருந்த வயதான சித்தியும் மண்டையைப் போட்டிருக்கிறார். உடனே மாபெரும் ஊர்வலம், மோர்ச்சா இத்யாதிகள் தொடர்ந்தன. எல்லாவற்றுக்கும் காரணம் NCP தலைவர் இக்பால் ஷேக்தான் என்கிறார்கள். SRP, RAF அது இது என்று, A யிலிருந்து Z வரையிலுள்ள வெவ்வேறு எழுத்துக்களின் இணைப்புகளாய் போலீஸ் குவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இடை இடையே, இங்கே கலவரம், அங்கே கல்வீச்சு, இங்கே குண்டுவெடிப்பு அங்கே கதவடைப்பு என்று ஒரே மாரடைப்பு வதந்திகள். கலவரங்கள், வதந்திகள், இரண்டுமே தொற்று நோய்தான்!


நோய் தீர, ஷீர்டிக்குச் சென்று, சாயிபாபாவை வழிபடுவது வழக்கம். அதையொட்டி, சிவசேனைக்காரர்கள் தங்கள் மாநிலப் பேரவையை இம்முறை ஷீர்டியில் கூட்டினார்கள். ஆம்! தங்கள் தொண்டர்களைப் பிடித்திருக்கும் 'பதவி ஆசை' என்ற பெரு நோயை விரட்டத்தான்! கட்சியில் நுழைந்த மறுநிமிடமே 'ஷாகா பிரமுக்'காகி, கார்ப்பொரேட்டர் எம்.எல்.ஏ, மந்திரி, எம்.பி.... என்று கனாக்காண ஆரம்பித்து விடும் இன்றைய தொண்டர்களிடம், அந்தக் காலத்துத் தன்னலமற்ற தியாகச் செம்மல்களைப் பற்றிக் கதையெல்லாம் சொல்லிப் பார்த்தார் தாக்கரே. 1970ல் ஒரு சிவசேனைத் தலைவர், தீபாவளிக்காகத் தன்னிடம் கடன் கேட்டதையும், தான் உடனே 300 ரூபாயை எடுத்து, "ஸ்வீட்டும் பட்டாசும் குழந்தைகளுக்கு வாங்கிக் கொடு; பணத்தைத் திருப்பித்தர வேண்டாம்" என்று சொன்னதையும் நினைவுகூர்ந்தார். ஆனால் இன்று, 'மெர்ஸிடஸில்' வந்திறங்கும் தலைவர் கூட்டம் அவரையே பயமுறுத்துவதுடன் உட்கட்சிப் பூசல்களையும் கிளப்பி விட்டு விடுகிறது.

டில்லியிலுள்ள சிவசேனை எம்.பி. சுரேஷ் பிரபு, 'தாக்கரேயுடன் ஒத்துக் கொள்ளாததால் ராஜினாமாச் செய்து விட்டார்' என்று வதந்தியைக் கிளப்பி, சிவசேனை கூடாரத்தையே ஆட்டம் காண வைத்து விட்டார்கள். 'அதெல்லாம் ஒன்றுமில்லை' என்று கசமுசாக்களை அடக்குவதற்குள் போதுமென்றாகி விட்டது! 'பவர்' வேண்டும் என்பதற்காக யூனியன் 'பவர்' மினிஸ்டரையே பாடாய்ப்படுத்துகிறார்களே!

மும்பை மசாலா :



பாடாயத்தான் படுத்துகிறார்கள் இந்த முனிசிபாலிடிகாரர்கள்; இந்த வெயிலில் வெந்நீரைக் குடிக்கச் சொல்கிறார்களே? மும்பைக்குத் தினமும் 3000 மிலியன் லிட்டர் தண்ணீரும், அதைச் சுத்திகரிக்க ஆறு டன் க்ளோரினும் தேவைப்படுகிறது. டன் 7000 ரூ என்ற விலையில் குளோரினை அகமதாபாத் கம்பெனி ஒன்று சப்ளை செய்து கொண்டிருந்தது; கலவரங்களால் சப்ளை நின்று போக, ஓபன் மார்க்கெட்டில், டன் 13,000 ரூ என்ற விலையில் 3 டன்தான் வாங்க முடிகிறதாம். அதனால் எல்லோரையும் வெந்நீராய்க் காய்ச்சிக் குடியுங்கள் என்கிறார்கள். ஹூம்... குளோரின் அருமை வேனிலில்!



• பெரிய சினிமா, ஸ்டார்!

வேனிலில் குளுகுளு அறிவிப்பு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைத்து விட்டார்களோ என்னவோ... வெஸ்டர்ன் ரயில்வேக்காரர்கள், சர்ச்கேட் – விராருக்கிடையே ஒரு 17 லிட்டர் ஏஸி கம்பார்ட்மெண்ட்டை அறிமுகப்படுத்தப் போவதாகச் சொல்கிறார்கள். உள்ளே குடிநீர் வசதியும் உண்டாம்! மாதாந்திர சீசன் டிக்கெட் ரூ. 4000 - ரூ. 6000 இருக்குமாம். கார் வைத்துக் கொண்டிருப்பவர்கள், ஏ.ஸி. ரயிலை நாடுவார்கள் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் வெகு நாட்களாக; இப்போதுதான் பிராப்தித்திருக்கிறது "ஸ்ரீதேவி" கடாட்சம்! 'டீ.வி. சேனல் ஒவ்வொன்றும் ஸ்ரீதேவிக்காக தவம் கிடக்கையில், எங்களுக்கு அந்த அதிர்ஷ்டம் அடித்திருக்கிறதே'' என்று குதூகலிக்கிறார் சஹாரா டீ.வியின் க்ரியேட்டிவ் கன்சல்டன்ட் சந்திர பேரட். Lucille Ball-சீரியல் நினைவிருக்கிறதா? அதன்

லூஸியாக ஸ்ரீதேவி!



• சின்ன ஸ்கிரீன் ஸ்டார்!

தேசிய வடிவில் லூஸியாக நடிக்கப் போகிறாராம் ஸ்ரீதேவி! சின்ன வயதிலேயே பெரிய ஸ்கிரீனில் நடித்தவர்; இப்போது பெரிய வயதில் சின்ன ஸ்க்ரீனில் நடிக்கப் போகிறார். ஸ்க்ரீன் அளவு பற்றி என்ன கவலை? ஸ்க்ரீன் இமேஜ்தானே முக்கியம்?

முக்கியமான விஷயம் இன்னொன்று இருக்குங்களே... நம்ம வினோத் காம்ப்ளி, சினிமா ஸ்டார் ஆகப் போறாருங்கோ! ப்ரீத்தி ஜங்கியான்தான் ஹீரோயினி; அண்டர்வர்ல்ட் கதை; படத்துப் பேரு "அனர்த்''..... அனர்த்தமாக்கிடமாட்டாரே?

– ஜெயஸ்ரீ ராஜ்

ரிமோட்

விஜய்யின் 'மகிழ்ச்சிக் கவியரங் கத்தில் கவிதை வாசித்தவர்களைக் கவிதையாலேயே அறிமுகம் செய்தார் வைரமுத்து. இது அவருக்குப் பழகிப் போன கலை. He was in his element.

'எங்களுக்கெல்லாம் தமிழ் - தாய். உனக்கோ தமிழ் - தந்தை... நாங்களெல் லாம் நடை பழக நடை வண்டிக்கே வசதியில்லை. நீயோ தமிழின் கட்டை விரல் பற்றியே கற்றுக் கொண்டாய்' என்று கூறிக் கனிமொழியை வரவேற்றார்.

மணமாகு முன்பு இருந்த
மகிழ்ச்சி மணமான
பின்னர் காணாமற்
போய்விடுகிறது


• கனிமொழி

கனிமொழிக்கு என்ன

என்பது கனிமொழியின் கவிதையின் சாரம். (கருத்திலும் குரலிலும் ஒரு மெல்லிய துயரம் இழையோடியது ஏன்?)

மகன் கபிலன் வைரமுத்து 'இளமையில்' என்ற தலைப்பில் பாட வந்தபோது, 'இவன் எங்கள் ஆசையில் விளைந்த இரண்டாம் வித்து, மீசையில்லாத வைரமுத்து' என்று அறிமுகப்படுத்தி, 'உன்னையும் கவிஞனாய்ப் பார்க்க நினைக்கிறேன், உன்னிடம் மட்டுமே தோற்க நினைக்கிறேன்' என்று தனயனை உற் சாகப்படுத்தினார். If you can give your son only one gift let it be enthusiasm என்று யாரோ சொன்னார்கள். இந்தச் சந்தர்ப்பத்துக்கு ரொம்ப பொருத்தம்.

பெரியார்தாசன் நடத்திய 'தமிழா தமிழா' போட்டியில் (விஜய்) நாலு ஜோடிகள் கலந்து கொண்டார்கள். வரதராஜனும் பாத்திமாபாபுவும் (எடையைக் கவனிப்பது நலம்) முதல் பரிசைத் தட்டிச் சென்றதில் ஆச்சரியமில்லை. சொல்லப் போனால் இவர்களைச் சேர்த்ததே தப்பு. மற்றவர்களைவிடப் பொது அறிவில் அதிக மார்க் வாங்கக்கூடிய வர்களாகையால் It became an uneven contest.


• பெரியார்தாசன்

பங்கேற்ற சிலருக்குத் தாய்மொழி தமிழ் அல்ல. எனவே சைகை மூலம் தமிழ்ப் பழமொழியைக் கண்டுபிடிக்கச் சொன்னபோது திணறிப் போனார்கள் பாவம். 'அறிஞர் அண்ணா'வை அடையாளம் காட்ட ஒரு நடிகை மீசையை முறுக்கு முறுக்கிச் சைகை செய்தார். அவருடைய பார்ட்னர் தலையில் அடித்துக்கொண்டது நியாயமே.

ஆனால் ஒவ்வொரு ஜோடியும் சரியான விடையைக் கண்டுபிடித்தபோது பரஸ்பரம் கைகுலுக்கிக் கொண்டதும், தப்பாகப் போன போது ஒருவரையொருவர் குற்றம் சாட்டி முறைத்துக்கொண்டதும் குதூகலமான நிமிடங் கள்தான்.

காதலில் வெற்றி, யுத்தத்தில் ஜெயம், பிஸினஸில் லாபம் - இதெல்லாம் பெரிய பெரிய சந்தோஷங்கள். ஆனால் அன்றாட வாழ்க்கையில் கிடைக்கும் சின்னச் சின்னச் சந்தோஷங்கள்தான் அர்த்தமுள்ளவை; ஆழ முள்ளவை. அவற்றை மணிரத்னம் மாதிரி காட்டுகிறவர் யாருமில்லை. Pleasures are sweet when they lie about our feet என்று கவிஞர் வேர்ட்ஸ்வொர்த் எழுதியதை உணர்ந் திருப்பவர்.

பலமுறை பார்த்துவிட்ட போதி லும், 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் அந்தச் சிறுமி கீர்த்தனா ஒரு மஞ்சள் குடையைத் தூக்கிக் கொண்டு வளைந்து ஓட்டமாய் ஓட, சிம்ரன் அவளைத் துரத்தித் துரத்திப் பிடிப் பதும், தண்ணீரில் மூங்கி எழுந்து

சுழல்களைச் சிருஷ்டிப்பதும் என்ன நிஜமான சந்தோஷங்கள்! 'ஒரு தெய்வம் தந்த பூவே' பாட்டு அந்தக் காட்சியை என்னமாய் உயர்த்திப் பிடிக்கிறது! காமெராக்காரரின் கையைக் குலுக்கி, ரத்னத்தின் கையை முத்தமிடலாம்.

'சிவாஜியைப் போல டயலாக் பேச யாராலும் முடியும்; அவரைப் போல நடக்க யாராலும் முடியும்; ஆக்ஷன் கொடுக்க யாராலும் முடியும்' என்றார் மேஜர் சுந்தரராஜன் நையாண்டி தர்பாரில். ஆனால்

துயரம்?



அவருடைய கண்களின் சக்தி எவருக்கும் வராது! என்றவர், அதை விளக்கினார். 'சோகமான கட்டங்களில் சிவாஜியின் கண்களில் கண்ணீர் அப்படியே ததும்பி நிற்கும். மற்றவர்களானால், ஒன்று வெளியே கொட்டி விடும். அல்லது உள்ளே போய்விடும். ஆனால் சிவாஜியின் ஆணைக்குக் கட்டுப் பட்டது அவருடைய கண்ணீர். வெளியே வா என்று சொன்னால்தான் வெளியே வரும். இல்லையேல், குளத்தில் மிதக்கிற மாதிரி விழிகள் கண்ணீரில் பளபளக்கும். அப்படிச் செய்ய யாராலும் முடியாது' என்றார் மேஜர்.

சிவாஜி was the monarch of all he surveyed.

வினோத்

When in doubt mumble; When in difficulty delegate என்று அரசியல் குருநாதர் ஒருவர் தன் சீடனுக்குச் சொன்னாராம். நரேந்திரமோடி அதைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார். எந்தச் செய்திப் படத்தில் வேண்டுமானாலும் பாருங்கள். குரலை உயர்த்துவதில்லை இந்தக் குஜராத் முதல்வர். எப்போதும் முணுமுணுதான். எட்டு திசையிலிருந்தும் குற்றச்சாட்டு சீறி வருகிறது. ஆனால் எல்லாப் பொறுப்பையும் வாஜ்பாய் தலையிலும் அத்வானி தலையிலும் கட்டிவிட்டு, இவர் பாட்டுக்கு ஹாயாகப் போய்க்கொண்டிருக்கிறார்.

கடினம் நிறைந்த முகத்தில் எப்போதேனும் ஒரு மர்மமான புன்சிரிப்புப் பூக்கிறது. அதுகூடப் பயம் ஏற்படுத்துகிறதே தவிர தைரியம் தரவில்லை.

சைதாப்பேட்டை, வாணியம்பாடி, அச்சிறுப்பாக்கம் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலுக்குத் தேதி அறிவிக்கப்பட்டு விட்டது. இனி கோடை வெயிலுடன் போட்டி போட்டுக் கொண்டு அரசியல் வெப்பமும் தமிழக மக்களைச் சுட்டெரிக்கும்.



சென்ற தேர்தலில் தி.மு.க. சார்பில் சைதையில் போட்டியிட்ட வை. பெருமாள், தம்மை எதிர்த்து அ.தி.

"மூன்று தொகுதிகள்! மோதல் காட்சிகள்!"

மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட பா.ம.க. வேட்பாளர் சி.ஆர். பாஸ்கரனை விட சுமார் 4000 வாக்குகளை மட்டுமே அதிகம் பெற்று வெற்றி பெற்றார். இப்போது பா.ம.கவும் தி.மு.க. அணியில்.

"மேலோட்டமாகப் பார்க்கும்போது தி.மு.கவுக்குச் சுலபமான வெற்றி என்றே சொல்லத் தோன்றும். ஆனால் அத்துணை எளிதாக கிடைக்காது வெற்றி. ஏற்கெனவே மேயர் மற்றும் கவுன்சிலர் தேர்தல்களில் தங்களது 'யுக்திகளை' செயல்படுத்திய கராத்தே தியாகராஜன் போன்ற அ.தி.மு.க. பிரமுகர்கள் அவ்வளவு சுலபத்தில் தி.மு.கவை வெற்றி பெற விடமாட்டார்கள். எனவே தி.மு.கவினர் 'எதற்கும்' தயாராக இருந்தால்தான் வெற்றிக் கனியை பறிக்க முடியும்'' என்கிறார் ஒரு தி.மு.க. பிரமுகர். தென் சென்னை மாவட்ட அ.தி.மு.கவில் உள்ள பூசல் காரணமாக ஆளும் கட்சியில் கணக்கம் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. ராதாரவி, சைதை துரைசாமி என்று ஆளும் கட்சி சார்பாகப் பெயர்கள் அடிபட்டாலும் தினகரனின் மனைவி அனு தினகரன் போட்டியிட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை. அனு போட்டியிட்டால் அவர் வெற்றியடைய சகல முயற்சிகளும் கையாளப்படும் என்பது வெளிப்படை.


வாணியம்பாடியைப் பொறுத்தவரை இரு தேசிய கட்சிகளும் மாநிலத்தில் உள்ள கழகங்களுடன் தங்கள் அணுகுமுறை எப்படி இருக்கப் போகிறது என்பதை வெளிப்படுத்த வேண்டியிருக்கும். மறைந்த லத்தீப், தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட ஆரூணை 12000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். தமிழ்ப் பேசும் முஸ்லீமான ஆரூண், 'உருது பேசும் முஸ்லீம்கள் காலை வாரிவிட்டதாகச்' சொன்னார்.



இந்த முறை தி.மு.க. கட்டாயம் களத்தில் இறங்கும். அ.தி.மு.கவும் போட்டியிட விரும்புகிறது. மறைந்த முகமது ஆசிப்பின் மனைவி, பாதர்சயீத், ஷேக் டாவுட் போன்றவர்கள் பெயர் அடிபடுகிறது. காங்கிரஸ் களத்தில் இறங்கினால் இரு கழகங்களின் நிலை என்னவாக இருக்கும் என்பது சற்று குழப்பமாகத்தான் இருக்கிறது.

தி.மு.க. சார்பில் முகமது சகி போட்டியிட விரும்பினாலும் முஸ்லீம் அல்லாத ஒருவரை நிறுத்தி சகல

தரப்பினர் ஆதரவைப் பெற்றால் என்ன என்றும் கழகத்தில் கருதுகிறார்கள். மத்தியில் பா.ஜ.கவுடன் இருப்பதால் கையைப் பின்னால் வைத்து, களத்தில் இறங்கும் நிலைதான் கழகத்துக்கு. அயோத்தி, குஜராத் போன்ற எரியும் பிரச்னைகளில் வெறுப்பாக இருக்கும் இஸ்லாமிய சமூகம், பா.ஜ.கவுடன் நட்பு காட்டும் எந்தக் கட்சியையும் ஒதுக்கும் என்று எதிர்பார்க்கலாம்.



நரேந்திரமோடி தொடர்பாக சமீபத்தில் ஜெ. தெரிவித்த கருத்து கூட, வாணியம்பாடி தேர்தலை மனத்தில் வைத்து இஸ்லாமியர்களைக் கவர்வதற்குச் சொன்னதாக இருக்கலாம் என்கிறார்கள்.

அச்சிறுபாக்கத்தில் பா.ம.க.வேட்பாளர், தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட இருக்கிறார். ஆளும் கட்சியுடன் கடும் போட்டி காத்திருக்கிறது. கடந்த ஒரு மாத காலமாகவே பா.ம.க. பிரமுகர்கள் தொகுதியில் கிராமம், கிராமமாகச் சென்று கொடியேற்றி பிரசாரம் செய்து வருகிறார்கள். தி.மு.க. சின்ஸியராக தங்களுக்கு உழைத்தால் ஆளும் கட்சியின் அடாவடிகளையும் மீறி வெற்றி கொள்வோம் என்று சொல்கிறார்கள் பா.ம.க. பிரமுகர்கள்.

இனி ஒன்றரை மாத காலம் மூன்று தொகுதிகளிலும் அரசியல் நெடி மூச்சு முட்டும் காங்கிரஸ், த.மா.கா. இணைவதால் சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி, தி.மு.க. கையை விட்டுப் போகும் வாய்ப்பு இருக்கிறது. எனவே இந்த மூன்று தொகுதிகளில் இரண்டில் தி.மு.க. வெற்றியடைந்தால்தான் அந்தப் பொறுப்பைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

— கௌசி

கல்கி – VBC Jewellery

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி - 8 முடிவு

லகானுக்கு ஆஸ்கர் கிடைக்காததால் நொந்து போயிருக்கும் ஆமீர்கானுக்கு நமது ஆஸ்கர் நாயகன் கமல் ஆறுதலாக ஓர் ஈமெயில் அனுப்பினால் என்ன எழுதுவார் என்று கேட்டிருந்தோம்.

தலா நான்கு கிராம் தங்கம் பெறும் தமாஷ் வாசகங்கள் கீழே:



காதில் பூ சுற்றும் படங்கள்
நடுவில் –
ஆஸ்கரின் இறுதிச் சுற்று
வரை சென்றவனே!
இனி உலகே உன்னைச்
சுற்றும்வரை ஓயாதே!
– மு. ஜரீனா பேகம்,
தஞ்சாவூர்.

லகான் போனா என்ன? சாட்டை நம்ம கையில இருக்குல்ல கவலைப்படாதேய்யா! ஜமாய்ச்சுப்புடலாம்!

– டி. பத்மாதிருஞானம்,
எண். 23, எருத்துக்காரதெரு,
நாகப்பட்டிணம், நாகை மாவட்டம்.

அடுத்த இதழ்

பாண்டிச்சேரி சிறப்பிதழ்



அதிக பக்கங்கள்

சின்னத்திரை சிப்ஸ்!







புதுசா?

விஜய் டி.வியின் 'அபூர்வராகங்கள்' நிகழ்ச்சியில் பங்கேற்ற நான்கு இளம் பாடகர்களுக்கு இப்போது சினிமாவில் பாட வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. 'இந்த நிகழ்ச்சி இவ்வளவு பிரபலமாகும்னு நான் நினைக்கலை' என்கிறார் ஏக சந்தோஷத்தில் இருக்கும் தயாரிப்பாளர் சுபஸ்ரீ தணிகாசலம்.

''இளம் பாடகர்களை, பெரிய பெரிய பாடகர்களோடு சேர்ந்து பாட வைத்தால் அவங்க எவ்வளவு சந்தோஷப்படுவாங்க?'ன்னு நினைச்சோம். அதோட விளைவுதான் இந்த நிகழ்ச்சி. இனி இந்த நிகழ்ச்சியில் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுபவர்களை வச்சு விஜய் டி.வி. ஒரு இசை ஆல்பம் பண்ணலாம்னு இருக்கு. இது புதிய முயற்சிதானே'' என்கிறார் சுபஸ்ரீ.

'சினிமாவில் பூச்சி!

ஜெயா டி.வியில் 'மூவி நம்பர் ஒன்'னில் காம்பயர் பண்ணும் பூச்சி (செந்தில்குமார்) சினிமாவுக்குப் பறக்க இருக்கிறது. இரண்டு மூன்று படங்களில் புக் ஆகியிருக்கிறதாம். 'காமெடிதான் என்னோட இடம். நீங்க வேணா பாருங்க அப்பு, கலக்குறேனா, இல்லையான்னு?'' என்று சொல்லும் பூச்சி, சட்டம் படித்திருக்கிறது! சினிமாவுல நடிக்கப் போறீங்க; யாரையும் கடிக்காம இருந்தா சரி!

பின்னணி அழைப்பு!

சிம்ரன், ஜோதிகா, லைலா ஆகியோரின் குரல்கள் ஒன்று போல் இருப்பதற்குக் காரணம் சவீதா. இவரது பின்னணியில் அவர்களின் தமிழ் தேனாகிறது. இதை மாற்ற வேண்டும் என்பதற்காகவே, கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் சிம்ரனுக்கு, தீபா வெங்கட்டை குரல் கொடுக்க வைத்தார்களாம். நடிப்போடு குரல் கொடுக்கவும் இப்போது தீபா வெங்கட்டுக்கு அழைப்பு வருகிறதாம்.

- அப்பு

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / Chief PMG-141 / 2002 "
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 " Registered as a Newspaper in Srilanka